பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 2-00 ★ 16 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 26 ஐப்பசி 26 ஸபர் 17 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (11—11—84) இதழ் 270

## ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நடந்த துப்பாக்கி சூட்டு சம்பவத்திற்கு ஆட்சேபம் தெரிவித்து இம்மாதம் 13ம் தேதி ஒருமணிநேரம் அடையாள வேலைநிறுத்தம் செய்ய, யாழ். ஆஸ்பத்திரி ஊழியர் தீர்மானித்துள்ளனர்.

மற்றும், அரசாங்க கூட்டுத்தாபன கூட்டுறவு சங்க ஊழியர்களையும், இதில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க)

# யாழ். குடாநாட்டை இன்று சூறவளி தாக்கலாம்

## அவதான நிலையம் எச்சரிக்கை

(கொழும்பு)

**யாழ்ப்பாண குடாநாட்டில் இன்று சூறவளி அபாயம் உள்ளதாக எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. மணித்தியாலத்துக்கு 50 மைல் முதல் 100 மைல் வேகத்தில் வீசக்கூடுமென்றும், மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.**

யாழ் குடா நாட்டுக்குள்சூறுவளி நுழைந்துஇன்று நண்பகல் தாக்கலாமென்று கொழும்பு வானிலைஅவதான நிலையம்நேற்றுத் தெரிவித்தது. கிழக்கிலும் இந்த அபாயம் இருந்தபோதிலும், யாழ். குடாநாடும் குறிப்பாக கரையோரப் பகுதிகளும் சூறுவளி நகர்ந்து செல்லும் பகுதிகளாக இருக்குமென்றும் தெரிவித்தது.

வங்காளவிரிகுடாவின்தென் பகுதியில் பவனஅமுக்கம் ஏற்பட்டிருக்கிறது. நண்பகல்அளவில் நேற்று முல்லைத்தீவுக்குக் கிழக்கே 250 மைல்தொலைவில் இது நிலைகொண்டிருந்தது. இன்று நண்பகல் சூறுவளி உக்கிரமடைந்து வடக்குக் கரையோரப்பகுதிக்கு நகர்ந்துசெல்லக்கூடும். பிற்பகல் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அதுவீசக் கூடும்.

யாழ் மாவட்ட கரையோரப் பகுதி மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்கும்படி யாழ். அரசாங்க அதிபர் எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளார்,

(16-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் நேற்று பஸ் சேவை இல்லை!

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய போக்குவரத்துச் சபை யாழ் டிப்போ பஸ்கள் நேற்று சேவையில் ஈடுபடவில்லை ஊழியர்கள் இல்லாததனலேயே பஸ்சேவை நடைபெறவில்லை எனக் கூறப்படுகிறது

இச்சம்பவத்தில் வ.போ.ச. சாரதி சரவணமுத்து பலியானர். மற்றும் 3 ஊழியர், காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் இரத்தாக்ஷி வருடம் ஐப்பசி மாதம் 26ம் திகதி (11-11-1984) ஞாயிற்றுக்கிழமை பகல் 9-06 மணி தொடக்கம் 10-36 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறைச்செல்வன்
தி. ஞானசம்பந்தன்
(BSc Eng பொறியியலாளர்
லங்கா சீமெந்து லிமிட்
காங்கேசன்துறை
அவர்களுக்கும்

எமது
புத்திரி
திருநிறைச்செல்வி
கி. மோகனதேவி
அவர்களுக்கும்

வண்ணை வெங்கடேசர் ஆலயத்தில் திருமணம்செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் சமுகம்தந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம்

தங்கள் நல்வரவை நாடும்

[தனிப்பட்ட அழைப்புகள் இல்லை]

திருமதி தியாகராஜா
அமரர் டாக்டர்
ஏ தியாகராஜா
[MA. M. LITT]
அவர்களின் பாரியார்
ஆயிலி, காரைநகர்.

கே. கிருஷ்ணபிள்ளை
பிரபல வர்த்தகர்
'கிருஷ்ணா ரேடர்ஸ்'
23, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

681

## யாழ் நகர்சம்பவம்பற்றி வவனியாவில் லலித்

[வவனியா]

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் மககள் அதிகமாக வாழும் பகுதியில் அமைதியை ஏற்படுத்த விரும்பிய பாதுகாப்பு அதிகாரிகள்குழுவொன்றின்மீது பயங்கரவாதக் கோஷ்டியொன்று தாக்குதலை நடத்தியது பாதுகாப்புப் படையினர் எதிர்த் தாக்குதலை நடத்தியபோது சிலர்ஆபத்தை எதிர்நோக்கவேண்டியிருந்தது. பாதுகாப்புப் படையினரால்

(16ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தின் 'ஜாலியன் வாலாபாக்'

பஞ்சாபில் 1919ல் நடந்த கலவரத்தைக் காரணமாய் வைத்து பிரிட்டிஷ் அரசு அங்கு ராணுவச் சட்டத்தை அமுலாக்கியது. அமிர்தசரசிலுள்ள ஜாலியன் வாலா பாக்கில் அமைதியாகக் கூடியிருந்த மக்களை பிரிட்டிஷ் ராணுவம் ஈனம் இரக்கமின்றி துப்பாக்கியால் சுட்டுத்தள்ளிற்று. அரசாங்கம் காட்டுமிராண்டித்தனமாகச் செயல்பட்டது. இதனை இன்று சினிமாப் பாடமாகக் காட்டுகின்றனர்.

அறுபத்தைந்து வருடங்களுக்குப்பின் முந்தநாள் யாழ்ப்பாணம் பெரியகடை இவ்விதகாட்சியை உலகுக்களித்திருக்கிறது. நாட்டின் சுதந்திர ஆட்சியே இதற்குப் பெறுப்பு.

எவ்வித முன்னறிவித்தலுமின்றி யாழ்ப்பாணப்பட்டணத்துக்கு வந்த மக்கள், பஸ் பிரயாணிகள், சாரதி, நடத்துனர், ஆண், பெண், மாணவமாணவிகள், பலதரப்பட்ட அப்பாவி மக்கள் இலங்கை ராணுவத்தினல் சுட்டுக்கொல்லப்பட்டதும் படுகாயப்பட்டதும் இன்று உலகெங்கிலும் பரவிய துயரச்செய்தி. நாகரிக உலகம் இதற்கு நிவாரணம் காணமுடியுமா?

துப்பாக்கி நாடகத்தில் இது ஒரு உச்சநிலையென்பதால் இந்த வெறியாட்டம் அடங்கும் அல்லது அடக்கப்படும் காலம் கிட்டிவிட்டதென நினைக்க ஆசைப்படுகின்றோம் ஆனல் உண்மை இதற்கு மாறுனல்?

உலகில் வேறெங்காவது எக்காரணம் கொண்டும் அப்பாவி மக்களை அரசின் ராணுவம் சுட்டுக் கொல்லுவதால், போரோ பிரச்னையோ தீர்ந்ததை நாம் கேள்விப்படவில்லை.

இது உள்நாட்டுப்பிரச்னை, இதனை யார் கேட்க முடியுமென்ற அகங்காரம் இன்று அதிகரிப்பதானல் அது அழிவுக்கு முன்வரும் அகங்காரம் என்பதில் ஐயம் ஏதுமில்லை.

## முல்லைத்தீவு பஸ் நிலையத்தில் 25 பேர் கைது!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பஸ் நிலையத்தில் நேற்று நண்பகல் மாணவர், கடற்றொழிலாளர்கள் உட்பட சுமார் 25 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக முகாமிற்குக் கொண்டுசெல்லப்

(16-ம் பக்கப் பார்க்க)

## யப்பான் பிக்கு உண்ணுவிரதத்தை கைவிட்டார்!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்திற்கு அமைதி வேண்டி, மற்றொரு யப்பான் பிக்கு, நேற்று குருநகர் மத்தியூஸ் வீதியில் சிலநாட்களுக்கு முன்னர்யப்பான் பிக்கு ஒருவர் துப்பாக்கிச்சூட்டுக்கு பலியான இடத்தில் சாகும்வரைஉண்ணுவிரதம் ஆரம்பித்தார், ஆரம்பித்த உண்ணுவிரதத்தை மாலையில் கைவிடடார்!

உண்ணுவிரதத்தை கைவிடுமாறு நேற்று பிற்பகல், யாழ், அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு மாணிக்கவாசகர் ஆகியோர் நேரில் வேண்டுகோள் விடுத்தும் அவர் மறுத்துவிட்டார்.

யப்பான் பிக்கு மஸ்கோஸ்கிற்ரூன் உண்ணுவிரதம் இருந்த இடத்தில், அவரை நேற்றுமாலை சந்தித்த போது 'கொலையுண்ட பிக்குவின் அஸ்தியை கொண்டுவந்துள்ளதாக தெரிவித்தார்

அவர் முன்னுல்உள்ள பீடத்தில் அஸ்தி வைக்கப்பட்டிருந்

(16ம் பக்கம் பார்க்க)

## ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் ஆலயத்தில் ராணுவம் சோதனை!

[மானிப்பாய்]

ஆனைக்கோட்டையில் பிரபல்யமானஆலயமான மூத்தவிநாயகர் ஆலயம் நேற்று கடுமையான ராணுவப்பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது

நேற்றுக்காலை சுமார் ஒன்பதரை மணியளவில் இங்கு பீரங்கிக்கவச வண்டிகள், ட்ரக்குகள் சகிதம் வந்த இராணுவத்தினர் கோவிலைச் சுற்றி வளைத்து இத்திடீர் பரிசோதனையை மேற்கொண்டனர்.

கோயிலின் உட்பிரகாரம், மடப்பள்ளி அறைகள் முதலி

(16ம் பக்கம் பார்க்க)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

இறைச்சிக் கோழிகள் உடனடி விற்பனைக்குண்டு, விலை குறைவு. சீமாட்டி பாம்ஸ், ஸ்ரேசன் வீதி, மயிலங்காடு, சுன்னாகம். 600

யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியில் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அண்மையில் வீடுகட்டுவதற்கு சிறந்த ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: G. A. செபஸ்றியாம்பிள்ளை, 17/2, மருதடி வீதி, யாழ்ப்பாணம். 625

ISUZU ELF 250 நல்லநிலையில் விற்பனைக்குள்ளது. றீகல் சினிமா யாழ்ப்பாணம். 651

7 ஸ்ரீ தொடர்பிலக்க மொறிஸ் (OXFORD) காரும், C D 125 (TWIN) ஹொன்டா மோட்டார் சைக்கிளும் நல்ல நிலையில் உடனடியாக விற்பனைக்குண்டு. அ. ரவீந்திரதாஸ், அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை. 654

அளவெட்டியில் 'வாரி சீமா ரோட்' கணேஸ்வரத்தில் வீடு கட்டுதற்குரிய ½ பரப்பு மேட்டுக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: த. தர்மச்சந்திரன், 'சந்திர வாசம்' வில்சன் வீதி, கிளிநொச்சி. 670

சுண்டிக்குளி கொழும்புத்துறை வீதியில் இரண்டேகால் பரப்பு வெற்றுக்காணி நன்னீர்க் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. கோபாலரத்தினம், சட்டத்தரணி 125, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி 679

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி நாச்சிமார் கோவிலடி 50 யார் தூரத்துக்குள் ரோட்டு முகப்புடன் 1 பரப்பு காணி உடன்விற்பனைக்குண்டு. தொடர்பு: கிருஷ்ணபிள்ளை அன்சன்ஸ், 591, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோவிலடி. 684

கிளிநொச்சியில் கண்டிரோட்டுக்கு அருகாமையில் அரசாங்க ஆஸ்பத்திரிக்கு முன்பாக 110' நீளமும், 14' அகலமுமான காணி உடன்விற்பனைக்குண்டு. வியாபாரஸ்தாபனம் அமைக்க மிகவும் உகந்தது தொடர்பு: திருமதி மா. தில்லைநாதன், கேணியடி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 691

உயர்ந்த இன இரண்டுமாத வயதுடைய இரண்டு ஆண் அல்சேஷன் நாய்க்குட்டிகள் உண்டு இ சபாரத்தினம், 54, சீனியர் ஒழுங்கை, கலட்டி அம்மன் கோவிலடி, யாழ்ப்பாணம் 690

யாழ்ப்பாணம் 53, ஆனந்தன் வீதியில் கொழும்புத்துறையிலுள்ள மூன்று லட்சம் பெறுமதியான வீடும் வளவும் விற்பனைக்குண்டு விபரங்கட்கு: மேற்குறிப்பிட்ட விலாசத்தில் விசாரிக்கவும் 689

சுன்னாக சந்தியிலிருந்து அரைமைல் தூரத்தில் டாக்டர் சுப்பிரமணியம் வீதியில் இரண்டு பரப்புக்காணியில் அமைந்துள்ள நான்கு அறைகளும் மற்றும் சகல வசதிகளுமுடைய வீடு ஒன்று உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: N. S கிருஷ்ணநாதன் 'அமுதசுரபி', டாக்டர்சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். 683

## விற்பனைக்கு

மருதனமடச் சந்தியிலிருந்து இருநூறுயார் தூரத்தில் மானிப்பாய் வீதிக்கு அண்மையில் பழைய வீட்டுடன் 10 பரப்பு காணி உடன்விற்பனைக்குண்டு பிரித்தும் விற்கப்படும். த. சிதம்பரநாதன் B. A., விலைக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர், கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். 687

## தேவை

சிங்கப்பூரில் எலக்ரிஷியனக தொழில்புரிந்து யாழ்ப்பாணம் திரும்பியிருக்கும், மீண்டும் வெளிநாடு செல்லும் 32 வயது நிரம்பிய இந்துவேளாள மகனுக்கு பெற்றோர் மணமகள் பார்க்கிறார்கள். மற்றும் மணமகனுடைய 25வயது ஆசிரியையாகக் கடமைபுரியும் தங்கைக்கும் மாற்றுதிருமணமும் செய்யலாம். மணமகன் அரச கூட்டுத்தாபன ஊழியர் அல்லது வெளிநாட்டில் வேலைசெய்பவராக இருக்கவேண்டும். படம் குறிப்பு சகல விபரங்களுடனும் விண்ணப்பிக்க. விளம்பர இல. 692,C/o ஈழநாடு. 692

Hotel ஒன்றிற்கு அனுபவமுள்ள 15—18இற்கு இடைப்பட்ட பையனும், கொத்து ரொட்டி தயாரிப்பதில் அனுபவமுள்ள ஒருவரும் (வயதெல்லை இல்லை) தேவை. நற்சாட்சிப்பத்திரத்துடன் நேரில் வரவும். யுவராஜ்ஹோட்டல், ஆலடி, வல்வெட்டித்துறை. 613

யாழ். நகரத்திலிருந்து ஐந்து மைல் சுற்றுடல்களுக்குள் இரண்டு பரப்புக்குள் காணி வீட்டுடன் அல்லது வெறுமையாகத் தேவை. விலை மற்றும் முழுவிபரங்களுடன் தொடர்பு கொள்ளவும் தரகர்கள் தேவையில்லை. விளம்பர இல. 678, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 678

லக்கினத்தில் செவ்வாய் தோஷமுடைய 39 வயதுள்ள தனியார் துறையில் 1200/-ரூ சம்பளத்தில் கடமையாற்றும் பேச்சுத்திறனற்ற இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த வாலிபருக்கு 30—35 வயசுக் கிடைப்பட்ட வயதுடைய மணப்பெண்வேண்டும். சமயம் கவனிக்கப்படமாட்டாது. சாதகப் பிரதியுடன் கடிதத் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 685, C/o ஈழநாடு. 685

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட முப்பத்தைந்து வயதுடைய வியாபாரம் செய்யும் வாலிபருக்கு ஒரு பெண் தேவை சீதனத்தையும் குறிப்பிட்டு பெண்ணுடைய புகைப்படப் பிரதியுடன் பின்வரும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும்: விளம்பர இல 609 C/O ஈழநாடு 609

கோழி பராமரிப்பில் பயிற்சி பெறவிரும்பும் 17-20 வயதற்குட்பட்ட G C E [O/L] வரை பயின்ற ஆண்கள் தேவைப்படுகின்றனர் தங்க வசதியுடன், அலவன்சும் கொடுக்கப்படும். உடன் விண்ணப்பிக்கவும்—முகாமையாளர் வரணி மிஷன் பண்ணை, வரணி 612

யாழ். நகரில் பிரபல்யமான வியாபார ஸ்தாபனமொன்றிற்கு நாற்பது வயதுக்குட்பட்ட அனுபவமுள்ள விற்பனையாளர்கள் தேவை. ஆங்கில அறிவு விரும்பத்தக்கது. மின்பொறி உபகரணங்கள் தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும். தாங்கள் கோரும் சம்பளத்துடன் கிராம சேவையாளரின் நற்சாட்சிப் பத்திரத்துடனும் 17-11-84க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 665, ஈழநாடு மேற்பார்த்து, யாழ்ப்பாணம். 665

## வகுப்புகள்

G. S. Q. (Maths), B. Sc, (Maths), G. S. Q. (Bio), B. Sc. (Bio), Montessori Diploma Teachers Tr ining Course (பாலர் ஆசிரியர் பயிற்சி), Home Science Diploma Course (மனையியல் பயிற்சி) மேற்படி வகுப்புகள் ஆரம்பிக்கப் படவுள்ளன. 30-11-84 க்கு முன் விண்ணப்பிக்கவும். அதிபர், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 634

## வாடகைக்கு

கொழும்புத்துறை பிரதான வீதியில் சென். யோன்ஸ் சுண்டுக்குளிப் பள்ளிக்கூடங்களுக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. திருமதி நாகநாயகம், 84, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். 662

யாழ். கச்சேரிக்கு அண்மையில் நல்ல சுற்றுடலில் தண்ணீர் வசதியுடன் புதிய, நவீன மாடி வீடு மூன்று படுக்கை அறைகளுடன் வாடகைக்கு உண்டு. தொலைபேசி வசதியும் வீட்டில் இருக்கிறது. தொடர்பு: விளம்பர இல: 671, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 671

பெரியகடை அருகில் நாவலர் வீதி கஸ்தூரி வீதிச் சந்தியில் பெரியவியாபாரிகளுக்கேற்ற விசாலமான மேல்மாடி ஸ்ரோர். அத்துடன் கீழே பிரபல வியாபாரக் கடையும் வாடகைக்குண்டு. 142, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன்: 22335. 617

அரசடி வீதியில் பாடசாலைகளுக்கு அருகாமையில் வசதியானவீடு வாடகைக்குஉண்டு. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. விபரங்களுடன்விண்ணப்பிக்கவும் இல. 96, அரசடி வீதி, யாழ்ப்பாணம். 606

மானிப்பாய் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய மாடிவீடு (கராச்சுடன்) வாடகைக்கு உண்டு. தொழிலதிபர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: புதிய இல 173, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 674

## பழங்கள் தேவை

அதிக அளவில் விளாம் பழம், நெல்லி, [புளி இனம்] பப்பாப் பழம், மாம்பழம் ஆகியன தரக் கூடியவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்:

கந்தையா
அன்பகம்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில் 672

## PROFESSIONAL COURSES

சனி ஞாயிறு போயா நட்கள்
ஆரம்பம்: 18-11-1984

ஐ சி. எம் ஏ. - செக்ஷன் A
May 1985 பரீட்சை
பூரண போதனு நெறி

ADV. LEVEL
ஆங்கில மொழியில்
கணக்கியல் வர்த்தகம்
பொருளியல்
Aug 198 பரீட்சை

சாட்டட் லைசென்சியற்
March 1985 பரீட்சை
Auditing மட்டும்
துரித மீட்டல் வகுப்பு

Engineer in Society
May 1985 பரீட்சை

S. வன்னியசிங்கம்
B. Com (Lond)
M. Sc (Econ/Lond)

**வைரவர் கடாட்சம்**
பலாலி வீதி,
திருநெல்வேலி
680 தொலைபேசி 24424

## இன்று

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாண மாவட்ட இந்துஇளைஞர் பேரவைத் தொண்டர்களுக்கான கருத்தரங்கின் தொடரில் நடைபெறும். நான்காவது சமயக் கருத்தரங்கு இன்று (ஞாயிறு) மாலை நல்லூர்மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் நடைபெறும்.

வட்டாரக் கல்வியதிகாரி திரு.க மகேசன் உட்படப் பலர் விரிவுரையாற்றுவர்.

## அச்சக வேலையாட்கள் தேவை

**கொம்போசிற்றர்**
மும்மொழிகளும் தெரிந்தவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்
**பிளேட்டின் மெசின் மைண்டர்**
**வெட்டுபவர் (Cutter)**
ஆகக்குறைந்தது மூன்று வருட அனுபவம்தேவை

ஸ்பாட்டன் பிரின்ட்ஸ் லிமிட்டெட்
18/1 கைலாசபிள்ளையார் கோவில்வீதி நல்லூர் 673

## சேவை

**வீடியோ புளொசம்ஸ்**

உங்கள் திருமண வைபவங்களையும் மற்றும் சகல வைபவங்களையும் சிறந்த முறையில் வீடியோ படமாக்கி கொடுப்போம்.

எங்கள் பணி இந்தியா, கொழும்பு போன்ற இடங்களிலும் சிறப்பாக நடைபெறுகிறது. இலங்கையின் வடபகுதியிலும் எங்கள் சேவை தொடர்கிறது. கலர் புகைப்படமும் எடுத்துக்கொடுக்கப்படும்.

வீடியோ புளொசம்ஸ்
30, சிவப்பிரகாசம் ரோட்,
வண்ணார்பண்ணை, (668) யாழ்ப்பாணம்.

LONDON SCHOOL OF BUSINESS EDUCATION

1. ஐ. சி. எம். ஏ.
2. வியாபாரமும் கொம்புயூட்டர் நிருவாகமும்
3. ஆங்கிலம்
4. வியாபாரப் பாடநெறிகள்

## 1985 ஜனவரி 15ல் ஆரம்பமாகும்

சர்வதேச அங்கீகாரம் பெற்ற மேற்படி பாடநெறிகளைப் பயின்று தேர்வுகளில் வெற்றியீட்ட விரும்புவோர் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:-

அதிபர்
லண்டன் ஸ்கூல் ஒப் பிசினஸ் எடுக்கேஸன்
270, அப்ப ரூற்றிங் ரோட், (Upper Tooting Road)
ரூற்றிங் புரோட்வே, (Tooting Broadway)
லண்டன் SW 17 ODP.

தொலைபேசி: 01 - 767 7678 (பகல்)
(619) 01 - 675 2875 (மாலை, வார இறுதி)

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

11–11–1984

### இரத்தினராஜா சுஜீவன்

(அரசடி ரோட், கந்தர்மடம்)

**மலர்வு: 15-06-1973 உதிர்வு: 12-10-1984**

எங்கள் செல்வமே! இந்த இளம் பருவத்திலேயே உன் சின்ன சிறிய இதயத்தில் பெரிய பெரியஇலட்சியங்களையெல்லாம் சுமந்திருந்த எங்கள் பாசத்தெய்வமே உன்பிரிவால் தினமும் ஏங்கி ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கிறோம்.

பாசமுள்ள அப்பா, அம்மா, தம்பிசுரேஸ், உறவினர்கள்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்க்கும் அனுதாபச் சய்திகளை அனுப்பியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம், 682

## 31-ம் நாள் நினைவஞ்சலி

அ. சிவராசா
(இளைப்பாறிய ஆசிரியர், காசிப்பிள்ளை வித்தியாலயம் நல்லூர்)



தோற்றம்:
24 – 01 – 1924

மறைவு:
3 – 10 – 1984

14-10-84ல் அமரத்துவம் அடைந்த எம் குடும்பத் தலைவனே இன்று நீங்கள் மறைந்து 31தினங்கள் கடந்துவிட்டன. எங்குசென்றீர்கள்! உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

15/4, சங்கிலியன் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். — மனைவி, பிள்ளைகள் 695

ஈழநாடு வாரமலர்
EELANADU VARA MALAR

# ரஜீவ் இனி ஓட்டப்போவது

# 'ராட்சத ஜம்போ'!

கடந்த வாரத்தில் உலகில் இருபெரும் அரசியல் நிகழ்ச்சிகள் நடந்து முடிந்துள்ளன. இதில் ஒன்று கனவிலும் எண்ணிப்பார்க்க முடியாதது. மற்றையது பூகோளத்தின்பாதுகாப்பை ஒரு கேள்விக்குறியாக்கியிருப்பது.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி படுகொலை; அவரைத்தொடர்ந்து புதல்வர் ரஜீவ் காந்தி பாரதப் பிரதமரானது முதலாவது நிகழ்ச்சி.

அமெரிக்க அதிபர் திரு. றெனல்ட் றீகன் இரண்டாவது தடவையாகவும் அமெரிக்க அதிபராக மேலும் நான்கு



அவரின் இறுதி மூச்சுவரை உறுதியான பல வெற்றிகளையே அவருக்குத் தேடிக் கொடுத்தது.

இந்திய தேசம் பல இன-மத மக்களைக்கொண்டது. இமயம் முதல் குமரிமுனைவரை நீண்டு விரிந்த நிலப்பரப்பையுடையது இந்த மாபெரும் நிலப் பகுதியைப் பிளவுபடாது ஐக்கியப்படுத்துவதிலேயே திருமதி இந்திரா காந்தி பெரும் பாடுபட்டார். இந்த ஒற்றுமையை இந்தியாவின் வளர்ச்சிக்காக மட்டுமல்ல; இந்துமா சமுத்திரத்தின் இறைமையைப் பாதுகாக்கவுவே அவர் மிகுந்த சிரமத்துடன் கட்டிக் காத்தார்.

## இந்திரா கொள்கை மறையவில்லை

அவரின் இந்த விசாலமான நோக்கு குறுகிய வட்டத்திலுள்ள விஷமிகளுக்கு எங்கே புரியப்போகிறது? ஒரு சில செக்கன்களில் தமது துப்பாக்கிகளுக்கு இந்த மாபெரும் தலைவியை இரையாக்கினூர்கள் அந்தப்படுபாதகர்கள்.

இந்திராவின் மறைவு இந்தி



## ரஜீவ் செலுத்தவுள்ள 'ஜம்போ'

இந்தப்பதற்றமற்ற மனப் பயிற்சியே, விமானிக்கு விமானத்தை ஓட்டமுதல் தீவிரமாகப் புகட்டப்படும் ஒரு பெரும் பாடமாகும்.

தமது வாழ்வின் பெரும்பகுதியை விமானியாகவே கழித்துவிட்ட பிரதமர் ரஜீவிடம் இந்த மனப் பயிற்சி நிச்சயம் ஆழ வேரூன்றி இருக்குமென்பதில் ஐயமில்லை.

எனவே நடுவானில் ஆயிரக்கணக்கான அடிகள் உயரத்தில் ஒரு இயந்திரப் பறவையின் கால்களை மடித்து பின்னர் அதனை வெளியே தள்ளி இறக்கக்கூடிய ரஜீவுக்கு

(14ம் பக்கம் பார்க்க)

# 'தாத்தா' றெனல்ட் றீகன்

# உலகைக் காப்பாற்றவேண்டும்

ஆண்டுகளுக்குத் தெரிவாகியிருப்பது இரண்டாவது நிகழ்ச்சியாகும்.

இந்த இரு அரசியல் சம்பவங்களும் பெருமளவில் வேறுபட்டவை. ஆயினும் இவையிரண்டும் ஒருங்கே சமகாலத்தில் இடம்பெற்றிருப்பதே இவற்றின் முக்கியத்துவத்துக்குக்காரணமாக இருக்கிறது.

## இந்நூற்றுண்டின் மாபெரும் தலைவி

திருமதி இந்திராகாந்திஇந்த நூற்றுண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த ஒரு மாபெரும் தலைவர். உள்நாட்டு அரசியலிலும்



யாவில் ஒரு பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தியது. ஆனல் அந்த வெற்றிடத்தை ரஜீவ் காந்தியின் நியமனம் ஓரளவுக்குக் குறைத்துள்ளது.

இந்திராவின் மறைவுடன்

பா. அனந்தகிருஷ்ணன்

வெளிநாட்டு விவகாரங்களிலும் அவர் ஈடுபட்டவிதமே, ஒரு துணைக்கண்டத்தின் பிரதமராகவும், சுமார் 100 நாடுகளைக்கொண்ட மாபெரும் அணிசேரா இயக்கத்தின் தலைவியாகவும் பெருமையுடன் அவரை இறக்கவழியமைத்துக்கொடுத்தது.

1965ம் ஆண்டு தகவல் ஒலிபரப்பு அமைச்சராகவிருந்து பிரதமமந்திரியானூர் இந்த மாபெரும் பெண்மணி. அன்றிலிருந்து ஆரம்பித்த அவரது அரசியல் வாழ்க்கை ஒரு சண்டமாருதமாக பல சவால்களையும் முறியடித்து

அவரது கொள்கைகளும் மறைந்துவிடவில்லை என்பதற்கு திரு ரஜீவின் இந்த நியமனம்ஒருஎடுத்துக்காட்டாகும்.

நடுவானில் ஒரு விமானத்தைச் செலுத்தும் விமானி அந்த விமானத்தின் ஒரு கதவு திடீரெனத் திறக்கப்பட்டுவிட்டால், அல்லது தனது சக விமானிக்கு மாரடைப்பு வந்துவிட்டால் தனது இருக்கையிலிருந்து (Cockpit) பதறிவிட முடியாது. அப்படிச் செய்தால் முழுவிமானமுமே தவிடுபொடியாகிவிடவேண்டியதுதான்.

# தாய் மொழியின் தனிச் சுவை

தொ(ல்)லைக்காட்சியாலும் சினிமாவாலும் நன்மையில்லாமலில்லை.

சினிமாக் கலையால் உயர்ந்த தமிழக முதலமைச்சர் இன்று கோடி மக்களின் அனுதாபத்துக்கும் அன்புக்கும் பாத்திரமானூர்.

தொலைக்காட்சி அன்னை இந்திராவின் மறைவால் இன்று துன்புறும் அகில உலகுக்கும் ஆறுதலளிக்கும் செய்திகளை உடனுக்குடன் கண்ணுக்கும் காதுக்கும் இனிய உணவாகப் பரிமாறுகின்றது.

எங்கள் மக்களை குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வாழும் 'பெரும்புள்ளிகளைக் கவர்ந்த காட்சி 'அன்னை இந்திரா தமது பேரப்பிள்ளைகளுடன் இந்தியில் சம்பாஷித்ததே!' அரச வம்சம் ஆங்கிலம் என்ற இரு தலைப்பட்ட மயக்கம் இது.

என்ன ஆச்சரியம் இந்த அதிர்ச்சியை மறைக்கும் சாதுர்யமில்லாத அறிவிலிகள் இந்நாட்டின் உயர்மட்டத்தில் வாழும் 'ஆங்கிலப்'பித்துப் பிடித்தவர்கள். உயர் அந்தஸ்தின் சின்னம் ஆங்கிலம். என்ன மடைமை!

அறிவுக்கு ஆங்கிலம் தேவையென்பதால் அதனை எழுதவும் பேசவும் பெருந் திறமை யடைந்தோர் அன்னை இந்திராவுக்கு நிகராகார் ஆனல் எமக்கு 'லண்டன்' அல்லது வாஷிங்டன்தான் தலைநகர் என்று எண்ணும் அடிமைப் பிரபுக்கள் தாய்மொழி பற்றி வாசாலமாகப் பேசுவது வெறும் வஞ்சனையே.

டில்லி செங்கோட்டையில் நேருவை அல்லது இந்திராவை சுதந்திர தினத்தன்று பேசக்கேட்கும் மக்கள் இந்தி புரியாதவர்களானூலும் நெஞ்சைப் பறிகொடுப்பது நிச்சயம்.

தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி உண்டு

உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி

லங்கா சீமெந்து
LANKA CEMENT

1978-ம் ஆண்டு B. S. S. 12 தரத்திற்கு உற்பத்தியாக்கப்பட்டு C. I. S. I. R. ஆல் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

'லங்கா சிமெந்து' 'LANKA CEMENT'
முதற்தரமான போட்லண்ட் (PORTLAND) சிமெந்து உற்பத்தியாளர்கள்.

'லங்கா சிமெந்து லிமிட்டட்'
LANKA CEMENT LIMITED

சகல கட்டிட நிர்மாண வேலைகட்கும் பாவிக்க உகந்தது
'லங்கா சிமெந்து'
தேவையான சிமெந்தை உடனடியாக பெற்றுக்கொள்ள காசுக்கட்டளையுடன் இன்றே நாடுங்கள்

விநியோகப்பகுதி,
லங்கா சீமெந்து லிமிட்டட்
கீரிமலை ரோட்,
காங்கேசன்துறை.
போன் :- 22605



## கடந்த கால் நூற்றண்டில் இங்கிலாந்து-3

# எத்தனை முறை சென்றாலும் ஆசை தீர்வதில்லை!

இங்கிலாந்தில் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு எல்லா வசதிகளுமுண்டு மூன்றும் மண்டல நாடுகளில் உள்ள பிரதான கஷ்டங்கள் அங்கில்லை. உதாரணமாக மூன்றும் மண்டல நாடுகளில் எதற்கும் அரசின் உத்தரவு வேண்டும் இதனுல் நேரம் வீணுகப்போகும். எதையும் துணிந்து தொடக்க முடியாது. உதாரணமாக எனது நண்பர் ஒருவரின் அனுபவத்தைக் கூறுகிறேன்.

அவர் தென் ஆசியாவிலிருந்து லண்டன் சென்று அங்கு ஒரு சிறு தொழிற்சாலை வைத்திருந்தார் இவர் ஒரு விஞ்ஞானி. இவருடைய நாட்டுப் பத்திஉயர்ந்துகொண்டு போகிறது உள்ளூர் உற்பத்தி தேவைக்கு ஐம்பது சதவீதத்திலிருந்து அறுபதுசதமாக மாறி விட்டது. எனது இரண்டாம் மகளின் இல்லம், பல பெரிய தோட்டங்களின் மத்தியில் இருக்கிறது இதனுல் தோட்டங்களைச் சுற்றிப் பார்வையிட எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அநேகமாக தோட்டங்கள் பலநூறு ஏக்கர் அல்லது ஆயிரம் ஏக்கரில் உள்ளன. ஒரு பகுதியில் பயிரிட்டால் மற்றப்பகுதியில்பால்மாட்டை மேய விடுவார்கள். மகளின் வீட்டுக்கு முன்னிருக்கும் தோட்டத்தில் இரு நூறு பசுக்கள் இருக்கின்றன.

**நா. மாணிக்க இடைக்காடர்**

பிரதமர் இவரை லண்டனில் சந்தித்தபொழுது தேசப்பற்றைப்பற்றி இவருடன் உரையாடிச் சொந்த நாடு திரும்பி லண்டனில் பெற்ற அனுபவத்துடன் ஒரு தொழிற்சாலையை குடும்பத்தில் ஒருவரிடம் தற்காலிகமாகக் கொடுத்துவிட்டு நாடு திரும்பி நாட்டின் தலைநகரத்திற்கும் தொழிற்சாலை தொடங்கச்சொன்னுர். இதற்கிணங்கத்தனது லண்டன் தொழிற்சாலையை தொடங்கவிருக்கும் பகுதிக்கும் பதினெட்டு மாதம் அலைந்து திரிந்து விட்டு லண்டன் திரும்பினுர். காரணம் அதிகாரத்திலுள்ள உத்தியோகத்தர்கள் ஏதோ காரணங்கள் முறைக்கு முறை கேட்டு இவரின் உற்சாகத்தைக் கொன்றுவிட்டார்கள். "புத்தியாக லண்டன் தொழிற்சாலையை மூடாதது எவ்வளவு நல்லதாக முடிந்தது" என்று அவர் என்னிடம் கூறினுர்.

இப்படிப்பட்ட முட்டுக்கட்டைகள் இங்கிலாந்து போன்ற நாடுகளில் இல்லை.

### விவசாயத்திலும் சாதனை

விவசாயத்திலும் ஆங்கிலேயர் வெற்றி பெற்றுக் கொண்டேயிருக்கிறுர்கள். ஒவ்வொரு ஆண்டும் உள்ளூர் உற் யந்திர முறையில்தான் பால் கறக்கப்படுகிறது, 'ட்ராக்டர்' யந்திரம் பலதிற்கும் உபயோகிப்பார்கள். தற்பொழுது இங்கிலாந்தில் பால் தேவைக்குக் கூடியளவு உற்பத்தி செய்வதால் உற்பத்தியைக் குறைக்க வேண்டியிருக்கிறது. மற்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் சேர்ந்து பயிர்களும் பாலும் முட்டையும் கணக்காக உற்பத்தி செய்கிறுர்கள். எங்கள் நாடுகளில் போதாக்குறையால் மக்கள் பட்டினியால் வாடுகிறுர்கள். அங்கே கூடிய உணவிருப்பதால் உற்பத்தியைக் குறைக்கிறுர்கள். விவசாயத்திற்கோ தொழிலுக்கோ விஞ்ஞான ஆராய்ச்சியின் உதவியும் பணவசதியும் மற்ற எல்லா வசதிகளும் இருப்பதால் நாட்டின் பொருளாதாரம் முன்னேறிக் கொண்டே செல்கிறது. ஏதாவது முட்டுக்கட்டையிருந்தால் இது அம்பலமாகப் போய் விடும். அப்பொழுது அரசாங்கமும் மக்களும் தக்க நடவடிக்கைஎடுப்பார்கள். மூன்றும் மண்டல நாடுகளில் 'பிழை' நடந்தால் சுலபமாகத் தீர்க்க முடியாது. ஏனென்றுல் பதவியிலிருப்பவர்கள் தங்கள் முயலுக்கு மூன்று காலேயென்று தீர்ப்பு வழங்குவர். இது இங்கிலாந்தில் கிடையாது.

### திருப்தியான வாழ்வு

இங்கே கூறியவற்றை நோக்குமிடத்து ஒரு பெரிய சாம்ராச்சியத்திற்கு உரியவர்கள் பொறுமையோடும் சகிப்புத்தன்மையோடும் அடக்கத்தோடும் தங்கள் இன்றைய நிலையை உணர்ந்து திருப்தியுடன் வாழ்கிறுர்கள். இப்பொழுதும் அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கும் அடுத்து இங்கிலாந்தையே உலக மக்கள் உயரிய நாடென்பர்.

இந்த மக்களிடம் நாமறியக் கூடியவை யாவை? இவர்களின் சிறந்த தேசிய சுகாதார முறையை எங்களால் செய்யக் கூடிய கருமமோவென்று பின் வாங்கினுலும் இவர்களின் வைத்தியர்கள், தாதிமார் மக்களுடன் பழகும் நல்ல முறைகளையாவது பின் பற்றலாம். அடுத்ததாக இவர்களின் சகிப்புத் தன்மையை நாம் பின்பற்றினுல் நாங்கள் நன்மையடைவோம்.

இவர்களின் கல்வி முறையில் மாணவர்களைச் சிந்திக்கச் செய்யக்கூடிய கல்வி முறைகளை நாம் பின்பற்றலாம். அப்பொழுது எங்களுள் நல்ல சிந்தனையாளர், கல்விமான்கள், கலைஞர்கள், விஞ்ஞானிகள் உதிப்பார்கள். வாழ்க்கைமுறையை

(14ம் பக்கம் பார்க்க)

## திருமகள் தியாகம் போற்றுவோம்

இருபதாம் நூற்றாண்டில் வாழ்
இணையற்ற தலைவியெங்கள்
இருதயமாக நின்று
இன்னல்கள் தீர்த்த அன்னை
பெரும்புகழ் வீரத்தோடு
பேராண்மை கொண்ட மங்கை
திருமகள் இந்திராவின்
தியாகத்தைப் போற்றி வாழ்வோம்!

அஞ்சாமல் அணிசேராமல்
அறம் காத்து நின்றதாலும்
வஞ்சகம் சூதில்லாமல்
வாழ்வாங்கு வாழ்ந்ததாலும்
தஞ்சுதல் கொள்ளாதென்றும்
தூய்மையோ டுழைத்ததாலும்
நெஞ்சிலே ரவைகள் பெற்று
நேரில்லாத தலைவியானுய்!

சத்தியம் தருமம் நீதி
சமதர்மக் கொள்கைகெல்லாம்
வித்திட்ட பெருமையோடு
விண்ணுலகழைப்பையேற்றுய்!
சித்திரம் சிலையாய் நிற்கும்
சிறிய தலைவரெல்லாம்
உத்தம உன்னைக்கண்டால்
உயர்த்தெழுந்தழுவார் உண்மை!

கே. பி. நடனசிகாமணி

## ஓர் இந்திரா தாசனின் கையறு நிலைப்புலம்பல்

இந்தியத்தாயே! உலகத்து உத்தமியே! ஈழமகள் கண்ணீரை கரங்களால் துடைத்தவளே! தூர்க்காதேவியாய் உலகம் சுற்றிய உற்சவ மூர்த்தியே!

மலை குலைந்தாலும் நிலை குலையா உங்கள் மனத்திண்மை தாய்மைப் பண்பிலே சீவனைப் போக்கும் சீக்கியனை காவலுக்கு அனுமதித்ததா? உலக சமாதானப் புருவாய்ச் சிறகடித்துத் திரிந்த உங்களை கிற

**ஈழத்துச் சிவானந்தன்**

கொடித்து செங்குருதிகொட்டிச் சிவனைப் போக்கி விட்டானே! சீ...!

ஐயோ! தாயே! ஆதரவு தருவாய். அன்னையே என்றுல் மகனே என்பாய். அயலில் இருப்பாய் ஆபத்திற்கு உதவுவாய். ஆ! என்று வாயைப் பிளந்தால் அன்னம் இடுவாய். தாயே என்றுல் தண்ணீர் பருக்குவாய் என்று எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணியிருந்தோமே.

நான் செந்நீக்கடலிலே சாகிறேன். நீங்கள் கண்ணீர்க்கடலிலே துடியுங்கள் என்றுபோய் விட்டாயே! எப்போதும் எதிலும் திருப்தியாய் இருப்பேன் என்று சொல்லுவீர்களே இந்தக்கொடிய மரணத்திலும் உங்களுக்குத்திருப்திதானு?

தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும் என்றுனே திருவள்ளுவன். அன்னையே இதனை நீ மறந்து போனுயா? பரம சத்துராதிகளை பாதுகாவலுக்கு ஏனம்மா அனுமதித்தாய்? பெற்றெடுத்த பிள்ளைகள் கதறி, குழறி, ஐயோ! என்று அலமலந்து அழுது நிற்க நந்தா விளக்கனைய நாயகியே நஞ்சை அள்ளி வாயில் போட்டீர்களே! நயவஞ்சகரை நம்பி மோசம் போனீங்களே!

பாலும் வெள்ளை, மோரும் வெள்ளை என்று நீங்கள் நினைத்தவேளையே உங்கள் உயிருக்கு விலைபேசப்பட்ட வேளை என்பதை நான் அறிவேன். எல்லோரும் இந்தியாவின் இதயங்கள். எல்லோரும் இந்தியாவின் மன்னர்கள். ஒரே இரத்தம். ஒரே உணர்வு, ஒரே வாழ்க்கை; ஏற்றமும் இல்லை; இறக்கமும் இல்லை என்றெல்லாம் போதித்தீர்களே அனைத்தும் பொடிப் பொடியாய்ப் போய்விட்டதே.

அன்னையே!

உத்தமர் காந்தியைச் சுட்டவன் நோக்கமும் உலகஅன்னையான உங்களைச் சுட்டவன் நோக்கமும் வேறு வேறுனவை வித்தியாசமானவை வியாக்கியானங்கள் இனி வேண்டாம் தாயே. உங்களுடல் மறைந்தாலும் உலகசமாதானத்துக் காய்த்துடித்த உங்களுயிர் உலகத்தையே சுற்றிச்சுற்றி வட்டமிடும். அந்தச் சுற்றுப் பயணத்தில் ஈழமக்கள் வாழ்வையும் பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். சரித்திரம் படைத்ததாலே எங்கள் தரித்திரத்தையும் நோக்குங்கள். நேருமகளே! வீரமகளே! வணக்கங்கள்.

## என்னே ஒற்றுமை

# அண்ணாவை இதயத்தால் நேசித்த எம். ஜி. ஆர்!



அறிஞர் அண்ணாவை இதயபூர்வமா நேசித்தவர் எம். ஜி. ஆர்!

கலைஞருடன் கருத்துவேறுபட்டு தி.மு.க விலிருந்து விலகிய போது, அண்ணாமீது தனக்குள்ள இறக்கமான பிடிப்பைக் காட்டுவது போல. புதிய கட்சிக்கு அண்ணா தி.மு.க என்று பெயர் வைத்தார்!

தமிழக முதலமைச்சராக இருந்தது அண்ணா சுகயீனமுற்றபோது, சிகிச்சைக்காக அமெரிக்காவுக்குத் தனிவிமானத்தில் கூட்டிச்செல்லப்பட்டார். அதேபோன்று அவரது அருமைத் தம்பி எம் ஜி.ஆர் முதலமைச்சராகி மக்கள் இதயங்களில் நிறைந்திருக்கும் இந்தநேரத்தில், சுகவீனமுற்று அமெரிக்காவுக்கு சிகிச்சைக்காகத் தனிவிமானத்தில் கூட்டிச் செல்லப்பட்டுள்ளார்!

1968ல் நியூயோர்க்கில் அண்ணாவுக்கு புற்றுநோய்ச் சிகிச்சை அளிக்கப்பட்டபோது, அண்ணாவை நியூயோர்க் மெமோறியல் ஆஸ்பத்திரியில் சென்று பார்த்தார், அடபோது இந்தியப்பிரதமராக இருந்தவர் மறைந்த இந்திரா காந்தி!

சென்னை 'அப்பலோ' தனியார் ஆஸ்பத்திரியில் எம். ஜி ஆர் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தபோது. அவரை இந்திரா வந்து பார்த்தார்!

அண்ணா அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தபோது ஐக்கிய நாடுகள் பிரதிநிதியாக இருந்தவர் இலங்கைத் தமிழர்ாளுக்கு இப்போது நெருங்கியவராக இருக்கும் ஜி.பார்த்தசாரதி! அண்ணாவுக்கு அமெரிக்காவில் பல உதவிகளைச் செய்துகொடுத்தார்!

எம்,ஜி ஆர் புறப்படுவதற்கு முன்னர் புதிய இந்தியப் பிரதமர் ரஜீவின் கடிதத்தை டில்லியிலிருந்து சென்னைக்குக் கொண்டு வந்து எம் ஜிஆரின் மனைவி வி.என் ஜானகியியிடம் கையளித்து அவர்அமெரிக்கா செல்வதற்கான உதவிகளை

### 'ஷர்மினி'

மத்திய அரசு சார்பில் அண்ணாவுக்கு உதவிக் கவனித்தவர் அதே ஜி. பார்த்தசாரதி தான்!

அண்ணாவை அமெரிக்காவுக்குச் சிகிச்சைக்காக சென்னை விமான நிலயத்திலிருந்து தனி விமானம் சுமந்து சென்ற போது—



எம்.ஜி ஆர் அண்ணாவோடு ஆறுதலுக்காக பம்பாய்வரை சென்றுர்!

அண்ணாவுக்கும் எம் ஜி.ஆருக்கும் எத்தனை ஒற்றுமை!

### ○ ரஜீவ்: 'சோ'வின் ஆருடம்

இந்தியாவின் புதிய பிரதமரான ரஜீவ் பிரதமராக வருவார் என்று இரண்டரை வருடங்களுக்கு முன்னரே நடிகரும் வழக்கறிஞரும், பத்திரிகையாளருமான 'சோ' தெரிவித்ததை இப்போது நினைவு கூருவது பொருந்தும்!

'சோ'வின் அவ்வப்போதைய பிதற்றலோடு ஈடுபாடு இல்லாவிட்டாலும் சில சமயங்களில் அவரது 'ஆருடம்' சரியாகி விடுகிறது என்பது இந்த விஷயத்தில் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ளது.

ரஜீவ் காந்தி அரசியலுக்கு வரமாட்டார் என்று பிரதமர்

(14ம் பக்கம் பார்க்க)

# இந்திரா காந்தியின்

## பணியும் பயனும்

அரசியற் களப்பயிற்சியும், கல்வி, துணிவு, காருண்யம், வினைத்திட்டம், அன்புடைமை, பண்புடைமை, முதலியனவும் பெண்மைக்குரிய பேரியல்புகளும் வாய்க்கப்பெற்ற மாபெரும் தலைவர் ஸ்ரீமதி இந்திராகாந்தி. வலிமையும் உறுதியும் பெற்ற தீரமிக்கவராகவும், மகாகீர்த்தி பெற்ற மனுக்குலத்தெய்வமாகவும் போற்றப்படுபவர் திருமதி காந்தி தனது மதிநுட்பத்தால், பணிகளின்வீச்சால், நிதான மனப்பான்மையுடன், சாதுரியமாகவும், சமத்காரத்துடனும், தன்னுணர்வுடனும் இயங்கிய புதுயுகத்தின் விடிவெள்ளி இந்திராகாந்தி. நிரம்பிய மேதாவிலாசமும், தீர்க்க தரிசனமும், மாமேதைப்பண்பும் மிக்க இந்திராகாந்தியின் வாழ்க்கையையும், பணிகளையும் நாம் ஏன் அறிந்துகொள்ள வேண்டும்? இக்கேள்வி இன்றைய சூழ்நிலைகளில் நன்கு சிந்திக்கவேண்டிய அத்தியாவசிய தேவையொன்றாகின்றது. இதற்கானகாரணங்கள் இரண்டுள. ஒன்று, 'இன்று மேலாண்மை செலுத்திக்கொண்டிருக்கின்ற பயங்கரவாதத்தின்-தீவிரவாதத்தின் தீர்ப்பு. மற்றையது மனித வாழ்க்கையினதும் அனுபவத்தினதும் தொகுப்புக்களிலிருந்து நம்-மனுக்குலம் பெற்றுக்கொள்ளும் படிப்பினை. இவை தாம் இன்று நம்மை அதிக விழிப்புடன் இருக்கச் செய்துள்ளன; கழிவிரக்கமும் கொள்ளச்செய்துள்ளன.

### இந்திராவின்

### சாணக்கியம்

இன்றைய அறிவுலகம் 'நாகரிகச்செயல்' மிக்கதொன்று என்றே நம்புகின்றனர். உயரிய கோட்பாடுகளைக் கொண்டுள்ளவர்களை மதிப்பதும், தொடர்புறுவதும் அறிவுலக நடைமுறைகள் எனக்கருதப்படுகின்றது. இந்தியதேசத்தின் குலவிளக்குஇந்திராகாந்தியும். இந்திய நாடும் உலகத்தின் மதிப்பில் உன்னத இடத்தைப் பிடித்துள்ளதை அனைவரும் ஒப்ப உவந்தேற்பர் பாரதப் பண்பாட்டின் எடுத்துக்காட்டாகவும் அரசியல் விஞ்ஞானத்தில் குலமரபின் செம்மை சான்ற தலைவியாகவும், தலைசிறந்த ராஜதந்திரியாகவும், சதுரப்பாடுடையவராகவும். அகில உலக தரிசனமும், அனுபவமும் பெற்றவராகவும், அணிசேரா இயக்கத்தின் தலைவியாகவும் தனித்துவம்பெற்று விளங்கியவர் அன்னை இந்திரா காந்தி.



# பெண்மையரசு

### தேசபக்தியே

### தெய்வபக்தி

தேசபக்தியின் அர்த்தத்தினையும், தேசியத் தலைவர்களினது இயக்கப்பாட்டினையும் 'அடிமை இந்தியா'வின் நிலையினின்று புரிந்து கொண்டவர் இந்திராகாந்தி 'தெய்வபக்தியும்' அவருக்குத் தெரியாத தொன்றல்ல குடும்பச்சூழலும், இந்திராவினது வாழ்க்கைப் பின்னணியும் பல்வேறு தலைசிறந்த குணநலன்களைப் பிஞ்சிலேயே அவருள்ளத்திற் புகுத்திவிட்டன.

''இந்திராவின் பாட்டி சொரூபராணி இந்திராவிடம் அளவற்ற அன்பு வைத்திருந்தார் பாட்டி, பக்தி மிகுந்தவர். இந்திரா தம் பாட்டியிடமிருந்து தாம் பலபக்திப்பாடல்களைக் கற்றுக் கொண்டார் பக்தையாகத் திகழ்ந்தார்'' என்று குறிப்பிடுகின்றார் எம். வி. வெங்கட்ராம்.

தேசத்தின் விடுதலைக்காகத் தொண்டர்கள் நிகழ்த்திய போராட்டத்தின் போதெல்லாம் இந்திராவும் பங்கெடுத்துக் கொண்டார். இந்திய விடுதலையையும், தர்மத்தின் வாழ்வையும் குறியாகக்கொண்டு தமது மழலைக்காலத்திலேயே காரியங்களில் ஈடுபட்டவர் இந்திரா

யும் செயலில் துணிந்து மதிப்புப்பெற்ற பெருந்தலைவர் இந்திரா காந்தி

### ஏழைகளின் தோழி

உயர் குலப் பிறப்பும், ஆங்கில நாகரிகத்தின் செல்வாக்கும், மேல்தட்டு வாழ்க்கைச் சூழலும் திருமதி காந்திக்குக் கிடைத்திருந்தும் 'பெண்மை அரசின்' சிறப்புக்களையெல்லாம் உலகம் காணும்படியாக நிகழ்த்திக்காட்டிய பாமர மக்களின் தோழியாகவும், தலைவியாகவும் மிளிர்பவர் பிரதமர் இந்திரா காந்தி. செம்மை சான்ற— மாண்புடைய இந்திரா பிரெஞ்சு நாட்டுப் பெண்மணி ஜோன் ஆப் ஆர்க் போல விளங்கவேண்டும் என்று கொண்டு நாட்டு விடுதலைக்காக வீரமுடன் போராடினார். இவை அவர் கற்ற கல்வியின் பயனாகக் கிடைத்த ஒரு சில பேறுகள். சிறைக் கூடத்தையே கல்விக் கூடமாக மாற்றியமைத்து அடைக்கப்பட்டுக் கிடந்த பெண்களுக்கு சீர்திருத்த விடுதலையுணர்வை 'அறிவூட்டல்' மூலம் ஏற்படுத்தியவர் பிரதமர் இந்திரா காந்தி.

பிரதமர் இந்திரா காந்தியினதும் தந்தை ஜவகர்லால் நேருவினதும் குணங்களை ஒப்பீடு செய்துள்ள வெங்கட்ராம் பின்வருமாறு எழுதுகின்றார்.

''தந்தைக்கும் மகளுக்கும் பலவகைகளில் ஒற்றுமை இருக்கிறது அதுசாதாரண ஒற்றுமையல்ல. விசித்திரமான ஒற்றுமை இருவருமே செல்லமாக வளர்ந்தவர்கள். ஜவஹர் நவம்பர் மாதத்தில் பிறந்தார். இந்திராவும் அப்படியே! சிறுவயதிலேயே ஜவஹர் நிறையப்புத்தகங்கள் படித்தார் கல்வி அறிவை வளர்த்துக்கொண்டார். இந்திராவும் சிறுவயதிலேயே எண்ணற்ற நூல்களை படித்தார். நூலறிவைப்பெருக்கிக் கொண்டார். இங்கிலாந்தில் கல்வி பயின்றவர் ஜவஹர், இந்திரா உயர்தரக்கல்வி பெற்றதும் இங்கிலாந்தில் தான். ஜவஹர் விடுதலைப்போரில் கலந்து கொண்டார் இன்னல்பல பெற்றார். இந்திராவும் தந்தை வழியைப்பின்பற்றி விடுதலைப் போரில் ஈடுபட்டார். பலமுறை சிறைசென்றார் பல இன்னல்களுக்கு ஆளானார். ஜவஹர் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தார். இந்திராவும் அந்தப் பதவியை வகித்திருக்கிறார் இந்தியா விடுதலைபெற்ற நாள் முதலாக இறக்கும்வரை ஜவஹர் பிரதமராக இருந்தார். இந்திராவும் இறக்கும் போது பிரதமராகவே இறந்தார் மக்கள் அன்று நேருவை நேசித்தனர் இன்று இந்திராவை நேசிக்கின்றனர்.

சாதி, மதவெறி அற்றவர் நேருஜி இந்திராவும் அப்படியே மூடப்பழக்கவழக்கங்களை நேருஜி அறவே வெறுத்தார் அவைகளைக்கடுமையாகச்சாடிவந்தார். இந்திராவுக்கும் மூடப்பழக்கவழக்கங்கள் கொஞ்சமும் பிடிக்காது. நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் உடையவர் ஜவஹர். அதேபோல் நேர்மையான உள்ளமும், உரமான நெஞ்சும் உடையவர் இந்திரா!

மோதிலால் நேருவின் அருமைப்பேர்த்தி இந்திரா ஒரு தடவை காங்கிரஸ் கட்சி மாநாடு லாகூரில் கூடிய போது ''இவன் என் அருமைப்பேரன் என்மகன் ஜவஹரின் பிள்ளை'' என்று நண்பர்களிடம் கூறினார் மோதிலால் நேரு. பேர்த்தியையே பேரனாகக்கண்டு மகிழ்ந்து அணியூட்டி வளர்க்கப்பட்டவர் இந்திராகாந்தி

பிரதமர் இந்திராகாந்தி தமது பன்னிரண்டாவது வயதிலேயே தீவிரமாகக்கட்சி அரசியல் அரங்கிற்கு வர ஆர்வம் கொண்டார். உள்ளத்திற் கொண்ட ஊக்கத்தினாலும் உத்வேகத்தினாலும் குழந்தைகளுக்காகக் கட்சியொன்றைத் துவக்கி அதன் தலைவராகியதுடன் தாயார் கமலாவினது சிபாரிசின்படி 'வானர சேனை' என்றும் அக்கட்சிக்குப் பெயரிட்டார்.

''தம் தந்தையுடன் சென்று இந்திரா பல அறிஞர்களைச் சந்தித்தார் அவர்களுடைய அறிவுத்திறனை எண்ணி வியந்தார் அரசியல் வாதிகள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் கலைஞர்கள் ஆகியபலரையும் சந்தித்தார் ஐன்ஸ்டீன், பெர்னாட்ஷா, சார்லி சர்ப்ளின் போன்றவர்களையும் இந்தியா நேரிலே கண்டார்''

''அறிஞர்களுடன் ஜவஹர் உரையாடியபோதெல்லாம் இந்திரா அதைக் கூர்ந்து கவனித்தார் அவர் பலவித அனுபவங்களைப் பெற்றார் அவை அவருடைய கல்வியின் ஒரு பாகமாகவே அமைந்தன''

(6-ம் பக்கம் பார்க்க)

## கனகசபாபதி - நாகேஸ்வரன்

அறிஞர்கள், சிந்தனையாளர்கள், மகான்கள், தேசபக்தர்கள், தியாகச் செம்மல்கள், வீரர்கள், விஞ்ஞானிகள், தொழில் வல்லுநர்கள் மேதைகள் வாழ்வினால் தான் ஒருநாடு புகழடைகிறது: பெருமை பெறுகின்றது. இத்தகு பேராளர்கள் வரிசையில் புகழுடம்பு எய்திய நாட்டுக்காக உழைத்த மிக நல்ல பெண்மணி அன்னை இந்திராகாந்தி உயரிய பண்பாட்டின் லட்சணத்தைத் தம் இளம் பராயத்திலேயே தந்தை ஜவஹர்லால் நேருவுடன் கூடவிருந்து கசடறக்கற்றகாரணத்தினாலும், அண்ணல் காந்தியின் அடிச்சுவட்டிலே தன்கால்களைப் பதித்துத் தொண்டு புரிந்த காரணத்தினாலும்' மக்கள் மத்தியில் மாமனிதராக-மதிப்பார்ந்த மகோன்னதமானதொரு இடத்தைப் பெற்றுக்கொள்ளமுடிந்தது.

பிரதமர் இந்திரா பல்லின-பலமத-குலமக்கள் வாழும் பரந்த உபகண்டத்தின் பெருந்தலைவி. பிரதமர் இந்திரா தலைசிறந்த பேச்சாளர் தலைமையுரைகள், மாநாட்டுப்பேருரைகள், ஐ நா உரைகள், பொது நலவாயக் கூட்ட உரைகள், அறிக்கைகள் கூட அவரது வாக்குச் சாதுரியத் திறனையும் அரசியற் சாணக்கியத்தையும் பறை சாற்றுவன. கருத்துக்களை ஒழுங்காகக் கோவைப்படுத்திப் பேசுபவர்களில் இவரும் ஒருவர் இனிமையும் சாந்தமும் கொண்ட குரலிலே பெண்மையின் குணவிசேடத்துவம் கேட்போருக்குப் புரியும்படியாக வெளிவயமாகப் பேசும் மொழியாரே இந்திரா காந்தி. உள்ளுணர்வுகளின் வெளிப்பாட்டினைப் பேச்சுச் சாதனத்தின் துணைகொண்டு நாகரிக அரசியல்வாழ்வையும், வாய்மையின் பெறுமதியினையும் தருமத்தின் வெற்றியை

## உங்கள் மீளாத் துயில்
## எங்கள் மீளாத்துயர்

''பண்டித மோதிலாலைப் பறிகொடுத்தோமே
எண்டிசையெல்லாம் புகழ்ந்து ஏழைகளுக்கன்பு தந்த
பண்டிதரே உமது தேகம் பரகதியாச்சே
எமது பலமெல்லாம் போச்சே''

என்று அன்று பண்டித மோதிலால்நேரு காலமான போது பட்டிதொட்டி எல்லாம் ஒலித்த பாடல் இது

அன்று அவருக்கு எண்டிசையும் கண்ணீர் வடித்தது. இன்று அவரின் பிரியதர்ஷினிப் பேர்த்தி-இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி- அணிசேரா நாடுகளின் தலைவி எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்துவிட்டார்

தான்சனின் இசைகேட்டு அசைவன அசையாமல் நின்ற மண்ணில் துப்பாக்கியின் ஓசை கேட்டு உலகில் சர்வமும் அசையாமல் நிற்கின்றன. கண்ணீர் கூட அசையாது உறைந்துவிட்டது

உலகம் நாகரிகமாக வாழவேண்டுமென விழித்து உழைத்த கண்கள் இன்று அநாகரிகச்செயலால் மூடிவிட்டன. டெல்கி மாநகரம் தூங்கும்போது ஒரே ஒரு யன்னலினூடாக மட்டும் வெளிச்சம் வந்து கொண்டிருக்கும். அது இரு ஆத்மாக்கள் அகிலம்வாழ வேண்டுமென்று உழைக்கும் அறையின் வெளிச்சம். அந்த இரு ஆத்மாக்களும் ஆசிய ஜோதி என்று அழைக்கப்படும் ஜவஹர்லால்நேருவும் அவரின் அன்பு மகள் இந்திரா காந்தியுமே என்று பிரபல எழுத்தாளர் ஒருவர் கூறியுள்ளார்.

புறாக்கள் திசை மாறுவதில்லை. தந்தையும் மகளும் உலக சமாதானத்திற்காக உலகமெங்கும் பறந்து உழைத்தனர் அவர்கள் எந்த எதிர்ப்பிலும் திசை மாறிய பறவைகள் அல்ல.

வல்லரசின் பிரதமரென்ற ஆணவத்தில் திருமதி காந்தி சிறிய நாடுகளை புறக்கணித்து வாழவில்லை. அணிசேரா நாடுகளின் தலைவி என்று பொறுப்பேற்று தார்மீகமாகத் தரணிபோற்ற உழைத்தவர்

இந்திராவின் சிறிய பராயத்தில் நேரு சிறைச்சாலையிலிருந்து அவருக்கு எழுதிய கடிதங்கள் வரலாற்று ஆறாகப் பாய்ந்து அவரை உலகிற்குப் பயன்தரும் விருட்சமாக வளர்த்தன அந்தக் கற்பகதருவின் நிழலில் சமாதானம், சுபீட்சம் என்ற சுவர்ண எதிர்காலத்தை உலகம் கனவு கண்டது.

மதம் மக்களின் அபின் என்றார் மாமேதை மாக்ஸ். அந்த மதவெறியே உலகிற்கு நெறிகாட்டிய உயிரைத் தறித்துவிட்டது

சோக்கிரட்டீஸிற்கு நஞ்சூட்டிய படலம் அவர் மரணத்துடன் முடியவில்லை. அந்தப் பாஷாண படலம் தொடர்கிறது சோக்கிரட்டீஸில் ஆரம்பித்த அத்தியாயம் ஆபிரகாம் லிங்கன், மகாத்மா, மாட்டின் லூதர் கிங் என்று தொடர்ந்து. இன்று இந்திராகாந்தியின் அத்தியாயத்தில் வந்து நிற்கிறது. இந்த நச்சுப்படலம் இதே பாணியில் தொடருமானால் ஆலயங்களின் கதவுகளும் இறுக அடைக்கப்படுவது அர்த்தமுள்ள செயல்.

வீதிகளில் பறக்கும் கறுப்புக்கொடிகள் நாம் இருளில் இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்துகின்றன. என்று உண்மை ஒளி தோன்றுமென்பது யாருக்கும் வெளிச்சமில்லை.

(சிரித்திரன் கண்ணீர் வரிகள்)

# இந்திரா காந்தியின்

# பணியும் பயனும்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

''இந்திரா தம் இளவயதிலேயே உலக அறிவைநிறையப் பெற்ருர்.

அதுவே பிற்காலத்தில் அவருக்குத்துணிவையும் தன்னம்பிக்கையையும் அளித்தது. தொட்ட வினைகளனைத்திலும் அவர் தொடர்ந்து வெற்றி பெற்ருர்.

## இலட்சிய வெற்றி எது?

மகாத்மாகாந்தியடிகளது அகிம்சைக் கொள்கையில் 'அன்பேசிவம்' சத்தியமே கடவுள்' என்ற கோஷங்களில் மெய்த்துணிவும், தூயஉணர்ச்சியும் நிறைந்திருக்கின்றன. சாத்வீகச்சட்டமறுப்புக்கொள்கை'யின் உபயோகம் நிருபிக்கப்பட்டுள்ளது கொடியயுத்தங்களுக்கு மத்தியிலும் கூட வாழ்க்கை நடந்துகொண்டுதானிருக்கிறது என்பதே இக்கொள்கையை நிருபிக்கவல்ல அத்தாட்சியாகும். அன்பு பகையை வென்றதற்கு எத்தனையோ உதாரணங்களை உலக வரலாற்று ஏடுகளிற் காணலாம். மகாத்மாவின் வாழ்வில் மறைவில் அன்பின் சிகரத்தைக் காண்கிருேம். அத்தகைய மகத்தான தியாகத்தின் விளைவையும் செல்வாக்கையும் இன்றும் நினைவில் கொள்கிருேமல்லவா? பிரிட்டிஷ் ஆட்சிமுறையை எதிர்த்து மகாத்மா காந்தியால் நடத்தப்பட்ட அஹிம்சைப்போராட்டம் சரித்திரப் பிரசித்திபெற்றதாகும். ஆத்மீக உணர்ச்சியின் நிறைந்த சொரூபமாகவும் அன்பின் சொரூபமாகவும் விளங்கிய காந்திஜியால் மிருகத்தனமான எந்த முறையையும் பாரத சுதந்திரத்தைப் பெறுவதற்காகச் சிந்திக்க முடியவில்லை என்பதைக் கூறவும் வேண்டுமா?'' என்று எழுதுகின்ருர் கொடுமுடி இராஜகோபாலன் (நூல்- இராஜாங்கமும் சுதந்திரமும்)

''நான் கஷ்டத்தை அனுபவிப்பதன் மூலம் பொது உரிமைகளைப் பெறுவதற்கான முறையே சாத்வீகச்சட்ட மறுப்பு ஆகும். இது ஆயுத மூல அல்லது பலாத்காரப் புரட்சிக்கு நேர்மாருனதாகும்.''

''சட்டமறுப்பு என்கின்ற எழில் வீரமுள்ள போராட்டத்தில் ஆத்மத்தியாகம் என்பதற்கே முதலிடம் உண்டு. மரணபயமற்றவர்களின் ஆத்மத்தியாகச்சிந்தையே சாத்வீகச்சட்டமறுப்பின் அழிக்க முடியாத அஸ்திரமாகும்.''

''பொது அனர்த்தம் தவிர்க்கப்படவேண்டும்'' என்பது அகிம்சைக்கொள்கை. சாத்வீகப்போர் என்றைக்கும் கோழையின் ஆயுதமாக இருக்க முடியாது. அகிம்சை வீரனுக்கு அதிகமனே உறுதியும், எல்லையற்ற தைரியமும் வேண்டும் தனக்கே பெருந்துயரைத் தருவித்துக்கொள்ளுகின்ற நிலை அகிம்சைமுறையில் இருக்கவேண்டும் என்பதில் கருத் வேற்றுமைக்கு இடமில்லை. இத்தகு விதத்தில் அகிம்சைப்பாசறையில் வளர்ந்து அதன் அடிநாதத்தைப் புரிந்து கொண்டு இயங்கியவர் தலைவர் பிரதமர் இந்திரா.

இவ்வழியில்,

''நீண்டநாட்களுக்குத் துயரங்களைத் தாங்கவேண்டும் தங்கள் உயிர்களைப்பலிகொடுக்கவும் சித்தமாயிருக்கவேண்டும் அப்படிப்பட்ட தவத்தின் முடிவில்தான் அன்பும் அறமும் கலந்த லட்சியம் வெற்றி பெறும் அகிம்சையாளன் உண்மையான மனத் தூய்மைக்கும், நேர்மையான நம்பிக்கைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்ருன் தன் லட்சியம் ஈடேறும் போது பொது நன்மை மேம்படும் என்ற உறுதிப்பாடு அவனிடம் இருப்பதைக் காணலாம். ''தன்னுடைய நன்மையொன்றிலேயே கண்ணுங் கருத்துமாக இருக்கின்ற சுயநலமிகள் அகிம்சைப்போரிலே ஈடுபடமாட்டார்கள்''

இக் கொள்கைகளனைத்திற்கும் உதாரணத்துவமாகத் திகழ்பவர் இந்திரா காந்தி. இவை பாரதம் முழு உலகினிற்கும் வழங்கிய அரசியற் கோட்படுகளாகும். இவற்றின் பிதாமகர்களில் ஒருவரான பிரதமர் இந்திராவினது கொடூர இழப்பினல்— மிலேச்சத்தனமானதொரு வன்முறைப் பாதையின் கொடிய இயல்புகளைப் புரிந்துகொள்ள அதிகம் அவகாசம் வேண்டியதில்லையல்லவா?

ஜவஹரைச் சந்திப்பதற்கு 'காந்தித்தாத்தா' இந்திராவின் வீட்டுக்கு வருவார். அப்போது எல்லோரையும் விட மகிழ்ச்சியடைபவர் சிறுமி இந்திராதாம், தம் வீட்டில் காந்தித்தாத்தா தங்கிய போதெல்லாம் இந்திரா அவருடனேயே இருப்பார்: உரையாடி மனங்களிப்பார்'' அவ்வளவு பாசமும் நெருக்க உறவும் கொண்டிருந்தவர் இந்திரா

## தீதும் நன்று!

ஒரு முறை சிறுமி இந்திரா காந்தியைப் பார்த்து ''பாபுஜி! அந்தப்பொம்மைஏன் வாயைப் பொத்திக் கொண்டிருக்கிறது. நடுவில் இருக்கும் பொம்மை எதற்காகத் தன் கண்களை மூடிக்கொண்டிருக்கிறது! கடைசியில் இருக்கும் பொம்மை ஏன் தன் காதுகளை அடைத்துக்கொண்டிருக்கிறது! என்று மூச்விசுவிடாமல் கேட்டார்.

தீயதைப் பேசாதே!
தீயதைப் பார்க்காதே!
தீயதைக் கேட்காதே!

—என்பவைதாம் பொம்மைகள் கூறும் அறிவுரை என்ருர் மகாத்மா தீதும் நன்றும் பிறர்தரவாரா'' என்பதினைத் தன் அரசியல் நடைமுறையாகவும் கொண்டவர் இந்திரா என்பதனை அவரது 'சுதந்திரச் சிந்தனை மிக்க' ஒவ்வொரு செயற்பாட்டிலுமிருந்து நாம் அறிந்து கொள்ள முடியும். இவையனைத்தும் இந்தியப் பண்பாட்டினைப் பறை சாற்றுவனவாம்.

## இந்திராவின் தீரம்

பள்ளிப்பராய இந்திரா எல்லோரிடமும் அன்பாகப் பழகுவார். பாடம் சொல்லித் தருவார். சிறுபெண்களுக்குத் தலைவாரி விடுவார்; ஆடை அணிவிப்பார். இந்திரா மிகவும் சுறுசுறுப்புள்ள மாணவியாகத் திகழ்ந்தார் ஞாபக சக்தியில் அவருக்கு கர் அவர் தாம். பள்ளியில் பயின்ற போதே பேச்சுப் போட்டிகளில் கலந்துகொண்டு சிறப்பாகப் பேசுவார். பாட்மின்டன், சடுகுடு விளையாட்டுக்கள் அவருக்குப் பிடித்தமானவை. மலையேறுதல் உல்லாசப் பிரயாணம் செல்லுதல், இயற்கைக் காட்சிகளைக் காணல், அவருக்குப் பிடித்தமான வை. இவை பள்ளிப்பருவ அபிலாஷைகள்.

பிரதமர் இந்திரா தீண்டாமையை வெறுத்தார். அவர் ஓர் இந்து. பார்ஸி இனத்தவரான பெரோஸ் காந்தியை மணந்துகொண்டார். படித்த பண்புமிக்க பொது நலத் தொண்டராகத் திகழ்ந்த பெண், ஐக்கியம், அமைதி, பொது நன்மை ஆகியவற்றுக்குதவும் எதுவும் செய்யத் துணிபவர் இந்திரா 'சுதந்திரம்' என்பதே தார்மீக அனுபவம்தான், ஏனெனில் தீமையை நன்மை வெல்லவும், தனித்தன்மையைப் பொதுமயத்தன்மை வெல்லவும், வேற்றுமையை ஒற்றுமை வெல்லவும் உதவிசெயவதாக அது அமைந்திருக்கிறது. இக்கொள்கைகளை நேசித்தவர் பிரதமர் இந்திரா.

## குறள்வழி அரசியல்

துணிவும் தன்னம்பிக்கையும்கொண்ட பாரதப் பிரதமர் குறள்கூறும் அரசு இலக்கணங்களுக்கு இலக்கியமாகத் திகழ்ந்தார். ''தாமின்புறுவதுலகின் புறக்கண்டு'' களிபேருவகை கொள்பவர் அன்னை இந்திரா குறள் வழியில் நிலனுள்பவர்குரிய தூங்காமை கல்வி துணிவுடவை கொண்டவர். அஞ்சாமை, ஈகை, அறிவூக்கம் இளமை கொண்டே கைக்கொண்டு 'வேந்து' புரிந்தவர் மறைந்த பிரதமர் இந்திரா. காட்சிக்கெளியவராகி, உயர்பதவி வகித்த மக்கள் பிரதமர் இந்திரா. இப்பண்புகளினல் அன்னை இந்திரா இறை நிலைக்கு உயர்ந்துள்ளமையைக் குறவொன்று.

''முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்'' என்று கூறும். இத்தகு தமிழ் மறையின் தருமத்துக்கு இலக்கியமாக விளங்கிய துருவநட்சத்திரம் பிரதமர் இந்திரா.

சட்டத்தைவிட அன்பிற்கே முதலிடம் தருபவர் இந்திரா. சட்டங்கள் அன்பின் அடிப்படையில் அமையவேண்டுமென்பதே அவருடைய கருத்து அரசியல் தெளிவும் இரக்க சிந்தையுமுள்ளவர் மக்களை நேரிலே கண்டு குறைகளை அறிவதில் ஆர்வங்கொள்டவர் 16 ஆண்டுகள் பிரதமராக இருந்து பாரதத்தின் தேசிய ஐக்கியத்திற்கும்' ஒருமைப்பாட்டிற்கும் அயராது பாடுபட்டவர் இந்திரா

வேற்றுமையில் ஒற்றுமை கண்டார் இந்திரா. இந்திய தேசத்தின் பொருளாதார நிர்மாணத்தின் சிற்பி இந்திரா பெண்குலத்தின் பொன் விளக்கு இந்திரா.

குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு நடத்தியும், குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னனுகவும் விளங்கியதோடு ஜனநாயகியாகவும், சர்வதேச அரசியல் வானில் பேரொளி பரப்பிக்கொண்டிருந்த 'பாரத மாதா அணைக்கப்பட்டு விட்டது மகாத்மா காந்தி அடிகள் நிலைக்கு உயர்ந்தவிட்ட மனிதத் தெய்வம் இந்திரா காந்தி.

இடுக்கட் படினும் இளி
-வந்த செய்யார்
நடுக்கற்ற காட்சியவர்
இது இந்தியப்
பண்பாடு குறித்த குறள்

## ஆத்மாவை

## அழிக்க முடியாது

துஷ்பிரயோகம் செய்யப்படும் சக்திஅல்லதுவலிமையின் பேயாட்டமே பலாத்காரம். ஆயினும் பலாத்காரத்தினல் என்றைக்குமே நிரந்தர வெற்றியைக் காணமுடியாது இதனுல் உடலை அழிக்க முடியுமேயன்றி ஆத்மாவை அழிக்கவே முடியாது. மனிதனுடைய மிருகத்தனத்தையே இப்பலாத்காரம் வெளிப்படுத்துகின்றது. சங்கற்பத்தை இலட்சியத்தை வெல்வதன் மூலமே ஆத்மாவின் உண்மைத் தைரியத்தைக் காணமுடிகிறது.


முடிவில்,

பாரத நாட்டின் பண்பு கலாசாரம் சரித்திரம் அரசியல் பற்றிய நூல் ''நான்கண்ட இந்தியா'' (.958 சென்னை) என்பது இந்நூலின் மூல ஆசிரியர் பேரறிஞர் செஸ்டர் பௌல்ஸ் இவர் இந்தியாவிலிருந்த யூ. எஸ் தூதர்களில் முக்கியமானவர். இந்நூலில் ஜவஹர்லால் நேருவைப்பற்றிக் கூறப்பட்டுள்ள கூற்றுக்கள் அனைத்தும் பிரதமர் இந்திரா காந்திக்கும் முற்றிலும் பொருத்தமானவை.

''படித்த ஆளும் கோஷ்டியினரிடையே நேரு எப்படி இவ்வளவு செல்வாக்குப் பெற்ருர் என்பது புரிகிறது: ஆனல் கல்வியறிவில்லாத இந்தியர்களிடமும் அவருக்கு எப்படி இவ்வளவு பிடிப்பு ஏற்பட்டதென்பது அவ்வளவு தெளிவாயில்லை. ''ஜவஹர்லால் தான் என்னுடைய அரசியல் வாரிசு'' என்று காந்தி அடிக்கடி சொல்லியிருக்கிருர் நேருவின் செல்வாக்குக்கு காந்தியின் ஆசியும் ஒரு அளவிற்குக் காரணமாகும் புத்தரிலிருந்து காந்தி வரையில் சுகங்களைத் துறந்து சேவையில் இறங்குவதே இந்தியாவின் சரித்திரத்தில் பெரிய தலைவர்களின் சம்பிரதாயமாயிருந்திருக்கிறது நேருவின் வாழ்க்கையும் அதே பரம்பரையில் இருந்தும் அவருடைய செல்வாக்குக்கு ஒரு காரணமாகும். மிகச் செல்வந்தர்களான ஒரு உயர்தர பிராமண குடும்பத்தில் பிறந்தவர் நேரு. ஆனல் அந்த வாழ்க்கையைத் துறந்து தன்னுடைய நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் இறங்கினர். தன்னுடைய மாளிகையை காங்கிரஸுக்குத் தானம் செய்தார். சிறை சென்ருர். 1920க்கும் 1945க்கும் இடையே அவர் வாழ்நாட்களில் பாதிக்கு மேல் சிறையிலேயே கழிந்தது இவ்வளவு தான் என்று நேருவைப் பற்றியாரும் சுருக்கமாகச் சொல்லி விட முடியாது. அவர் பல்வேறு தோற்றங்களும், ஒன்றுக்கொன்று முரண்பட்ட உணர்ச்சிகளும் கொண்டவர். ஆனல் அவரைப்போல் தம்முடைய பிரச்னைகளையும் சிந்தனைகளையும், புத்தகங்களிலும், பத்திரிகைகளிலும், பிரசங்கங்களிலும் நண்பர்களுடன் நடத்தும் சம்பாஷணைகளிலும் அவ்வளவு மனம் விட்டுப் பேசிய ஒரு பொது ஜனத் தலைவரைப் பார்ப்பது அரிது. ஆசிய அரங்கத்திலுள்ள தலைவர்களில் முக்கியமானவரும், வசீகரமானவராகவும் இருப்பவர் நேரு. பல வழிகளில் புதிராக இருப்பவரும் அவர் தான். ஆகவே, நேருவைப் பற்றி விமர்சனம் செய்வதென்பது இந்தியாவில் மட்டுமன்றி எல்லா இடங்களிலுமே ஒரு சகஜமான பொழுது போக்காயிருக்கிறது

உலக சமாதானத்திற்கு ஆசியாவில் அரசியல் ஸ்திரத்

(12ம் பக்கம் பார்க்க




வரவு - செலவு (BUDGET)
வருமுன்
முந்துங்கள்!
மின்சார உபகரணங்கள்
பாடசாலை உபகரணங்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
அச்சுக்கூட காகிதாதிகள்
இவையாவையும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
குறைந்த விலையில்
வழங்கும் ஒரே ஸ்தாபனம்
அம்பலவாணர்
அன் சன்ஸ்,
196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(கடைத்தெரு பிள்ளையார் கோவில் முன்பாக)
போன்: 24291




அலுலக வாழ்க்கையின் இனிய அனுபவங்களைக் கலா அனுபவிக்கத் தொடங்கி இரண்டு மாதங்கள் கழிந்து போயின. கல்லூரிவாழ்விலும் பல்கலைக்கழக வாழ்விலும் அவளது அனுபவங்கள் முற்றிலும் வேறுபட்டவை.

காலையில் எழுந்ததும் அலங்கரித்துக்கொண்டு புறப்படுவாள். அலுவலகத்தில் அவளுக்கு ஒதுக்கப்பட்ட வேலைகள் அவளுக்குத் திருப்தியைத் தந்தன. மாதர் பயிற்சித்திட்டங்களை ஒழுங்கு செய்வதும், குடும்பநலன், போசாக்கு சம்பந்தமான கருத்தரங்குகளை ஒழுங்கு செய்வதும் அவளது பணிகள்.

அதனல், வாரத்தில் இரு நாட்கள் அவள் 'சேர்கிட்'டில் நிற்கநேரிடும். வெவ்வேறு கிராமங்களுக்குச் செல்வதும், பல்வேறு முகங்களுடன் கலந்துரையாடுவதும் இனிய அனுபவங்கள். பிரேமகாந்தனுடன் அவள் அடிக்கடி ஒன்ருக ஜீப்பில் செல்ல நேர்ந்தது.

மாவட்டத்தில் நான்கு இடங்கள் தெரிவு செய்யப்பட்டு படித்த இளம்பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

பயிற்சி நெறிகளைத் தயாரிப்பதிலும், அங்குரார்ப்பணக் கூட்டங்களை ஒழுங்கு செய்வதிலும் வேலைகள் மும்முரமாய் நடைபெற்றன.

பைல்களை அடிக்கடி பிரேமகாந்தனிடம் அனுப்பிஉத்தரவுகளைப் பெறவேண்டியிருந்தது. கடிதங்கள் ஏதும் பிழையாயிருப்பின் அழைப்புமணி அலறும்.

கட்டெழுத்தாளருக்கு நிச்சயம் ஏச்சுவிழும். ''உம்மாலை சரியாக அடிக்கமுடியாவிடில் நீர் வேறை இடத்துக்குப் போய்ச் சேரலாம்—! என்னுடைய நேரத்தை வீணாக்க வேண்டாம்!'' பிரேமகாந்தன் கோபத்தில்கூறுவது கலாவுக்கு கேட்கும்.

கலாவுக்கு அழைப்புவரும். பயந்து கொண்டே உள்ளே செல்லுவாள்.

''பைலை இஞ்சை அனுப்பமுந்தி இரண்டு மூன்றுதரம் பார்த்துவிட்டு அனுப்ப வேணும்! ஓகே...!'' மிக ஆறுதலாகக்கூறும் பாவனை கலாவின் இதயத்தை நெகிழவைக்கும்.

அன்று பயிற்சியாளர்களை நெறிப்படுத்தியும் பாட போதனை பற்றிய பட்டியல் ஒன்றையும் விரிவாக எழுதி, பிரேமகாந்தனின் ஒப்புதல் பெற பைலில் அனுப்பியிருந்தாள். அவன்ஒப்புதல் கொடுத்தால், ரைப் செய்து கையொப்பம் பெற்று டிவிசன் அதிகாரிகளுக்கு அனுப்பலாம்.

பியோன் கோபால் ஓடி வந்தான்.

''கலாம்மா, ஐயா வரட்டாம்!'' கலா எழும்பி அறைக்குள் சென்ருள்.

''வாரும் வாரும்!'' சிரித்தபடியே பிரேமகாந்தன் கூறினன்.

''நான் எதிர்பார்த்ததிலும் பார்க்க மிகத்திறமையாகச் செய்துள்ளீர்! பரவாயில்லை! எல்லாம் சரி இப்ப கொண்டு போய் ரைப் பண்ணி அனுப்பிவிடும்!''

கலா ஒன்றும் பேசவில்லை. முகமெல்லாம்மகிழ்வாகஅவன் நீட்டிய பைலை வாங்கிக் கொண்டு நகர்ந்தாள்.

அவள் போவதையே பிரேமகாந்தன் உற்று நோக்கிக் கொண்டிருந்தான்.

வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற ஆசை மனித இயல்பாக அமைந்துவிட்டது. கலாவுக்கு அது அதிகமாக அமைந்துவிட்டதோ..?

''அவர் என்ன அலுவல் சொன்னலும் அதை உடனே முடிச்சு கொடுத்தால்தான் எனக்குநிம்மதியடி...'' மிஸிஸ் சிவசம்புவிடம் கூறுவாள் கலா.

''நீ எப்பவும் இப்படித்தானே! நினைச்சால் நீ அதைச் செய்துபோட்டுத்தானே விடுவாய்... நான் உன்னேடு மூன்று வருஷம் பழகியிருக்கிறேனே கலா...'' மிஸிஸ் சிவசம்பு கூறினள்.

''எங்கடை திறமைஎல்லாத்தையும் காட்டவேணும். நாங்கள் மற்றவைக்கு சளைத்தவை அல்ல என்பதை நிரூபிக்க வேணும்! எங்களுக்கு இப்பிடி ஒரு ஏ. டி வந்து கிடைச்சது நாங்கள்செய்தபுண்ணியம்...!''

''எட அப்பா... ஏ. டி ஏதோ சொக்குப்பொடிதான் போட்டிருக்கிருர்... நீ நல்லாதான் அவரை ஏத்திவைக்கிருய்..''

அன்று வெள்ளிக்கிழமை. கலா முழுகிவிட்டு வந்திருந்தாள். மஞ்சள் நிறச்சேலை, மஞ்சள் நிற ரவிக்கை அணிந்திருந்தாள். ஈரம் காய்வதற்காக கேசக்கற்றைகளை பின்னமல் பரப்பிவிட்டிருந்தாள்.

ஏதோ அலுவலாய் கலாவை பிரேமகாந்தன் அழைத்தான்.

''கலாம்மா ஐயா வரட்டாம்...!'' கோபால் ராகம் இழுத்தான். கலா எழுந்து சென்ருள்.

''காலைமை கலாம்மாவை கண்ணிலை வைக்காமல் இருக்க மாட்டார்..!''

கோபால் புறுபுறுத்தது கலாவின் காதுகளில் மிகத்தெளிவாக வீழ்ந்தது.

அவளுக்கு பெருமிதமாய் இருந்தது. தலையை ஒரு சிலிர்ப்பு சிலுப்பிவிட்டுஉள்ளே சென்ருள்.

''மோர்னிங் சேர்...''

''ஹலோ..! குட் மோர்னிங்'' சிரித்தபடி கூறியபிரேம

## 2

காந்தன் தன் இரு கரங்களையும் கன்னங்களுக்கு முட்டுக் கொடுத்தபடி அவளையே வெறித்து நோக்கினன்.

''என்ன சேர்... பேசாமல் இருக்கிறீர்கள்...''

''கலா, உம்மைப் பார்த்தபின் எனக்குப் பேசவே தோன்றவில்லை... இண்டைக்கு உம்மை ஒரு தேவதையைப் பார்த்தமாதிரி இருக்கிறது..!''

கண்களில் ஆர்வம் தொனிக்கக் கூறினன் பிரேமகாந்தன்

''போங்க சேர்...'' செல்லமாக வெட்கத்துடன் குழைந்தாள் கலா.

''எங்கே நான் போக...கலா உண்மையில் நீர் இன்று பிரமாதமாக இருக்கிறீர்..''

கலா பேசாமல் நின்ருள். முகத்தில் மாருத கொள்ளைச் சிரிப்பு.

'தாங்ஸ் ஏன் சேர் கூப்பிட்டீர்கள்?''

''பார்த்தீரா... உம்மைக் கண்டவுடன் கூப்பிட்டதை நான் மறந்துவிட்டன்...! நீர் போம்! நான் கொஞ்சம் செல்ல கூப்பிடுகிறன்!''

கலா ஒன்றும் பேசாமல் வெளியே வந்தாள். அவளின் நடையில் ஒரு துள்ளல்! ஓர் இனம் புரியாத உணர்வு!

வரவுசெலவுத்திட்டத்தோடு தொடர்பான ஒரு பைலைக் கேட்டிருந்தான் பிரேமகாந்தன். எஸ். ஏ. எடுத்துக் கொண்டு உள்ளே சென்ருர்.

''சப்ஜெக்ட்கிளாக் முருகானந்தன் இண்டைக்கு லீவு சேர்...'' தயங்கியபடியே பைலை நீட்டினுர்.

''இவன்களுக்கு லீவு போடுவதைத்தவிர வேறை என்ன தான் செய்யத்தெரியும்...''

பிரேமகாந்தனின் சூடான வார்த்தைகள். பைலைத் திருப்பினன்.

''இவன்களுக்கு பைலைக்கட்டக் கூடத்தெரியாது...!நேற்று வந்த மிஸ் சின்னத்தம்பி என்ன மாதிரி பைலை ஒழுங்காக வைச்சிருக்கிறு! அதைப் பார்த்தெண்டாலும் இவன்கள் பழகவேண்டாமே...? சரி சரி கொண்டுபோம்...!''

பைலை வெகு அலட்சியமாக நீட்ட, அதை வெகு பவ்வியமாக வாங்கியபடியேவெளியே வந்தார்.

டைபிஸ்ட் பரமசிவத்தின் மேசைக்கு அருகில் சென்ருர்.

''என்னடாப்பா மனுசன் எங்களைக்கண்டவுடனே பிடிச்சுத் தின்னுறமாதிரி நிற்கிருன் பாவி...! அவளவையைக் கண்டவுடனே சிரிக்கிருன், குழையுருன்...!''

''எஸ். ஏ. அந்தமனிசன்ரை குணம் உங்களுக்குத் தெரியும் தானே...! விடுங்கோ

[8ம் பக்கம் பார்க்க]

# தொடர் நவீனம்

---

# தமிழ் ஆசிரியர் பிரச்னையை அணுகப்போகும் இளையவர்!



இலங்கையிலுள்ள தமிழ் ஆசிரியர்கள் பிரச்னையை மிக நிதானமாக அணுகுவதற்குப் புதிய ஒருவர் கிடைத்திருக்கிருர்!

—வயதில் மிக இளையவராக இருந்தாலும், பிரச்னைகளைப் புரிந்துகொள்ளக் கூடியவராக இருக்கிருர்

முடிக்குரிய சிரேஷ்ட சட்டத்தரணியாகப் பணியாற்றி, இப்போது அதிலிருந்து விலகி, 'சுதந்திரமான' சட்டத்தரணியாகப் பணிபுரியும் கணநாதன் ஜெயக்குமார் கல்விச்சேவை ஆணைக்குழுவில் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஒரே ஒரு தமிழ் உறுப்பினர்

—தமிழ் ஆசிரியர் பிரச்னையைக் கவனிப்பதற்கு உள்ள ஒரே உறிப்பினர் இவர்.

''தமிழ் ஆசிரியர்களுக்கு பல பிரச்னைகள் உண்டு. அவர்கள் ஒரு இடத்தில் நிம்மதியாக இருநதால்தான் சிறுர்களுக்கு சிறந்த சேவையை ஆற்ற முடியும். இதனல் அவர்கள் பிரச்னைகளை மனிதாபிமானத்துடன் அணுகவேண்டியுள்ளது!'' என்று எடுத்த எடுப்பிலேயே என்னிடம் சொன்னுர் ஜெயக்குமார்

முப்பத்தாறு வயதான இந்த இளைஞர், கலாநிதி ஆ. கந்தையாவின் இடத்திற்கு கல்வியமைச்சரினல் நியமிக்கப்பட்டிருக்கிருர்.

கொழும்பில் பொரளையிலுள்ள காம்பல் பிளேஸ் இல்லத்தில் அவரைச் சந்தித்தேன்.

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், ''பல அறிஞர்களும், அரசியல் வாதிகளும். கல்விமான்களும் தோன்றிய வடமராட்சியில் பிறந்தவன் என்பதையிட்டு பெருமைப்படுகிறேன்!'' என்ருர்.

## மனிதாபிமானத்துடன் அணுகுவேன்


யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியில் கல்வி பயின்ற ஜெயக்குமார், 1967ல் சட்டக் கல்லூரியில் நுழைந்தார்; 1973ல் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்தார்.

1975ஆம் ஆண்டு மே மாதத்தில், அட்டர்னி ஜெனரல் அலுவலகத்தில், முடிக்குரிய சட்டத்தரணியாக நியமனம் பெற்றுர். 1984 ஜனவரியில் சிரேஷ்ட முடிக்குரிய சட்டத்தரணியாகப் பதவி உயர்வு பெற்றுர்,

''எதிர்காலச் சந்ததியை உருவாக்கும் ஆசிரியர்களுக்கு ஏதோ நல்லதைச் செய்யலாம் என்ற நோக்கத்தோடு பதவி ஏற்றிருக்கிறேன். ஆசிரியர்களின் பிரச்னைகளைக் கேட்டறிவேன். மனிதாபிமானத்தோடு அவர்கள் பிரச்னைகளை அணுகுவேன்'' என்று மனம் திறந்து கூறும் ஜெயக்குமார், தமிழ் ஆசிரியர்களின் பிரச்னைகளை நல்ல முறையில் அணுகுவார் என்று நம்பலாம்.

ராஜகோபால்

## குறுநாவல்




"மீண்டும் காலையில் சந்திக்கிறேன்" என்று கூறிக்கொண்டு விடைபெறுவது போல சூரியன் மறையும் நேரம்.

வைரவர் கோவில் நல்லதண்ணீர்க் கிணத்தடியில் நீண்ட நேரமாக கூடியிருந்து கும்மாளமிட்ட இளம் சிட்டுக்கள் ஒவ்வொருவராக கலைந்துகொண்டிருந்தனர். ஒவ்வொருவர் 'மெல்லிடையிலும்' தண்ணீர்க்குடங்கள்.

இந்த நேரத்தில் வைரவர் கோவிலுக்குப் போனால் வைரவரைக் கும்பிட்டதாகவும் போகும், ஷர்மினியைக் கண்டதாகவும் போகும் என்ற எண்ணத்துடன் பரந்தாமன் வரம்பினூடே ஓட்டமும் நடையுமாக வந்துகொண்டிருந்தான்.

அந்த வைரவர் கோவிலைச் சுற்றியும் நீண்ட வயல் வெளிகள், மாலைவேளையில் நாலா பக்கங்களிலுமிருந்து இருவர் மூவராக கோவில் கிணற்றுக்குத்தான் தண்ணீர் அள்ள வருவார்கள்.

மாலைநேரத்தில் கிணறே இரண்டுபட்டுவிடும்.

தூரத்தில் பரந்தாமன் வந்துகொண்டிருந்ததை கண்டதும் கிணற்றடியில் திடீரென அமைதி ஏற்பட்டுவிட்டது.

"ஷர்மினியைக் குழப்பக் கூடாதடி" என்றவாறு இருவர் மூவராக அவசரமவசரமாக கலைந்துசென்றனர். ஷர்மினியுடன் கூடவந்த இருவர் மட்டும் கிணற்றடியில் நின்றுகொண்டிருந்தனர்.

பரந்தாமன் - ஷர்மனி விவகாரம் இப்போது தான் அந்தக் கிராமத்தில் முளைவிட்டிருந்த போதிலும் இளம் பெண்கள் அனைவருக்கும் எப்போதோ தெரிந்த விடயமாகியிருந்தது.

பரந்தாமன் கோவிலைச் சுற்றிக்கும்பிட்டுவிட்டு மீண்டும் உள்ளே வந்தபோது ஷர்மினியும் நின்றுகொண்டிருந்தாள்.

மறுநாள் பரந்தாமன் கொழும்புக்கு செல்லவிருக்கும் செய்திகேட்டு துடித்துப்போனாள் ஷர்மினி. நேர்முகப் பரீட்சை ஒன்றிற்காக அவன் செல்லவிருந்தது - அவளுக்கு. அவன் வேலைக்கே செல்லவிருப்பது போன்ற பிரமையை ஏற்படுத்தியதுபோலும்

பொழுது சாய்ந்து விட்டதைக்கூட பொருட்படுத்தாது இருவரும் கதைத்துக்கொண்டிருந்தனர்.

சில தினங்களுக்கு முன்னர் தான் கொழும்புக்கு பஸ்ஸில் சென்றவர்களுக்கு அந்தக்கதி நேர்ந்தது. அந்தச் சம்பவத்தினால்தானே அவளது பக்கத்து வீட்டு அக்கா விதவையானவள்.

இந்தச்சம்பவம் அவளுக்கு நினைவுக்கு வந்தபோதுஅழுதே விட்டாள்.

பரந்தாமனும் பஸ்ஸில் போகவிருப்பத்தை அறிந்த பின்னர் அவளால் எப்படித்தான் அமைதியாக இருக்க முடியும்.

பரந்தாமன் செல்லவிருந்த பஸ்ஸை எவரும் இடையில் மறிக்காது பார்த்துக்கொள்ளுமாறு காவல் தெய்வமான வைரவரை அடிக்கடி வேண்டிக்கொண்டாள்.

இருவருமாக வெளியே வந்த போதுதூரத்தில் செல்வி வந்துகொண்டிருந்தாள். நீண்ட நேரமாகிவிட்ட போதிலும் தமக்கை ஷர்மினி வீட்டுக்கு வராததால் அவளைத்தேடிக்கொண்டு புறப்பட்டுவிட்டாள் செல்வி.

பரந்தாமனும் ஷர்மினியும் கோவிலுக்குள்ளிருந்து வெளியே வந்ததைக்கண்டதும் அவளது நடையில் வேகம் ஏற்பட்டுவிட்டது தெரிந்தது.

பரந்தாமன் வேறுபக்கத்து வரம்பினூடே சென்றுவிட்டான்.

●

கொழும்பிலிருந்து வந்ததும் வராததுமாக கண்ணகி அம்மன் கோவிலுக்குப் புறப்பட்டுவிட்டான் பரந்தாமன். ஷர்மினியின் வீட்டைக்கடந்துதான் கோவிலுக்குப் போக வேண்டும். எப்படியும் தான் வந்துவிட்டதை அவளுக்குத் தெரியும்படியாக அவளது வீட்டடியால் செல்லவேண்டுமென்றால் கண்ணகி அம்மன் கோவிலுக்குத் தான்போக போகவேண்டும்.

அவளுடைய வீட்டைக் கடந்தபோது எட்டி எட்டிப் பார்த்தான். உள்ளே நடப்பது எதுவும் தெரியவில்லை.

முன்னரெல்லாம் அப்படி நடந்து செல்லும் போதே ஷர்மினி கண்டுவிடுவாள். அவன் அவர்களுடைய வீட்டைக்கடந்து சற்றுத்தூரம் செல்வதற்கிடையில் அவள் வீட்டுக்கேற்றுக்கு வெளியே வந்துவிடுவாள்.

ஆனால் அன்று அவள் வரவில்லை.

கோவிலால் திரும்பிவரும் போதாவது காணுவாள் என்று மனத்தைத் தேற்றிக்கொண்டு சென்றவனுக்கு திரும்பி வந்தபோது ஏமாற்றம்தான்.

மாலைதான் விடயம் தெரிந்தது.

அன்று வைரவர் கோவிலில் ஷர்மினியுடன் வெளியே வந்ததைக்கண்ட அவள் தங்கை நேரே தகப்பனிடம் விடயத்தைக்கூற -

"நான் அவரைத்தான் கட்டுவேன்" என்று அவள் அடம்பிடிக்க, வீட்டில் ஒரே ரகளையாம். தண்ணி அள்ளுவதற்குக் கூட இப்போது அவளை விடுவதில்லையாம்.

தான் மகளின் பேரில் போட்டு வைத்திருக்கின்ற லட்சருபாய் துணைக்கிருப்பதால் அவள் தங்களுக்கும் சொல்லாமல் 'மறைந்து' விடுவாள் என்ற பயத்தில் செல்லர் மகளைப் பூட்டி வைத்துக்கொண்டு திருமணப் பேச்சில் குதித்துவிட்டாராம்.

செல்லர் ஒரு அடி பாய்ந்தால் தாங்கள் எப்படியும் இரண்டு அடியாவது பாய வேண்டும் என்று எண்ணுபவர் முன்வீட்டுக் கந்தையர். அவருக்குத்தான் இந்தச் செய்தி இனிப்பாய் இனித்தது.

தன்ரை மூத்த மகளுக்கு செய்ததுபோல செல்லரும் தன் மகளுக்குச் சம்பந்தம் செய்து விடுவாரோ என்று பயந்துகொண்டிருந்த கந்தையருக்கு மகிழ்ச்சி இருக்காதா என்ன...

செல்லரின் கெட்ட காலமோ தெரியவில்லை அவர்பேசுகின்ற இடமெல்லாம் கந்தையருக்கு அறிமுகமான இடமாகவே இருந்தது. இதனால் ஒன்றுமே ஒப்பேறவில்லை...

செல்லர் ஏதேனும் புதிதாக வாங்கியிருக்கிறாரா என்று பார்த்து அதைவிட நல்லதாக தான் வாங்கவேண்டும் என்ற நினைப்புடன் சுருட்டொன்றைப்பற்ற வைத்துக்கொண்டு புறப்பட்டார் கந்தையர்.

கேற்றறைத் திறந்து கொண்டு உள்ளே சென்ற போது யன்னல் ஓரத்தினூடே செல்லர் சாய்மனைக் கதிரையில் கிடப்பது தெரிந்தது

"என்னப்பா... யாரையோ சாகக்குடுத்தவன் மாதிரிக் கிடக்கிறீர்..." என்றவாறு உள்ளே நுழைந்த கந்தையர், எதிரே கிடந்த கதிரையில் ஆசுவாசமாக அமர்ந்துகொண்டார்.

செல்லரின் முகத்தில் சோகத்தைக் காணக்காண அவருக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை.

சுற்றிவர ஒரு தடவை வீட்டை நோட்டம் விட்டவாறு "என்ன... செல்லர், முகத்தில உற்சாகத்தைக் காணயில்லை" என்றார்.

வேண்டா வெறுப்பாகச் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு "அப்பிடியொண்டுமில்லையடாப்பா..." என்று மழுப்பினார் செல்லர்

பின்னர் இருவரும் ஊர் வம்புகளையெல்லாம் பரிசோதனை செய்தனர்.

எப்படியாவது பரந்தாமனைப் பற்றி ஏதாவது கிளறிவிடவேண்டும் என்று எண்ணியவாறு "இவன் நம்மட சிற்றம்பலத்தின்ர பொடியின்ர போக்கு வாக்குகள் அவ்வளவு நல்லாயில்லை..." என்றார் கந்தையர்.

செல்லரின் முகத்தில் திடீரென உற்சாகம் தோன்றியது. கதிரையில் சாய்ந்து கிடந்தவர் எழுந்து உட்கார்ந்து விட்டார்.

"ஓமெடாப்பா அவனைப் பற்றி நான் உன்னோட கதைக்க வேணுமெண்டுதான் இருந்தனான்... அதுக்குள்ள நீயே தொடக்கிறாய்..."

(12ம் பக்கம் பார்க்க)

## பூம்பனிமலர்கள்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கதையை ..!" பரமசிவம் எஸ். ஏக்கு ஆறுதல் கூறினார்

"மெல்லமாய் கதையடாப்பா...! தற்செயலாய்கேட்டிட்டால் நான் தப்ப முடியாது!" எஸ். ஏ. பயந்தபடி கூறினார்

ஒரு மாதத்துக்குமுன்நடந்த சம்பவம் அவருக்கு ஞாபகம் வந்தது.

ஏதோ ஒரு முக்கிய குறிப்பு எடுப்பதற்காக பிரேமகாந்தன் மிஸிஸ் சிவசம்புவை சுகாதாரக் கந்தோருக்கு ஜீப்பில் அனுப்பிவைத்தான்.

எஸ் ஏ. சும்மா இருந்திருக்கலாம்!

மிஸிஸ் சிவசம்பு வெளியே சென்றபின் "அம்மாமாருக்கும் ஜீப்பிலை தான் போக வேணுமோ? பஸ்ஸிலைபோனால் குறைஞ்சு போவினமோ..."

டைப்பிஸ்ட்பரமசிவத்திடம் கூறிக்கொண்டு இருக்கையில் தற்செயலாய் வெளியே வந்த பிரேமகாந்தன் அவதானித்துவிட்டான். அவன்முகம் மாறிப்போனது.

எஸ் ஏ இஞ்சைவாரும்..!" சடாரென்று அறைக்குள் சென்று தன் இருக்கையில் அமர்ந்தான்.

எஸ். ஏ. நடுங்கியபடியே அறைக்குள் சென்றார்.

'உமக்குத் தேவையில்லாத விஷயங்களில் தலையிடாதீர்...! இஞ்சை இருந்து ஒழுங்காக வேலைசெய்ய விருப்பமில்லாவிட்டால் வேறை செக்ஷனுக்கு நீர் மாறிப்போகலாம்...! நான் தடுக்கமாட்டன்!" கோபத்தில் கத்தினான் பிரேமகாந்தன். தலையைக் குனிந்துகொண்டு வெளியே வந்துவிட்டார் எஸ். ஏ. [வளரும்]

## நினைவில் நிறைந்த அரசியலார் சிலர்—8

# பெரியார் வட்டுக்கோட்டை

## க. கனகரத்தினம்

1948ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ம் திகதி மாலை பிரார்த்தனைக் கூட்டத்துக்குச் சென்றுகொண்டிருக்கையில் காந்தி மகாத்மா சுட்டுக்கொலை செய்யப்பட்டார் என்ற செய்தி யாழ்ப்பாணத்தில் காட்டுத் தீ போல் பரவியதும் கண்ணீர் விட்டுக் கதறியவர் பலர்.

இன்றுபோல் அன்று வீடு தோறும வானொலிப்பெட்டிகள் இருக்கவில்லை. வீதிக்கு ஒரு வானொலிப்பெட்டி இருப்பதே கஷ்டம். வானொலிப்பெட்டிகள் இருக்கும் இடங்களைத் தேடிச் சென்று காந்திமகானின் மறைவுச் செய்தி சம்பந்தமான நிகழ்ச்சிகளைக் கேட்டறிந்தனர் காந்தி மகானின் இறுதி யாத்திரை வர்ணனையைக் கேட்டுக் கண்ணீர் சிந்தியோர் பலர்; கதறி அழுதவர்களும் உண்டு.

பெப்ரவரி நான்காம் திகதி இலங்கை சுதந்திரமடைந்த போதும் யாழ்ப்பாணம் காந்தி மகான் மறைவுக்கு சோகத்திலாழ்ந்திருந்தது.

மகாத்மாவின் அஸ்தியை யாழ்ப்பாணத்துக்குக்கொண்டு வரவேண்டுமென்ற யோசனை எழுந்தது.

இந்த யோசனையைச் செயற்படுத்தி மகாத்மாவின் அஸ்தியை யாழ்ப்பாணத்துக்கும் கொண்டு வருவதற்கு முழு முயற்சி மேற்கொண்டார் பெரியார் க கனகரத்தினம்.

சுதந்திர இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்துக்கு நடந்த பொதுத் தேர்தலில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட்டு அமோகவெற்றியீட்டியவர் திரு. கனகரத்தினம். அத்தேர்தலில் அவருடன் போட்டியிட்ட ஏழு வேட்பாளர்களும் தமது கட்டுப்பணத்தை இழந்தனர்.

பெரியார் கனகரத்தினம் அரசாங்க சேவையில் உயர் பதவி வகித்தவர் தமக்கு கிடைக்கவேண்டிய உயர்பதவி கிடைக்காததால் அரசாங்க சேவையிலிருந்து திரு. கனகரத்தினம் ஒய்வுபெற்றார். இதன் பின் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரசில் சேர்ந்து அரசியலில் ஈடுபட்டார். வட்டுக்கோட்டைத் தொகுதியில் வெற்றியீட்டி பாராளுமன்றம் சென்ற திரு. கனகரத்தினம் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துடன் டி எஸ். சேனநாயகா அரசுடன் சேர்ந்து உதவிக் கல்வி அமைச்சராகவும் பணியாற்றினார்

காந்தி மகானின் அஸ்தி யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டபோது அரியாலையில் யாழ், மாநகரசபை எல்லை தொடங்கும் இடத்தில் யாழ் நகரப்பிரமுகர்கள் பக்திசிரத்தையுடன் அதை வரவேற்றனர்

### எஸ். எம். ஜி.

"ரகுபதிராகவ ராஜாராம்" என்ற காந்திமகானுக்கு பிரியமான பஜனைப் பாடலைப் பாடியபடி பாடசாலை மாணவ மாணவியரும் பெரியோரும் சிறியோருமாக அஸ்திவைக்கப்பட்டிருந்த கலசம் ஊர்வலமாகக் கீரிமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. பெரியார் கனகரத்தினமும் மற்றும் பிரமுகர்களும் அஸ்தியைக் கீரிமலையில் கரைத்தகாட்சியும் யாழ்ப்பாணம் மகாத்மா காந்திஜிக்கு செலுத்திய அஞ்சலியும் என்றும் மறக்க முடியாதவை.


## பரமேஸ்வராவில்

## தமிழ் விழா

சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் தமிழ்நாட்டில் பல இடங்களிலும் தமிழ் விழா வெடுத்து தமிழ் உணர்வை மக்கள் மத்தியில் ஊட்டிவந்தது தமிழ்நாட்டில் கோயம்புத்தூரில் மூன்றுவது தமிழ் விழா நடைபெற்றது. இவ் விழாவுக்குச் சென்றிருந்த பெரியார் கனகரத்தினம் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தமிழ்விழாவை யாழ்ப்பாணத்திலும் நடத்தவேண்டும் என்று ஆவல்கொண்டார். தமிழ் நாட்டு அறிஞர்களும் ஈழத்துத் தமிழ் அறிஞர்களும் யாழ்ப்பாணத்தில் தமிழ்விழாவில் கலந்துகொள்ளவேண்டும் என்று விரும்பிய பெரியார் "சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் அடுத்த தமிழ் விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டும்" என்று கோயம்புத்தூர் தமிழ் விழாவின் இறுதிநாள் நிகழ்ச்சியின் போது மேடையில் ஏறி அழைப்புவிடுத்தார்.

சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தமிழ் விழாக்களில் இறுதிநாள் நிகழ்ச்சியின்போது அதில் கலந்துகொள்ள வருபவர்கள் அடுத்த விழாவைத் தங்கள் ஊர்களிலேயே நடத்த வேண்டுமென்று அழைப்பு விடுவது வழக்கம். பின்னர் கழக நிர்வாகக் குழு இக் கோரிக்கைகள் பற்றி ஆராய்ந்து எந்த இடத்தில் நடத்துவது என்பதுபற்றி முடிவுசெய்யும்.

(9ம் பக்கம் பார்க்க)




சாள்ஸ் டிக்கின்ஸின்

# ஒலிவர் ருவிஸ்ற்

தமிழில்: 'பேரு'

அந்த மனிதன் தன் முடியைப் பியத்துக்கொண்டு. பெரிதாகக் கூச்சலிட்டபடி நிலத்தில் விழுந்து உருண்டான். அவனது கண்கள்குத் திட்டுநின்றன. வாயில் நுரை தள்ளியது.

இதைபார்த்து பயந்துபோன பிள்ளைகள் கத்தி அழுதன. ஆனால் அந்த முதியமாது இதுவரைக்கும் செவிடுபோல் பேசாமல் இருந்தவள் அந்தப் பிள்ளைகளை அமைதிப்படுத்தினாள். கீழே விழுந்துகிடக்கும் மனிதனின் சட்டையைத் தளர்த்திவிட்டாள் பிரேத அடக்கக்காரனை சவர்பெரியிடம் நெருங்கி இறந்து கிடப்பது தனது மகள் தான் என்று விளக்கிக்கூறினாள். அதைப் பொருட்படுத்தாமல் சவர்பெரி போக எத்தனிக்கவே ''நில்லும் நில்லும்'' என்று பெரிதாகக் குசுகுசுத்தாள்

## அம்மாவைப் பற்றி ஒன்றும் சொல்லாதே!

''இன்றைக்கா, நாளைக்கா, அல்லது இன்றிரவா எப்போது அவளைப்புதைக்கப் போறீங்கள்? நான்தான் அவளைப் பெற்றெடுத்தேன், நானும் நடக்க வேண்டும் அல்லவா! பெரிய போர்வையொன்றை அனுப்பிவையும், வெளியில் மிகவும் குளிராக விருக்கிறது. நாங்கள் போகுமுன் எங்களுக்கு வைனும் கேக்கும் தேவைப் படும். என்ன செய்வது கொஞ்சம் றொட்டியும் ஒருதுண்டு என்றாலும் பரவாயில்லை. கொஞ்சம்தண்ணீரும் அனுப்பி விடும்'' என்று அவன் கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள்.

''அதற்கென்ன நீ விரும்பிய படி செய்வோம்'' என்றான் சவர்பெரி. அதேசமயம் ஒலிவரையும் இழுத்துக்கொண்டு விரைந்து புறப்பட்டான்.

அடுத்தநாள் ஒலிவரும் எஜமானனும் அந்த துன்பம் தோய்ந்த வீட்டுக்குவந்து சேர்ந்தார்கள். ஏற்கனவே பம்பின் வந்திருந்தார். பிரேதத்தைத் தூக்கிச் செல்வதற்காக தொழில் கூடத்திலிருந்த நான்கு ஆட்களையும் பம்பிள் கூட்டிவந்திருந்தார்.

அந்த முதிய பெண் மீதும், அந்த மனிதன் மீதும் பழைய கறுப்புத்துணிகளைப் போர்த்தி அவர்கள் அணிந்திருந்த கந்தல் துணிகளை மறைத்து விட்டார்கள். பிரேதம் வைக்கப் பட்ட சவப்பெட்டி மூடப் பட்டு அந்தநான்கு ஆட்களும் அதைத்தூககி கொண்டு வீதிக்கு வந்தார்கள்.

பிரேத அடக்கத்தை நடத்துவதற்காக சமயத்தலைவர் வந்து காத்துக் கொண்டிருப்பார் என்றும் அவரைக்காக்க வைப்பது சரியல்ல வென்றும் கூறி எல்லாரையும் விரைவாக நடக்கும்படி சவர்பெரி அவசரப் படுத்தினான். ஆனால் அவர்கள் அவசரப்பட்டுபோன அளவுக்கு சமயகுருவானவர் அவசரப் பட்டதாகத் தெரியவில்லை. சவச்சாலையின் ஒரு மூலையில் பிரேதம் கொண்டுபோய் வைக்கப்பட்டது. குருவானவர் வராததால் காத்திருக்க வேண்டியேற்பட்டது. இலேசாக மழை தூறிக்கொண்டிருந்தது. சவக்குழியின் அருகில் சவப்பெட்டி இறக்கிவைக்கப் பட்டிருந்தது. அந்தக் குளிரில் பிரேதத்தின் உறவினர் இருவரும் நடுங்கிக்கொண்டு காத்திருந்தார்கள். சற்று அருகில் இருந்த அலுவலக அறையில் இவைகளுக்கான குமாஸ்தா குளிர் காய்ந்துக்கொண்டிருந்தார். அவர் வெகுகாலமாகவே தங்களுக்குப் பழக்கமானவர் என்றமையால் பம்பிளும். சவர்பெரியும் அவர் அருகில் சென்று குளிர்காய்ந்தபடி பத்திரிகை படிக்க ஆரம்பித்தார்கள்.

இவ்வாறு சுமார் ஒருமணி நேரம் கழிந்த பிறகு பம்பிள், சவரிபெரி, குமாஸ்தா மூவரும் அவசரமாக எழுந்து சவக்குழியடிக்கு ஓடிவந்தார்கள் அதையடுத்து குருவானவர் வந்தார். இறுதிக்கிரியைகளை நடத்திவிட்டுப்புறப்பட்டார். அவசர அவசரமாக சவக்குழி மூடப்பட்டது. ஏற்கனவே அதே இடத்தில் பல சவங்கள் புதைக்கப்பட்டிருந்ததால் இந்தப்பெட்டியை அதிக ஆழத்துக்கு இறக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை மண்ணைத்தள்ளி மூடிவிட்டு குழி வெட்டுகிறவர்களும் புறப்பட்டார்கள்.

மயக்கம் போட்டுவிழுந்து விட்ட இறந்துபோன பெண்ணின் கணவனை ஒருவாளி குளிர்நீரை ஊற்றி தெளிவித்து கேட்டுக்கு வெளியில் அனுப்பினார்கள். அந்த முதியவளின் உடலில் போர்த்திருந்த போர்வையை சவஅடக்க ஒப்பந்தக்காரன் திருப்பியெடுத்துக்கொண்டுவிட்டான், குளிரில் அவள் நடுங்கிக்கொண்டு புறப்பட்டாள்.

வீட்டை நோக்கி நடந்து கொண்டிருக்கையில் சவர்பெரி ஒலிவரிடம் கேட்டான் ''சரி, ஒலிவர் இப்போ இதெல்லாம் பிடித்திருந்ததா? என்று

''மிக நல்லம் ஐயா, உங்களுக்கு நன்றி'' என்று கூறித் தயங்கியபின் ''அவ்வளவாக இல்லை ஐயா'' என்றான் ஒலிவர்.

''ஆ, அதெல்லாம் பழகிப் போய்விடும், பழகிட்போனவுடன் எல்லால் சரியாப் போகும்''என்றான் சவர்பெரி. இதில் பழக்கம் ஏற்படுவதற்கு சவர்பெரிக்கும் வெகுகாலம் பிடித்திருக்குமோ என்று மனதுக்குள் ஒலிவர் நினைத்துக் கொண்டான் ஆனால் அது பற்றி கேட்காமல் விடுவதும் நல்லதென்றுநினைத்துக்கொண்டான். அன்று நடந்தவைகள், காதில் கேட்டவைகள் எல்லாவற்றையும் பற்றி நினைத்துப் பார்த்தவாறே கடையைப் போய் அடைந்தான்.

இவ்வாறு ஒலிவர் ருவிஸ்ற் பிரேத அடக்க வேலைகளில் ஒருவாறு பழக்கம் ஏற்பட்டு அனுபவமும் பெற ஆரம்பித்தான். அதனால் அவனது எஜமானனுக்கு மகிழ்ச்சியாய் இருந்தது தன் மனைவியிடமும் மற்றவர்களிடமும் ஒலிவரைப்பற்றிசவர்பெரி புகழ்ந்துபேச ஆரம்பித்தான்.

இது திருமதி சவர்பெரிக்கு எரிச்சலைமூட்டிவந்தது. நோவா கிளேபோலுக்கும் ஆத்திரமாகவிருந்தது. தன்னைவிட நேற்று வந்தவன் தன் எஜமானனின் புகழுரைக்கு ஆளாவது அவனுக்குப் பொறுமையாகவிருந்தது.

ஒருதினம் இரவுச் சாப்பாட்டுக்காக நோவாவும் ஒலிவரும் குசினிக்குள் சென்றிருந்தார்கள். சார்லட் அச்சமயத்தில் வெளியில் சென்றிருந்தாள்.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கிளேபோல் ஒலிவர் மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ள முற்பட்டான்.

கிளேபோல் மேசை சீலைமீது காலை தூக்கிப்போட்டுக் கொண்டு ஒலிவரின் தலைமயிரைப் பிடித்து இழுத்தான், காதைத்திருகினான். 'கள்ளன்' என்று திட்டினான், ''உன்னைத்

5

தூக்கில் போட்டால் சந்தோஷமாய் இருக்கும்'' என்றான்- இவ்வாறு பலவாறும் ஒலிவருக்கு எரிச்சல் மூட்டஎத்தனித்தான். ஆனால் அவன் நினைத்ததுபோல் ஒலிவர் குழப்பமடையவுமில்லை, அழவுமில்லை. கடைசியில் இன்னும் கீழ்த்தரமான சேட்டைகளில் இறங்கினான்.

''தொழில் கூடம்! உன் அம்மா எப்படி இருக்கிறா'' என்று கேட்டான்.

''அவ இறந்துவிட்டா, அவவைப்பற்றி என்னிடம் ஒன்றும் சொல்லாதே'' என்றான் ஒலிவர். இப்படி சொல்லும் போதே ஒலிவரின் முகத்தில் இரத்தம் ஏறியது மூச்சுதுரிதமாகியது. வாயும் மூக்கும் படபடப் புக்குள்ளாகியிருந்தன. இதைப் பார்த்ததும் அவன் பெரிதாக அழுவதற்கு ஆயத்தமாகின்றான் என கிளேபோல் நினைத்துக்கொண்டான். அதனால் மேலும் தனது சேட்டைகளை அதிகரிக்கலானான்.

''அவள் என்ன வந்து செத்தாள் தொழில்கூடம்?'' என்று கேட்டான் கிளேபோல்.

''மனம் உடைந்து செத்ததாக ஒரு பழைய தாதி என்னிடம் கூறியிருக்கிறாள்'' என்றான் ஒலிவர். அதேசமயம் அவன் கன்னம் வழியாக கண்ணீர்த் துளி ஒன்று வழிந்தோடியது

''இப்போ ஏன் அழுகிறாய்'' என்றான் நோவா.

''நீங்கள் என்னை அழவைக்கவில்லை'' என்று பதிலளித்த ஒலிவர் ''போதும் அவவைப் பற்றி இனிமேலும் ஒன்றுங் சொல்லவேண்டாம்'' என்று கண்டிப்புடன் கூறினான்.

இதையடுத்து கிளேபோல் பலமாதிரியாகவும் முகத்தை வைத்துக்கொண்டு ''உன் அம்மா, ஒரு கீழ்த்தரமான கெட்ட மனுஷி'' என்று கூறி முடித்தான்.

இதுவரைக்கும் கீழேகுனிந்து கொண்டிருந்தவன் சடுதியாகத் தலையை மேலேதூக்கி ''என்ன சொன்னாய்'' என்றுகேட்டான் ஒலிவர்.

''கீழ்த்தரமான கெட்ட மனுஷி தொழில்கூடம்'' என்று ஆறுதலாகப் பதிலளித்த கிளேபோல். ''அவள் அப்படி செத்தது நல்லது தொழில்கூடம். இல்லையென்றால் ஜெயிலில் கடூழியம் அனுபவிப்பாள், அல்லது தூக்கில் தொங்குவாள்'' என்றான்.

கோபத்தில் சிவப்பாய் மாறிவிட்ட ஒலிவர் எழுந்தான். கதிரை, மேசைகளைத் தலைகீழாய் புரட்டினான். நோவா கிளேபோலின் தொண்டையில் பிடித்தான், பலம் கொண்டமட்டும் உலுக்கினான், ஆத்திரத்தையெல்லாம் சேர்த்து ஒரு குத்துவிட்டு அவனை நிலத்தில் சரித்தான். (தொடரும்)

## நினைவில்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படியே பெரியார் கனகரத்தினம் விடுத்த அழைப்பும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்தமிழ் விழாவை யாழ்ப்பாணத்தில் சிறப்பாக நடத்துவதற்கு விழாக் குழுவொன்றும் அமைக்கப்பட்டது.

இப்பொழுது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அமைந்துள்ள அன்றைய பரமேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் அமைந்த மாபெரும் பந்தலின் கீழ் மூன்று தினங்கள் நடந்த தமிழ் விழாவுக்கு நிகராக எந்த விழாவையும் சொல்ல முடியாது. அவ்வளவு சிறப்பாக நடந்து முடிந்த அத் தமிழ் விழா யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதற்குக் காரணமாக இருந்தவர் பெரியார் கனகரத்தினமேயாவர்.

(மிகுதி அடுத்தவாரம்)

அறிவிப்பாளர்: தலைவருக்கு மாலை போட்டவர்கள் விழா முடிந்ததும் நேரில் வந்து மாலைக்கான பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப் படுகிறீர்கள். வணக்கம்.

●

ஒருவர்: அசத்திக் கண்டு வீட்டில் வைத்தால் வீட்டில் இருப்பவர்களை அகற்றி விடும், அதனால் வீட்டில் வைக்கக்கூடாது என்று சொல்லித்திரிந்தீர். இப்போ மாரிக்கு, வைக்கத் தேடித் திரியிறீர் என்ன விசேஷம்.

மற்றவர்; எனது நான்கு பெடியளையும் வெளிநாடு அனுப்ப வழியைக்காண விலலை அதனால்...

●

பேரன்: தாத்தா! எப்படி இந்தப் பென்சன் கியூவில் மூன்று மணித்தியாலங்களுக்கு ஒரே நிலையாக நிற்கிறீர்கள்?

தாத்தா: அந்த நாட்களிலே பாண் கியூவில் நின்டு பெற்ற அனுபவம் தான்.

இரா. பாஸ்கரன்

●

அதிபர்: பகிஷ்கரிப்பு நடைபெற்றதால் ஓ. எல். பரீட்சை எழுதப்போகும் உங்கள் வகுப்பு மாணவர்களின் கல்வி தடைப்பட்டு விட்டது.

ஆசிரியர்: இல்லைசார். பாடசாலை வகுப்பில் படிக்கும் அத்தனை மாணவர்களும் ரியூசன் வகுப்பிலும் என்னிடம் படிக்கிறார்கள்.

●

ரவி: பரமு, இன்று நீ ஏன் பாடசாலைக்குப் போகவில்லை?

பரமு: இன்று எங்களுக்குப் பாடங்கள் நடைபெறமாட்டாது.

ரவி: ஏன்?

பரமு: பகிஷ்கரிப்பு முடிந்து இன்றுதான் பாடசாலை ஆரம்பமாகிறது. எங்கள் வகுப்பறைக்குக் கதவு இல்லாததனால் ஆடுகளின் ஆதிக்கம் அதிகமாக இருந்திருக்கும்ஆட்டுப்பிழுக்கையை அள்ளித் தோட்டத்துக்கை போடச்சொல்லி வாத்தியார் எல்லாரிட்டையும் சொல்லுவார். அதுதான் நான்போகவில்லை.

இ. பாலகுமார்

பவர்ஸ் உரம்
வெல்ல முடியாதது
ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
த. பெ. 11, கொழும்பு - 1. தொலைபேசி: 20551-6
MASTERS ABC 4/82 (D)

# சைவ சமயத்தில் உபநிடதங்களின் முக்கியத்துவம்

சைவசமயம், வரலாறு கடந்தது என்பதினைச் சிந்துவெளி நாகரிகத்தினை அறிஞர்கள் வெளிக்கொணர்ந்த பின்னர் உலகம் விளங்கிக்கொண்டது. இந்து மூத்தநாகரிகத்திற்குரியவர் திராவிடரேதான் என்பது அதனை ஆராய்ந்த அறிஞர்முடிபாகும். சிந்துவெளிநாகரிக மக்கள் எழுத்துக்கள் அல்லது குறியீடுகளைப் பயன்படுத்தினர் என்பதற்கு ஆதாரமுண்டு ஆனல் அவை நாம்வாசித்து அறிந்துகொள்ள முடியாத அளவுக்கு அழிக்கப் பட்டுவிட்டன. பண்டைய இந்தியவரலாற்றில் சிந்துவெளிநாகரிகத்தின்பின் வேதகால ஆசிரியர்பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன ''ஆரியர் சிந்து வெளியிற்குடியேறிய போது வேதம் தோன்றியது என்பது அறிஞர்முடிபு ''என்பர் டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள்.

வேத இலக்கியத்தில் சிந்துவெளித்திராவிடர் பற்றிய குறிப்புக்கள் காணப்படுவதாலும் சைவசமயக் கருத்துக்கள் காணப்படுகின்றதாலும் சிந்துவெளித் திராவிடரிடமிருந்து சைவசமயக்கருத்துக்களை இவர்கள் எடுத்தாண்டிருத்தல் கூடும் என்று தோன்றுகிறது.

உபநிடதங்கள் தோன்றிய காலம்பற்றி இன்றும் கருத்து வேறுபாடுகள் உண்டு கி லக்ஷ்மணன் அவர்கள் தமது இந்திய தத்துவஞானம் எனும் நூலில் பெரும்பாலான உபநிடதங்கள் புத்தர் பிறப்பதற்குமுன்னரே தோன்றிவிட்டன என்பர் அவர் அந்நூலில் ''இந்தியதத்துவ ஞானிகள் அனைவரையும் இருபிரிவாகப் பிரிக்கலாம் ஒருபிரிவினர், வேதங்களிலும், உபநிடதங்களிலும் கூறப்படுவனவற்றை ஏற்றுக்கொள்வோர் மற்றப் பிரிவினர் அவற்றை ஏற்க மறுத்து, அம்மறுப்பை அடிப்படையாகக்கொண்டு புது மதங்களைத்தாபித்தோ, இந்த இரண்டாவது பிரிவினருடைய கொள்கைகள் தோன்றுவதற்கு உடன்பாட்டுமுகமாக ஆகாவிடினும் எதிர்மறை முகமாகவாவது மூலகாரணமாயிருந்தவை இவ்வுபநிடதங்களே. ஆகையால் இந்திய

சர்களின் முயற்சியால், பௌத்தமும் சமணமும் பரதகண்டத்திற்குள்ளும் புறத்தும் பரவி வைதீக நெறியை நலிவுறச்செய்தன. இவற்ருல் சமயக் கொள்கைகளைத் தர்க்கித்து ஆராய்ந்து அறிய வல்லவர்களுக்காக வைதீகநெறியில் ஆகமங்கள் உபநிஷத்துக்கள் முதலியதத்துவநூல்களை எழுதினர். பாமரமக்களைக்கவர்வதற்காகப் புராணங்களை இயற்றினர் என்று கூறுவதுஇக்கால ஆராய்ச்சிக்குப் பொருந்துகின்றது என்கிருர். வேதகாலத்தில் வெறும் தோத்திரங்களையே பாடிக்கொண்டிருந்த மக்களை விழிப்படையச்செய்து சிந்திக்கத்தூண்டியவை இச்சமண பௌத்த மதங்களேயாகும்.

உபநிடதகாலம் ''சிந்தனையாளர்காலம்'' என்றும் அழைக்கப்படுகிறது உபநிடதங்கள் பௌத்த சமணமதங்களுக்குக் காலத்தால் பிற்பட்டன என்பதே பொருத்தம் போலத் தெரிகிறது இந்த அடிப்படையில் பார்க்கிறபோது பௌத்த சமண மதங்களுக்கு உபநிடதங்களை மூலமாகக் கூறுவது சரியானதல்ல என்றே கூற வேண்டும்.

சைவசமயத்தின் தத்துவ விளக்கத்தினைக் கூறுவது சைவசித்தாந்தமாகும் இது இந்திய தத்துவ ஞானத்தில் வைதீகத் தத்துவப்பிரிவில் ஒன்ருகக் கூறப்படுகுறது சித்தாந்தம் வேதோபநிடதங்களில் கூறப்பட்ட கருத்துக்களை நன்கு அறிந்து அதனைமறுக்கவில்லை. டாக்டர் முத்துராமன் அவர்கள் ''...சித்தாந்தசாத்திரங்கள் ஆகமங்களின் கட்டளை ஏற்றுற்கொள்கின்றன. வேதவாக்குகளை மதிக்கின்றனஉபநிடதக்கூற்றுக்களைமறுப்பதில்லை. சைவசித்தாந்தக் கருத்துக்கள் ஆகமங்களையோ, வேதங்களையோ அல்லது உபநிடதங்களையோ மூலமாகக்கொண்டு விளங்குவனவாகும் என்ற கூற்றுக்கே இடமில்லை'' என்று கூறுவது இங்குகவனிக்கத்தக்கது.

வேதத்தின் முடிவு வேதாந்தமென்ருல் சைவ சமயத்தின் முடிவு சைவ சித்தாந்தமாகும் இந்தியதத்துவ ஞானம் என்று கூறப்படுமனவற்றில் காலத்

✶ மூனா கௌரிகாந்தன்

தத்துவஞானங்களனைத்துக்கும் உபநிடதங்களே மூல இலக்கியங்கள் என்பது தவருகாது'' என்றும் கூறியுள்ளார், ஆனல்,

உபநிடதங்களை வேதத்துடன் இணைத்து உபநிடதங்களையும், அவைதீகமதங்களுக்கும் மூல இலக்கியமாகக் காட்டமுறபடுவது கால ஆராய்ச்சிக்குப் பொருந்துவதாகத் தெரியவில்லை. உண்மையில் வேதம்தோன்றியகாலம் வேறு உபநிடதம் தோன்றிய காலம் வேறு இவையிரண்டிற்குமிடைப்பட்ட காலத்தில்தான் அவைதீக மதங்கள் தோன்றியிருக்க வேண்டும் என்பது ஆராய்ச்சிக்குப் பொருந்துகின்ற கருத்தாகும்.


கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் ''கி.மு. ஆரும் நூற்ருண்டளவில் கௌதமரும் மகாவீரரும்முறையேபௌத்த சமண நெறிகளைத்தாபித்து, வைதீக நெறியைக்கண்டித்தனர். அசோகன்முதலிய பேரர

தால் பிற்பட்டது சைவசித்தாந்தம்எனப்படுகிறது. இதன் காலம் கி. பி. 13ம் நூற்ருண்டென்பர். சைவசமயத்தில் அறிவு பூர்வமான முடிவு என்று சைவசிந்தாந்தத்திற்குப் பொருள் கொள்ளலாம். சித்தாந்தம் தனக்கு முற்பட்ட ஏனைய இந்தியத்தத்துவங்களைக்கருத்துக்களை ஏற்க வேண்டிய இடத்து ஏற்று மறுக்க வேண்டிய இடத்து மறுத்து தனது கருத்துக்களை நிறுவிச் செல்கிறது.

பல்லவராட்சியின் போது தமிழ்நாட்டில் சைவம் மறுமலர்ச்சி பெற்றதாகக் கூறப்படுகிறது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் சிந்து வெளியில் செழித்திருந்த சைவசமயமே பிற்காலத்தில் மறுமலர்ச்சி பெற்றதாகக் கூற வேண்டும். காதலும், போரும் சங்ககாலத்தமிழர் வாழ்வில் இருசக்கரங்கள் போலாயின. சங்ககாலத்தின் பின் இவற்றின் தவருனபோக்கு தமிழ்மக்கள் வாழ்வைச் சீரழித்திருக்க வேண்டும். அதனைப்பயன்படுத்திச் சமணமும், பௌத்தமும் தமிழ்நாட்டில் இடம்பிடித்துக் கொண்டன. வேதகாலப் பகுதியில் வேள்விகள் யாகங்களின் போது உயிர்ப்பலிகள் இடம்பெற்றதைப் பௌத்த, சமண மதங்கள் கண்டித்து எழுச்சிபெற்றமைபோலவே, சங்ககாலத்தின்பின் மக்களிடத்தில் காணப்பட்ட குறைபாடுகளைக் கண்டித்து சமண பௌத்த மதங்கள் அற ஒழுக்கக் கருத்துக்களைப் பரப்பியதன் மூலம் சைவசித்தாந்தம் தமிழர் வாழ்வில் இடம்பிடித்தது. பௌத்த சமணருக்கெதிராக வடநாட்டில் உபநிடத ஞானிகள் முதலானேர் தோன்றியமை போல தென்னுட்டில் சமய குரவர் தோன்றினர். சங்க கால மக்கள் வாழ்வின் அடிப்படையே உணர்ச்சிதான். அவ்வுணர்ச்சி நெறியையே பக்தி நெறியாகப் பல்லவர் காலச் சமயகுரவர் பௌத்த சமணருக்கெதிராகப் பயன்படுத்தினர். இதனல் சைவம் பெருவெற்றியீட்டியது.

உணர்ச்சிபூர்வமான கருத்துக்கள் என்றும் நிலைத்திருக்க வேண்டுமாயின் அவற்றிற்கு அறிவுபூர்வமான விளக்கங்கள் தேவை. இந்தவகையில் பல்லவர்கால உணர்ச்சிபூர்வமான பாடல்கள் சோழர் காலத்தில் அறிவு பூர்வமான விளக்கங்களைப் பெற்றன. எனவே சைவசிந்தாந்தம் இன்றுவரை யாராலும் அசைக்கமுடியாத தத்துவமாகக்காணப்படுகிறது. சைவசித்தாந்தத்தின் மூலாதாரம் சோழர் காலம் வரையுள்ள தமிழர் வாழ்வின் அனுபவ வெளிப்பாடுகளே எனலாம். சிறப்பாகப் பல்லவர்காலச் சைவப்பக்திப்பாடல்களைக் கூறலாம். இந்த அடிப்படையில்

(12ம் பக்கம் பார்க்க)




## காட்சி 3

(அங்கம் 3)

இடம்: ஆத்தூர்

நேரம்; காலை தொடக்கம் மாலைவரை
பாத்திரங்கள்: சாத்திரி சாத்திரி2 ஓடம் ஓட்டுபவன் தோணிக்காரன்

[சாத்திரிமார் இருவரும் ஆற்றைக் கடந்து செல்லவிரும்பிச் செல்கின்றனர். தோணி ஓட்டுவோர் பாடல் கேட்கிறது]

(தோணிக்காரன் பாடுகிருன்)

எங்கள் துயர் திருமோதான் ஏலேலோ—பசி
எம்மை விட்டுப் போகுமோதான் ஏலேலோ
கங்கையிலே தோணி ஓட்டி ஏலேலோ—
நாங்கள்
காலமதை கழிக்கிறோமே ஏலேலோ

சம்பா தின்ற காலம் போச்சு ஏலேலோ
—இன்று
தவிடு தின்னும் கோலமாச்சு ஏலேலோ
கம்பளியைப் போர்த்த நாங்கள் ஏலேலோ
—இன்று
கந்தை கட்டும் காலமாச்சு ஏலேலோ

முத்தெடுத்து விற்ற துண்டு ஏலேலோ—நீரில்
மூழ்கியே சங்கெடுத்த துண்டு ஏலேலோ
உத்தரியம் பூண்ட துண்டு ஏலேலோ—இன்று
உண்ணவே திண்டாடுறோமே ஏலேலோ

குடித்தறியோம் நாங்கள் என்றும் ஏலேலோ
—காசு
குத்தகைக்குப் போகுதையோ ஏலேலோ
படித்தறியோம் ஓர் எழுத்து ஏலேலோ
—எங்கள்
பாடறிவார் யாருமுண்டோ ஏலேலோ

எங்கள் குரல் கேட்கலையோ ஏலேலோ
—தெய்வம்
ஏறெடுத்தும் பார்த்திடாதோ ஏலேலோ
திங்களணி சங்கரனே ஏலேலோ —தரும
தேவதையே கேட்கலையோ ஏலேலோ

சாத்திரி 1;

அண்ணே இவர்தம் அவலம் கேட்டியா
கண்ணீர் விடுகிருர் காலம் மாறுமா

சாத்திரி 2;

பொறு பொறு தம்பி புலர்ந்திடும் காலை
உறுதுயர் பனிபோல் ஓடோடி மறையும்

சாத்திரி 1:

அதுவரை இவர்கள் ஆவி நிலைக்குமா
விதியிதற் குள்ளே விளையாடி விட்டால்...

சாத்திரி 2:

நம்பிக்கை தானே நமதரும் சொத்து
நம்பிக்கை யிழந்தால் ஞாலம்தான் ஏது?

சாத்திரி 1;

உண்மைதான் அண்ணே உலகொளி யூட்டி
விண்வலம் வந்து விளங்கிய ஆதவன்

மேலைக் கடலை விரைந்து செல்கிருன்
ஆத்தூர் அரசன் கொடும்படை போலப்
பார்த்தே யிருக்கும் பயங்கரப் பேரிருள்
சூழ்வதன் முன்னர் தோணியில் ஏறி
ஆற்றினைக் கடந்து அடுத்தவூர் செல்வோம்

சாத்திரி: [தோணிக்காரரை நோக்கி]

தோணியை ஓட்டும் தோழரே: நாங்கள்
அடுத்தவூர் செல்ல ஆவலா யுள்ளோம்
ஓடத்தைச் செலுத்தி உதவி செய் திடுக
வேண்டும் பொன்னீவோம் விருப்புடன் வருக

தோணி ஓட்டுபவன்;

அன்பரே நீவிர் அடுத்த நாட்டார் போல்
தென்படு கின்றீர் சிறியனேன் கொண்ட
ஐயமே சரியோ அறிந்திட வுரைப்பீர்

சாத்திரி 2:

ஐயமே வேண்டாம் அடுத்த நாடேதான்
அந்நியர் என்றெமை யாங்ஙனம் கண்டீர்

தோணிக்காரன்:

அன்புடையீர் இவ் ஆத்தூர் தனிலே
இதுவரை காலமும் எவரும் எமக்குக்
கூலியைக் கூட்டிக் கொடுத்தவ ரில்லை
கேட்டதிற் பாதி அரை மனதோடு
போட்டுமே செல்வர் புதுமையே யில்லை

சாத்திரி 1:

அப்படி யாஞல் ஆத்தூர் மக்கள்
செப்பிடும் லோபிக ளாயிருப் பாரோ

தோணிக்காரன்:

இல்லவே யில்லை எம்மவர் நல்லர்
இல்லாத தாலே இல்லை யென்கின்ருர்
வல்லவர் சிலரே வாழ்ந்திடு கின்ருர்
உள்ளவர் உள்ளம் கடுகினும் சிறிதே

[தோணியோட்டி கலங்கிய வண்ணம்]

சரிசரி பெரியீர் தாவுக தோணியில்
சவளை நீ எடடா தம்பிசுக் கான்பிடி
இவர்களை ஏற்ற இடத்தினில் இருத்து
கவலையைப் போக்கப் படியப்பா பாட்டு

[வேறு]

ஓடக்காரர்:

எங்கள் துயர் தீருமோதான் ஏலேலோ—பசி
எம்மை விட்டுப் போகுமோதான் ஏலேலோ
கங்கையிலே தோணி யோட்டி ஏலேலோ
—நாங்கள்
காலமதைக் கழிக்கிறோமே ஏலேலோ

—திரை—

[வளரும்]

# எமது சிறுகதை

# எதிர்பார்ப்புக்கள்



தாமரைச்செல்வி

அன்று திங்கட்கிழமை. கொடிகாமம் சந்தை கூடும் நாள்: அந்தச்சந்தி முழுவதும் ஒரே மனிதத் தலைகள்தான். பஸ், கார், சைக்கிள்களின் தாறுமாறான ஓட்டங்களின் நடுவே மனிதர்களின் பரபரப்பு.. பலாப்பழ வாசமும் வாழைப்பழ வாசமும் அலையாய்ப் பரவியிருந்தது, பொருட்களைப் பற்றியும் விலைகளைப்பற்றியும் கதைக்கும் குரல்கள்... சில வயதான பெண்களின் திட்டுகள்...... லொறிகளின் இரைச்சல்கள்... எங்கேயும் பரபரப்பு.

தெய்வானைக்கிழவி கடகத்தை இறுகப்பிடித்துக் கொண்டு சந்தைக்குள் நுழைந்தாள். சட்டை போடாமல் மார்புக்கு குறுக்கே சேலை கட்டியிருக்கும் அந்தக் காலத் தோற்றம். நீல நிற நெசவு சேலை நைந்துபோய், கிழவியின் உடலைச் சுற்றியிருந்தது. மெல்லியதோற்றம்... முழுவதும் நரைத்த தலை... கொஞ்சம் கூனிக்கொண்டு நடப்பாள் காதுகளில் பெரிய ஓட்டை இருந்தது ஆனல் அதில் எந்த ஆபரணமும் இல்லை.

கடகத்தைத் திண்ணையில் வைத்துவிட்டுப் பெருமூச்செறிந்தாள்

'இண்டைக்குச் சாமானெல்லாம் ஒரே விலை போலக்கிடக்கு என்னட்ட இருக்கிறகாசுக்கு எத்தினையை வாங்கப் போறன்..' — தெய்வானை யோசித்துக்கொண்டு ஒரு விநாடி தயங்கி நின்றாள்.

''ணேய் தள்ளணை... வழியில நிண்டு கொண்டு...'' என்று போகிற போக்கில் ஒருவன் இடித்துவிட்டுப் போனான்

''குறுக்காலை போறவன்'' தள்ளு எண்டால் தள்ள மாட்டனே. இடிச்சிட்டுப் போறான் '' என்று முணுமுணுத்துக்கொண்டு அவள் வெங்காயம் வாங்க நடந்தாள்.

''வாணை ஆச்சி, வெள்ளன வருவாய், இண்டைக்குப் பிந்திப்போனாய்'' — வெங்காயக் குவியலுக்கு முன்னால் இருந்த செல்லம்மா வரவேற்றாள்.

''ஓம்பிள்ளை. பொழுது விடியக்கை வெளிக்கிட்டன், பேரப்பெடியனுக்குச் சரியான காய்ச்சல். ஆஸ்பத்திரியில் போய் மருந்து வாங்கி வீட்டில் கொண்டுபோய் விட்டிட்டு வாறன்''

''காச்சலோ... என்ன திடீரெண்டு..''

''நேற்றுக் காற்சட்டை வாங்கித் தரச்சொல்லிக் கேட்டவன், காசில்லை எண்டுசொல்லக் கேக்காமல் கரைச்சல் பிடிச்சான், பின்ன ஏசிப்போட்டன். அதுதான்என்ர பிள்ளைக்குக் காச்சல் வந்திட்டுது.

— சீலை நுனியால் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

''இங்கயிருந்து சாமான் வாங்கிக்கொண்டுபோய் அங்க எங்கட சந்தையில் விக்கிற பிழைப்பு என்ரை, அதுக்குள்ள காற்சட்டை வாங்கக்காசு எங்காலை வரும். இண்டைக்குச்சந்தையில் இதுகளை வித்துப்போட்டு வீட்ட போகேக்க ஒரு போத்தில் சிவத்தச் சோடா வாங்கிக்கொண்டு போகவேணும், பாவம் பெடியன். பேசிப்போட்டன். தாய் தேப்பன் இல்லாதது...''

''உனக்கும் போற நேரத்தில பெரிய சுமை, உன்ரை மோள், புருசன் செத்தும் உந்தப்பிள்ளையை வைச்சுக்கொண்டு ஒழுங்காய் இருந்தவள் தானே, பிறகு கொழுப்பில ஒருதனோட ஓடினதுக்கு அவளின்ர பிள்ளையை நீ வைச்சு வளர்க்கிறாய். அவளோட கொண்டுபோய் விடன்.''

''அதுக்கு அவன் சம்மதிக்காணும். இப்பவே அவளுக்கு ஆறு பிள்ளையளாம். அதோட இவனையும் என்னெண்டு கொண்டுபோய் விடுறது. தேப்பனும் செத்துப்போனான். தாயும் செத்த மாதிரித்தான். பொசிப்பில்லாத பிறவியாவம் என்னால் ஏலுமான வரைக்கும் பாப்பன். பிறகுதான் என்னெண்டு சீவிக்கப்போகுதோ... ஏதோ அது சீரழியிற நிலை வராட்டிக்காணும் கரம்பாள் பிள்ளையாரப்பா......''

நீளமாய் மூச்சை இழுத்து வயல் வெளிநடுவே பழைய காலக்கட்டடங்களின் உள்ளே இருக்கும் பிள்ளையாரை மனத்தில் நினைத்துக்கொண்டாள்.

இண்டைக்கு என்னட்டக் கனகாசில்லைப்பிள்ளை நாலு கொத்து வெங்காயம் தா. இப்ப வெங்காய விலையால இந்த வியாபாரம் நட்டம் பிள்ளை நட்டம் எண்டு விட முடியுமே... நாலுகொத்துப் போடு. இடைக்குறிச்சியில தங்கவேலன் பச்சை மிளகாய் தாறன் எண்டவன் ஐஞ்சாறு வாழைப்பழச் சீப்பும் வாங்கிக் கொண்டு போனால் நல்லது, அதுதான் நல்லாய் விக்குது

செல்லம்மா மளமளவென்று நிறுத்து கிழவியின் கடகத்தினுள்போட்டாள். செல்லம்மா சொன்ன காசை சிறிய ஓலைப் பெட்டி மடிப்புக்குள்ளிருந்து எடுத்துக் கொடுத்தாள்.

''கடகம் இதில இருக்கட்டும் பிள்ளை. வாழைப்பழம் வாங்கிக்கொண்டு வாறன்...'' என்று சொல்லிவிட்டு ஆட்களுக்குள் இடிபட்டுக் கொண்டே நடந்தாள் தெய்வானை

வாழைப்பழக் குவியல்களுக்குள் தனக்குக்கட்டுபடியாகிற மாதிரிப் பெரிதாயுமில்லாமல் சிறிதாயுமில்லாமல் ஆறு சீப்பு வாழைப்பழங்கள் வாங்கினாள். அவைகளையும் கொண்டு வந்து கடகத்தினுள் வைத்தாள்,

செல்லம்மாவுக்குப் பக்கத்தில் அமர்ந்து வெற்றிலையை எடுத்து வாய்க்குள் போட்டுக் கொண்டவள், கொஞ்சநேரம் பேரனை நினைத்துக் கவலைப்பட்டாள். கணவன் இறந்து போக நாலு வருஷமாய் ஒழுங்காய் இருந்துவிட்டுப் பக்கத்து வீட்டிலசிநேகிதமானவனுடன் பிள்ளையை விட்டுவிட்டு ஓடிய மகளை நினைத்து எரிச்சல்பட்டாள். இயலாத காலத்தில் தான் படுகின்ற கஷ்டங்களை இரண்டு வயிற்றுக்கு உழைக்க வேண்டிய நிலைமையை நினைத்துஆற்றாமைப்பட்டாள்.

கும்பிடும் கடவுளையே கொஞ்ச நேரம் திட்டினாள்.

செல்லம்மா வியாபாரத்தில் மும்முரமாய் இருந்தாள், ''மழையும் வரப்போகுது போல கிடக்கு பிள்ளை நான் வரட்டே, பஸ்நிற்குதோ தெரியேலை, இந்தக் கடகத்தை என்ரை தலையில தூக்கி வச்சிடணை''

''இந்தாணை நாலுபிடி பைததங்காய் வைக்கிறன். புதன் சந்தைக்கு வருவாய் தானே வந்து காசைத்தா.''

நாலுபிடி பைத்தங்காயை கடகத்தினுள் வைத்து விட்டுக் கடகத்தைத் தூக்கிக்கிழவியின் தலையில் வைத்தாள் செல்லம்மா.

கிழவி மெதுவாக, கவனமாக நடந்து சந்தையைவிட்டு வெளியே வந்தாள்.

மழைக்காலக்குளிர் அவளின் வெறுமையான தோள்களைத் தாக்கியது. மெல்லிய மழை நீரின் சாரல்கள்... வானம் இருண்டிருந்தது.

''மழை பெரும் பாட்டமாய்த்தான் இண்டைக்குப் பெய்யப்போகுது ''வீதியைக் கடந்து வந்தாள், பஸ் ஸ்டாண்டில் பஸ் நிற்பது தெரிந்தது.

அழுகின்ற கைக்குழந்தையைச் சமாதானப்படுத்திக் கொண்டு நின்ற பெண்ணிடம் மோனை... உது எந்த பஸ் எண்டு பார்த்துச் சொல்லணை'' என்று கேட்டாள்.

''பருத்தித்துறை பஸ்ஆச்சி. வெளிக்கிடப்போகுது, ஓடிப் போய் ஏறு''

கிழவி கடகத்தோடு அவசரமாய் நடந்தாள்.

''தம்பி இந்தக் கடகத்தை உள்ள வைச்சிடு.''

''கடகத்தை முன்னால கொண்டுபோய் வச்சிட்டு வாணை இங்க ஆட்கள் ஏறுறதில்லையே?''

கிழவி மறுபடியும் முன்பக்கம் ஓடி கடகத்தை இறக்கி உள்ளே தள்ளிவிட்டு ஓடிவந்தாள்.

''வரணிக்கு ஒரு டிக்கற் தா மோனை''.

சந்தை நாளானதால் பஸ்ஸுக்குள்ளும் ஒரே சனம்:

கலவையான வாசனைகள்.

பஸ்ஸும் புறப்பட மழையும் மெல்லியதாய்ப் பெய்ய ஆரம்பித்தது. சுட்டிபுரம் அம்மன் கோவில்வாசலில் பஸ் ஒரு நிமிஷம் நின்றபோது 'அம்மாளாச்சி' என்றுதிருப்பித்திருப்பி சொல்லி கன்னத்தில்போட்டுக் கொண்டாள். அங்கிருந்து இரண்டாவது பஸ் தரிப்பில் கிழவி இறங்கிக் கொண்டாள். மழைக்காகப் பக்கத்துக்கடை வாசலில் சிறிதுநேரம் ஒதுங்கி நின்றாள். தெருவெங்கும் சேறும் தண்ணீருமாய் இருந்தது.

வரணி சந்தை மாலை நேரங்களில்தான் கூடும். வழக்கமாய் கிழவி முன்பே போய் அமர்ந்து விடுவாள்.

இன்றைக்கு அவளுக்குப் பேரனின் நினைவு வந்துவிட்டது. என்ன செய்கிறானோ... காச்சல்விட்டிருக்குமோ... ஒரு பாண்துண்டு வாங்கிக் கொடுத்தது...திண்டானோ என்னவோ ...பிள்ளைக்குப் பசிக்கப் போகுது. ஒருக்காப் போய்ப் பாத்துவிட்டு வந்தால் என்ன என்ற நினைவில் மெல்லிய தூறலையும் பொருட்படுத்தாமல் குடிசைக்கு நடந்தாள்.

குடிசைவாசலில் ராசு இருந்து முற்றத்துத் தண்ணீரில் கடதாசியில் கப்பல்விட்டுக் கொண்டிருந்தான். பதின்மூன்று வயசிலும் மெல்லிய தோற்றம், பத்துவயசுதான் ஆனது மாதிரி காட்டிக்கொண்டிருந்தது.

''ஏன்ரா குளிருக்குள்ள இருக்கிறாய்—'' என்றபடி கடகத்தைத் திண்ணையில் இறக்கி வைத்துவிட்டு ராசுவைத் தொட்டுப் பார்த்தாள்.

உடம்பு சுடவில்லை.

''பிள்ளையாரே... காச்சல் விட்டிட்டுது, உள்ள போய்ப் படு. கோப்பி வைச்சுத்தாறன்.

கடகத்தை எட்டிப் பார்த்த ராசு, ''ஆச்சி, எனக்கு ரெண்டு வாழைப்பழம் தாவன்'' என்றான்

''வாழைப்பழமோ... அது விற்கிறதுக்கு வேண்டினது. எடுக்காதையணை உனக்குக் கோப்பி போட்டுத்தாறன் வா...''

''நான் என்ன கேட்டாலும் நீ வாங்கித்தரமாட்டாய். காற்சட்டை எத்தினை நாளாய்க் கேட்கிறன் இப்ப வாழைப்பழம் கூட தரமாட்டியாம் நீ எப்பவாவது எனக்கு ஒரு வாழைப்பழம் தாறனியே''.

ராசு கோபமும் சிணுங்கலுமாய் சொல்ல கிழவிக்கும் வேதனையாய்த்தான் இருந்தது என்றாலும் வந்த இருப்பதை எடுத்துச்சாப்பிட்டால்... கையைக்கடிக்குமே...

கிழவி கெஞ்சிப்பார்த்தாள்.

''வாழைப்பழம் குளிருக்குக் கூடாதணையப்பு நான் சந்தையால வரயுக்குள்ள உனக்குச் சிவத்த சோடா வாங்கிவாறன் இப்ப உள்ளவா''.

கிழவி அவனை இழுக்காத குறையாய் உள்ளே கூட்டிப் போனாள். பானைபன்னடையை அடுப்புக்குள் திணித்துத் தண்ணீர் சுடவைத்துக் கோப்பி போட்டு ராசுவை கூப்பிட்டுக் கொண்டு வெளியேவந்தாள். ராசுவைக் காணவில்லை 'ராசு டேய் ராசு..'' கூப்பிட்டாள். கடகத்தைப் பார்த்தவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது. ஒரு சீப்பில் நாலு வாழைப் பழங்களைக் காணவில்லை. தயங்கி வந்த ராசுவைப் பிடித்து இழுத்து ஆத்திரத்தோடு உலுப்பினாள்.

ஏன்ரா எடுத்துத் திண்டனி விறக வைச்சதை திண்டால் குடி மூழுக வேண்டியது தான் குளிரில் சாகப் போறியேடா சனியனே,...

ராசு தன்னை விடுவித்துக் கொண்டு கோப்பிக் கோப்பையுடன் தள்ளி ஓடினான்.

கிழவி திட்டிக் கொண்டே கடகத்தை எடுத்து தலையில் வைத்தாள் மழை விட்டிருந்தது.

ராசு கண்களில் கலக்கத்துடன் தன்னைப் பார்ப்பதை கவனித்த கிழவிக்கு மனம் இரங்கி விட்டது.

''பெடியனைத் திட்டிவிட்டன்... குழந்தை தானே ஆசையை அடக்கமுடியேலை.

''ராசு... உள்ள இரப்பு நான்இதுகளை வித்துப்போட்டு வந்து நாளைக்கு காற்சட்டை வாங்கித் தாறன் என்ன... ஆதரவாய்ச் சொன்னாள்.

ராசு சந்தேகமாய் ''அப்ப சோடா? என்று கேட்டான்.

''இதை வித்திட்டு இண்டைக்குச் சோடா வாங்கி வாறன் நாளைக்கு காற்சட்டை என்ன ''

கட்டாயம் இரண்டும் வாங்கித் தரவேணும்.

''வாங்கி வாறன்...''

''மறக்கக் கூடாது.''

''இல்லையணை, நான் வரட்டே...''

கிழவி கடகச் சுமையுடன் திரும்பி நடந்தாள்.

இதுகளைவித்திட்டுக் கட்டாயம் அவன் கேட்டதுகளை வாங்கிக் கொடுக்க வேணும். அவனும் வேறை ஆரைத்தான் கேட்பான்...''

கிழவி யோசனையுடன் நடந்தாள். கடகத்தின் பாரம் தலையை அழுத்த கழுத்துக்குள் வலித்தது.

சேறும் தண்ணியுமாக இருந்த தெரு ஓரங்களைத் தவிர்த்து கவனமாய் நடந்தாள். நீளமான தெருவில் எதிர்ப்புறமாய் நாலைந்து இளைஞர்கள் சயிக்கிளில் வந்து கொண்டிருந்தார்கள்.

வெடிச் சிரிப்பும் கதையும் பவுடர் மணமுமாய் வந்தவர்கள் கிழவியைக் காட்டி என்னவோ சொல்லிச் சிரித்தார்கள்.

அவர்களது வேகமான ஓட்டத்தைக் கவனித்துவிட்டுக் கிழவி தெருவோரம் ஒதுங்கினாள். இந்தப்பக்கம் அருகாய் வந்தவனது சயிக்கிள் கிழவி மீது உரச கிழவி அலறிக் கொண்டே விழ, கடகம் பிடியிலிருந்து சரிய, வெங்காயம் வாழைப்பழம், பயற்றங்காய் எல்லாம் சேற்றுக்குள் சிதறிப் புரண்டன.

''ஐயோ...''என்ற கிழவியின் அலறலை இளைஞர்கள் ஒரு வேடிக்கைக் காட்சியை ரசிப்பதுபோலச் சிரித்துக் கொண்டு அப்பால் போனார்கள். கிழவி இடறி விழுந்த கோலத்தைச் சொல்லிச் சிரித்துக்கொண்டே போனார்கள்.

கிழவியோ... தாளமாட்டாத வேதனையுடன் ஆத்திரத்துடனும் அவர்கள் போன திசையைப்பார்த்து திட்ட ஆரம்பித்தாள் சேற்றுக்குள் தோய்ந்துபோன வெங்காயத்தையும் சிதறி நசிந்த வாழைப் பழங்களையும் எடுக்கவேண்டும் என்ற நினைவுகூட இல்லாமல் கிழவி ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தாள்.

(யாவும் கற்பனை)

# மொழித்திணிப்பு வேண்டாம்

உளந்தனி லுதிக்கும் கருத்தினைப் பிறருக்
குரைத்திட உதித்தன மொழிகள்
வளர்ந்தன சிலவும் வளர்வன பலவும்
வாய்மொழி யாகவும் உளவாம்
மழகளி றன்னாய்! மதித்துன மொழியை
மற்றவர் மீது திணித்தல்
அழிவினைக் கூட்டும் அவரவர் மொழிதான்
அவரவர் தமக்குயி ராகும்.

வே. கனகசபாதி

மழகளிறு - இளங்களிறு. உன - உனது




## அரணை
## கொடிய
## விஷமுடையது

நட்டுவக்காலிக்கு அதன் பெயர் கூட காரண இடுகுறியாக அமைந்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது நண்டு போன்ற கால் இருப்பதால் இப்பெயர் பொருத்தமாக அமைந்திருக்கலாம்.

இதன் உருவம் தேளைப் போல இருந்தாலும் அதை விடப் பலமடங்கு பருமனுடையது. நல்ல பெரிய நட்டுவக்காலி கிட்டத்தட்ட 8-10 அங்குல நீளமுடையதாகவும், சறுத்துப்பெருத்த உருவமுடையதாகவும் இருக்கும். இதன் விஷம் தேளவிஷத்திலும் பார்கக வீரியம் குறைந்தது. உருவத்தில் பெரிதானாலும் விஷத்தன்மையில குறைந்தது. நட்டுவக்காலி கொட்டிய இடத்தில் சிறு வலி ஏற்பட்டாலும் சிறிய நேரத்தில் குறைந்துவிடும். ஆனுல் காயத்தில் புண் உண்டாகி வேதனை தரக்கூடும். ஆகையால உடனடியாகக் கொட்டிய இடத்தைத் துப்பரவு செய்து சிகிச்சை செய்தால் குணம் ஏற்படும்.

### பல்லி

பல்லி .சாதாரணமாக வீடுகளில் காணக்கூடிய பிராணியாகும். இது கடித்தால் சிறு விஷம் உண்டு ஆனுல் இதன் எச்சம் உடம்பில் பட்டால் பட்ட இடத்தில் சிறிய குருணிபோல பருக்கள் உண்டாகிப் புண் உண்டாகும். எச்சம் பட்ட இத்தைக் கழுவித்துப்பரவு செய்து விட்டால் இதன் இடர்ப்பாடுகளை நீக்கலாம். பல்லி கடித்தால் அந்த இடத்தில் நோவு ஏற்படலாம். எரிவும் வீக்கமும் ஏற்படாம் வியர்வையும் ஏற்படும் இது கடித்த இடத்தில் பாகல் இலைச்சாற்றைச் சம அளவாகப் பசுப்பாலில் கலந்து அத்துடன் பெருங் கரந்தைவேரையும் சேர்த்து அரைத்துக் கடிவாயில் பூச குணம் ஏற்படும்.

### அரணை

அரணை கொடிய விஷமுடையது இதன் விஷத்தின் கொடுமையை விளக்குவதற்காகவே 'அட்டை கடித்தால் குட்டை அரணை கடித்தால் மரணம்' என்னும் பழமொழி கூட வழங்குவதுண்டு. இது பல்லி இனத்தைச் சேர்ந்தது. இதுசாதாரணமாக யாரையும் கடிப்பது குறைவு. கடிக்க வரும், ஆனுல் மறந்து விடும். ஆண்டவன் கொடிய விஷமுடைய அரணையையும் படைத்து அது தீண்ட வரும் பொழுது மறதியையும் கொடுத்துத் திருவிளையாடல் செய்கின்ருன் அரணை சில சந்தர்ப்பவசத்தால் தான் மக்களைத் தீண்டுகின்றது. அதன் வாலிலும் விஷம் உண்டு அரணையின் எச்சிலும் விஷமுடையதாகும். சிலசந்தர்ப்பத்தில் அரணையின் வால் அறுந்து நமது ஆகாரத்தில் கலந்து கொண்டால் அந்த ஆகாரம் விஷமுடையதாகும். வாலுக்கே இவ்வளவு விஷத்தின் வல்லமை இருக்குமானுல் அதன் கடிக்கு எப்படியான விஷம் இருக்கும் என்பதைக்கற்பனை செய்து பார்க்க வேண்டியதில்லை. இது கடித்தால் சரீரம் முழுதும் நடுக்கம் ஏற்படும் வாயிலிருந்து வெள்ளை நுரைதள்ளும். நாவு தடித்து வாயிலிருந்து உமிழ் நீர் வழியும்.

அரணை கடித்தவுடன் சிறுகுறிஞ்சா என்னும் மூலியைத் துவைத்து அதன் சாற்றைப் பருக கொடுக்கலாம். மூங்கிற் குருத்தைத் துவைத்து இரண்டு தேக்கரண்டிச் சாற்றில் வெருகடி மிளகு தூள் சேர்த்துப் பருகினுல் குணம் காணும்.

### ஓணன்

ஓணனும் அரணை இனத்தைச் சேர்ந்தாலும் விடத் தாக்கத்தில், வேறுபாடு கொண்டதாகும் இதன் கடியால் வீக்கம், அரிப்பு, குத்தல் நோவு, சோர்வு, மலத்தில் பலநிறத் தோற்றம் உண்டாகும். இதற்குச் சாரணையை எடுத்துத் துவைத்து அதன் சாற்றைக்கடிவாயில் பூசுவதுடன் அரணைக்குரிய சிகிச்சைமுறைகளையும் உபயோகிக்கலாம்.

(தொடரும்)

## இவ்வாரம் எப்படி?

### இன்று

மாதம்- ஐப்பசி
திகதி- 26 [11-11-1984]
வாரம் ஞாயிறு
திதி - திருதியை பின்இரவு 2-10வரை
நக்ஷத்திரம்- ரோகிணி முற்பகல் 10-24ன்மேல் மிருகசீரிடம்.

### மேஷம்

வேண்டாத சிந்தனைகள் மனதில் தோன்றும். தொழிலில் நஷ்டமேற்படும், கொடுக்கல் வாங்கல் விடயத்தில் மிகவும் கவனமாக இருக்கவும் உடல் நலம் பாதிக்கப்படலாம். பொருளும் செலவாகும்.

### ரிஷபம்

மனத்தில் போராட்டங்கள் அதிகரிக்கும், இனத்தவர் ஒருவர் மீது ஆத்திரம் பிறக்கலாம். பிள்ளையொன்றின் உடல் நலமும் பாதிக்கப்படலாம். எதற்கும் ஆத்திரப்படாது பொறுமையுடன் இருப்பது நன்று. கடன் தொல்லையும் அதிகரிக்கும். புதிய முதலீடுகளைப் பிற்போடவும்.

### மிதுனம்

மேலதிகாரிகளுடன் தொடர்பு கொள்வதற்கு இவ்வாரம் உகந்ததாகும். உறவினர் மத்தியில் செல்வாக்குப் பெருகும். குடும்பத்திலும் மகிழ்ச்சியான நிலை தென்படும். இவ்வாரம் பொறுமை வேண்டும்

### கடகம்

திடீர்திருப்பம்வாழ்க்கையை வளப்படுத்தும். ஆசை அலைகளினல் அவப்பெயருக்கு இடமுண்டு எதிலும் அவசரக் கோலம் தென்படும். துரிதகதியில் செயலாற்ற முனைந்து தோல்வியை முத்தமிடலாம். சகோதரவழியால் சஞ்சலமான செய்தி கிடைக்கக்கூடும். இவ்வாரம் அவதானம் வேண்டும்.

### சிம்மம்

கல்வித்துறையில் உற்சாகம் பிறக்கும். வாகனச்சொந்தக்காரர்களுக்கு நல்லவாரம். சிலருக்குத் தாய்வழியால் தனமும் சேரும். தொழில்துறையில் முன்னேற்றம் காணப்படும். சகோதரவழி பொருள்வரவிற்கும் இடமுண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சிநிலவும். சுபவாரம்.

### கன்னி

புத்திரவழியால் புகழ்வந்து சேரும். வெளியூர்ப் புதினமும் உண்டு குடும்பத்தில் சுமுகமான நிலை தென்படும். புதிய தொடர்புகள் ஏற்படும், அதன் வழி முன்னேற்றமும் மகிழ்ச்சியும் தென்படும். நன்மையான வாரம்.

### துலாம்

முன்னேற்றப் பாதையில் தடைகள் பல தாக்கும் இருள் படர்ந்த சம்பவம் ஒன்று மீண்டும் நினைவுக்குவந்து வேதனையைத் தரும். மின்னியல் பகுதியில் கடமையாற்றுபவர்கள் அதிககவனத்துடன் இருக்கவேண்டும்

### விருச்சிகம்

களஸ்திரவழியால் நன்மைகள் வந்துசேரும். குடும்பத்தில் தென்றல் வீசும் காதலருக்குக் கனகுஷியானதினம். பெற்ருேர்களின் ஆதரவு கிடைக்கும். இல்லத்தில் இனிமையான சம்பவங்களுக்கும் இடமுண்டு. சுபவாரம்.

### தனுசு

அவசரப்போக்கினுல் அதிகாரிகளைப் பகைத்துக்கொள்ளாதீர் எதற்கெடுத்தாலும் ஏற்படும் ஆத்திரத்தை அடக்கி நடக்கவும் வணிகர்கள் வாழ்க்கை சோதனை நிறைந்ததாக இருக்கும். மாணவர்கள் உணர்ச்சி வசப்படாதிருத்தல் நன்று. அமைதியான வாரம்.

### மகரம்

புண்ணிய காரியங்களில் உற்சாகம் பிறக்கும். ஏழைகளுக்கு இரங்குவதில் முன்னிற்பீர்கள் மற்றவர்கள் உங்களைப்பின் பற்றக்கூடிய சூழ்நிலை உருவாகும் நல்லவாரம்.

### கும்பம்

புதிய தொழில் குறித்துச் சிந்தனை உருவாகும் கூட்டு வியாபாரத்தால் முன்னேற்றமுண்டு. புதுமனைகட்டுவதிலும் சிலரது கவனம் திசைதிருப்பப்படலாம். பணபலமும் உண்டு. நன்மையான வாரம்.

### மீனம்

உண்மை வழிநின்று உயர் வடைவீர்கள் நீண்டநாள் எதிர்பார்த்த நிதிவசதிகிடைக்கலாம். வாழ்க்கை திருப்திகரமாக இருக்கும். மூத்த சகோதரத்தின் மூலம் பெருமை தரும் சம்பவங்கள் இடம் பெறும். மங்கலமான வாரம்.

**திருமதி. க. வே. ரவீந்திரன்**

## சைவ சமயத்தில் உபநிடதங்களின் முக்கியத்துவம்

(10ம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்கிறபோது சைவசித்தாந்தத்துக்கு மூலாதாரமாக உபநிடதங்களைக் கூற எந்தவித நியாயமுமில்லை.

'பிரஸ்தானத்திரயம்' என்ற சொல்லாட்சி இந்து மதத்தில் கூறப்படுகிறது. இந்து மதத்தவர்க்குப்பிரதானமான மூன்று நூல்கள் அல்லது அடிப்படையான மூன்று நூல்கள் என்பது இதன்பொருளென்பர்.

சைவசித்தாந்தம் பிரஸ்தானத்திரயத்தில் உள்ளடக்கப்படவில்லை. இதனைக் கவனித்த பண்டிதமணி சி கணபதிப்பிள்ளையவர்கள் சைவ சமயத்துக்கென 'பிரஸ்தான சதுட்டயம்' என்ற சொல்லாட்சியையும், விடயத்தையும் அளித்துள்ளார், அவையே சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம், திருவருட்பயன் ஆகிய நான்கு சைவசித்தாந்த சாஸ்திர நூல்களுமாகும்.

முடிவாகக் கூறினுர் உபநிடதங்கள் எழுந்த காலச்சூழல் வேறு. சைவசித்தாந்தங்கள் எழுந்த காலச்சூழல் வேறு. வேதாந்தம் எனும் உபநிடதங்கள் வேத இலக்கியத்தினை மூலாதாரமாகக் கொள்வது போல சைவசிந்தாந்தமாகிய பதினுன்கு மெய்கண்ட சாஸ்திரங்களும் பன்னிருதிருமுறைகளை மூலாதாரமாகக் கொள்கின்றன. இந்து தத்துவ ஞான நூல்களின் முன்னேடி உபநிடதமே. ஆனுல் முன்னேடி வேறு மூலம் வேருகும்.

## இந்திரா காந்தி

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தன்மையும்ஜனநாயக அபிவிருத்தியும் அத்தியாவசியமானது என்று மனப்பூர்வமாக நம்பும் மேல் நாட்டினர்க்கு புதுச் சுதந்திர ஆசியாவையும் ஜவஹர்லால் நேருவின் உள்ளத்தையும், மனத்தையும் அனுதாபத்துடன் அறிந்து கொள்வதற்கு முயற்சிப்பதை விட வேறு சிறந்த வழி ஒன்றிருப்பதாக நான் நினைக்கவில்லை' (பக் 153, 177) மொழி பெயர்ப்பு தினமணி உதவி ஆசிரியர் என் ராமரத்தினம்.

குடிமக்கள் சொன்னபடி குடி வாழ்வு நடத்தியும், குடிதழீஇக்கோலோச்சும் மாநில மன்னனுகவும் விளங்கியதோடு ஜனநாயகியாக சர்வதேச அரசியல் வானில் பேரொளி பரப்பிக் கொண்டிருந்த 'பாரத மாதா' அணைக்கப்பட்டு விட்டது. மகாத்மா காந்தி அடிகள் நிலைக்கு உயர்ந்துவிட்ட மனிதத் தெய்வம் இந்திரா காந்தி.

இடுக்கட்படினும் இளிவந்த
-செய்யார்
நடுக்கற்ற காட்சியவர்.

அரசியல் நேர்மை, செங்கோன்மையுள்ளவரை இந்திராவின் புகழ் நீடு நிலைக்கும்.

## குறுநாவல்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

செல்லர் அப்போது தான் முதல்தடவையாக தனது குடும்ப விடயத்தைப் பற்றி வேருெருவருடன் கதைத்தார்.

''செல்லர்... ஊர் முழுக்க இந்தக் கதைதான் இப்ப...''

''ரெண்டு சோதனையில பாஸ் பண்ணின உடன கழுசானுகளையும் போட்டுக் கொண்டு, தாங்கள் ஏதோ பெரிய துரைமார் எண்டு நினைப்பு... என்ர வசதிக்கும் தகுதிக்கும் ஏணி வைச்சாலும் எட்டுமே '' பொரிந்து தள்ளினுர் செல்லர்.

அந்த நேரம் பார்த்தா ஷர்மினியும் தேநீர் கொண்டு வர வேண்டும் தகப்பனின் தகுதியை நினைக்க கோபத்திஞேடே சிரிப்பாயுமிருந்தது அவளுக்கு.

''காசு இருப்பவர்களெல்லாம் தகுதியானவர்கள் என்ருல், சவூதியில் 'லேபரா' இருக்கிற நடராசாவும் தகுதியான ஆள்தானே. அவர் எங்கட தோட்டதில கூலி வேலை செய்யேக்க இல்லாத 'தகுதி' இப்ப அவருக்கு கிடைச்சிற்றுது '' முணுமுணுத்தவாறு உள்ளே சென்ருள் ஷர்மினி.

கந்தையரும் விடைபெற செல்லர் மனதில் பல யோசனைகள் தோன்றின.

(வளரும்)



# சிறுவர் மஞ்சரி

★ தொகுப்பு: என். செல்வராஜா

## மூட வியாபாரி

ஒரு ஊரிலே ஒரு வியாபாரி வாழ்ந்துவந்தான். அவன் ஒரு மூடன். அவன் பக்கத்து ஊரில் உள்ள சந்தையில் தன் பொருட்களை விற்று வந்தான்.

ஒரு நாள் அவ்வூரில் பெரும் பஞ்சம் வந்தது. வியாபாரிக்கு விற்பதற்கு ஒரு பொருளும் கிடைக்கவில்லை. அவன் தன் பழைய துணிகளை ஒரு மூடையாகக் கட்டிக்கொண்டு சந்தைக்குப் போனான்.

அங்கு அவன் தன் பழந்துணிகளைப் பரப்பி வைத்து விட்டு அவற்றுக்கு விலைபேச ஆரம்பித்தான். அவை பழைய துணிகளாக இருந்தமையால் எவரும் அவற்யை வாங்க முன்வரவில்லை. வியாபாரிக்கோ மிகவும் வேதனையாக இருந்தது.

அப்போது அவனுக்கு அருகில் வியாபாரம் செய்து கொண்டிருந்த அவனது நண்பன் இந்த மூட வியாபாரியைப் பார்த்து ''நண்பா! பழைய துணிகளைக் கொண்டு வந்து வைத்து விற்க முயன்றால் யார்தான் வாங்குவர்? நீ போய் புதுத்துணிகள் கொண்டு வா! நானே விற்றுத் தருவேன்'' என்றான்.

வியாபாரியும் தன் துணி மூடையை கட்டிக்கொண்டு திரும்பத் தன் கிராமத்துக்குச் செல்லானான். பழைய துணிகளை எப்படிப் புதுத்துணிகளாக்குவது என்பது அவனுக்குக் கவலையாகவிருந்தது.

வியாபாரி கவலையுடன் தன் கிராமம் நோக்கி நடந்து செல்கையில் ஒரு பொற்கொல்லனின் பட்டறையைத் தாண்ட வேண்டியிருந்தது. வியாபாரி அந்த இடத்தை தாண்டும் போது அந்தப் பொற் கொல்லன் நெருப்பில் தங்கத்தை இட்டு உருக்கிக்கொண்டிருந்தான். வியாபாரி அதனை ஆச்சரியத்துடன் பார்த்து விட்டு அந்தப் பொற் கொல்லனின் அருகே சென்று ''ஐயா! ஏன் பொன்னை உருக்குகிறீர்கள்? தயவு கூர்ந்து சொல்லுங்கள்'' என்று பணிவுடன் கேட்டான்.

அதற்குப் பொற்கொல்லனும் ''என்னிடமிருந்த பழைய பொன்னை புதுப்பொன்னாக்குவதற்காகவே இதை உருக்குகின்றேன்'' என்று பதில் அளித்தான்.

இதைக்கேட்ட வியாபாரியின் மனதில் ''பளிச்'' என்று ஒருயோசனை உதித்தது. 'எனது துணிகளையும் நெருப்பிலிட்டு உருக்கிப் புதுத்துணியாக்கினால் என்ன?'' என்று நினைத்தான்.

உடனடியாகவே அவன் செயலில் இறங்கினான். சில விறகுகளைப் பொறுக்கி வந்து தீ மூட்டினான். அதற்குள் தன் மூட்டையிலிருந்த துணிகளை ஒவ்வொன்றாக இட்டான். துணிகள் எரிந்து சாம்பராயின.

அந்தோ பாவம்! பழைய துணிகளெல்லாம் சாம்பராகிக் காற்றுடன் கலந்த பின்னரே அவனுக்கு ஞானோதயம் வந்தது தன் அறியாமையை எண்ணிக்கலங்கினான்.

சி. கேதீஸ்வரன்
7C
யாழ்/இந்துக்கல்லூரி

## விண்வெளிச் செய்திகள்

● மிகக்கூடிய ஒளி படைத்த நட்சத்திரம் ''சிரியஸ்''

● விண் வெளியின் வெப்ப நிலை 273 16

சூரியனின் மேற் பரப்பின் வெப்ப நிலை 6000°c

சந்திரனுக்கும் பூமிக்கும் இடைத்தூரம் 22,6970.9 மைல்.

பூமியைச் சூழ்ந்து 185—200 மைல் வரை வாயுமண்டலம் உண்டு.

செவ்வாய் சூரியனை ஒரு தடவை சுற்ற 687 நாட்கள் செல்லும்.

சூரியனுக்கும் பூமிக்கும் இடைத்தூரம் சராசரி 9·3 கோடி மைல் [14,973 மில்லியன் கி. மீ]

செவ்வாயின் உபகிரகங்கள் டைமோஸ், போபோஸ் என்பவையாகும்

பூமியின் வாயுமண்டலத்துக்கு மேலுள்ள மண்டலம் மின்னணு மண்டலம்.

பூமி 15 அல்லது 17 ஆண்டுகளுக்கு ஒருமுறை சூரியனுக்கும் செவ்வாய்க்குமிடையே வருகிறது

சந்திரனில் மலைகள் உண்டென்பதை முதலில் கண்டறிந்தவர் கலிலியோ.

மின்னல் வருடமொன்றுக்கு சராசரி எத்தனைமுறை மின்னுகின்றது தெரியுமா? 160 லட்சம் தடவை!

தொகுப்பு:

கீதா ஹரிகரசர்மா.
கந்தர்மடம்,
2, சாந்தினி அருந்தவநாதன்,
7-ம் தரம் உடுவில்,
மகளிர் கல்லூரி.

## விளையாட்டுத் தகவல்கள்

★ இலங்கையின் தேசியவிளையாட்டு — எல்ல.

★ அமெரிக்காவின் தேசிய விளையாட்டு - பேஸ்போல்.

★ இந்தியாவின் தேசியவிளையாட்டு — கபாடி.

★ ஏழு கடலையும் நீந்தியவர் எனப்பெயர் பெற்ற வீரர் — மிகிர் சென்.

★ பாக்குநீரிணையை முதலில் நீந்திக்கடந்தவர் — நவரத்தினசாமி.

★ யூடோ விளையாட்டில் சிறந்த நாடு — ஜப்பான்.

★ கிரிக்கெட்மட்டை செய்யப் பயன்படும் மரம் — வில்லோ.

★ ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் என அழைக்கப்படுவது எந்த நாடு — சுவிட்சர்லாந்து.

★ கால் பந்தாட்டத்துக்கு இந்தியாவில் பழங்காலத்தில் வழங்கிய பெயர் — ரேரன்ட்.

★ உலகின் முதல்மோட்டார் கார் ஓட்டப் பந்தயத்துக்குப் பயன்படுத்திய எரிபொருள் — நீராவி.

★ எட்டாவது ஆசிய விளையாட்டுப் போட்டி நடைபெற்ற இடம் எது — தாய்லாந்து.

தகவல்:

கீதா ஹரிஹரசர்மா.
கந்தர்மடம்.
எஸ் ஜீவ முகுந்தன்,
பருத்தித்துறை.
சாந்தினி அருந்தவநாதன்,
7ம் தரம். உடுவில்,
மகளிர் கல்லூரி.

## நீங்களும் பாடலாம்- 5

'நீங்களும் பாடலாம் - 5' சரியாக அனுப்பியவர்கள் விபரம்.

க. சி. சுப்பிரமணியம் மாலிசந்தி, அல்வாய் தெற்கு, ப. கார்த்திகேயன் லட்சுமிவில்லா, நீர்வேலி, நீ. சேதுபரன், சிறிபதி, பத்தமேனி, அச்சுவேலி, சி. கேதீஸ்வரன், ஈஸ்வர இல்லம் ஆனைக்கோட்டை, ந. குகதாசன் ஆத்மஜோதி ஒழுங்கை ஏழாலை, தெய்வேந்திரம் மஞ்சுளாநிதி 6௭7/15, மானிப்பாய்வீதி ஒட்டுமடம், செல்வி சுபத்திராதேவி 613, நாவலர் வீதி யாழ்ப்பாணம். சிவகணேசன் அருந்தவநாதன் யாழ் பரியோவான் கல்லூரி சுண்டுக்குளி, திருச்சிற்றம்பலம் திருச்செல்வி வேம்படி மகளிர் கல்லூரி, சி. சயந்தன் யாழ் இந்துக்கல்லூரி 8-B யாழ்ப்பாணம், கங்கா சண்முகராஜ சர்மா இல-7 கனக சபை அவெனியூ சிவலிங்கப் புளியடி, தமிழ்ச்செல்வி நாசேசு சென்யேம்ஸ் மகளிர் வித்தியாலயம் குருநகர். ஜீவராஜ் பளை வீமன்காமம் தெல்லிப்பளை, க. நவமலர் யாழ். இந்துமகளிர் கல்லூரி, E. C. அகஸ்ரீன் சம்பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம், தி. ரமணன் கௌரி கிளினிக் கண்டி வீதி கிளிநொச்சி, சுவீற்று குமாரசாமி விநாயக முதலியார்வீதி பருத்தித்துறை. தி கஸ்தூரி 167/5 கோவில்வீதி நல்லூர், கி. அசோகன் ஹாட்லிக்கல்லூரி 10-ம் வகுப்பு பருத்தித்துறை, நடராசா ஜெயந்தி பலாலிவீதி, திருநெல்வேலி வடக்கு, றெசாணி ஹாஜி அபூசாலிஹ் யாழ். உயர்தர வேம்படி மகளிர் கல்லூரி, பா. பாலமோகன் 27, பழம்வீதி கந்தர்மடம், கி. வ. இந்திரா யாழ். கரணவாய் ம. வி கரவெட்டி, S. ஆனந்தராஜா கோண்டாவில் வடக்கு C. R. D S. T. ராஜீ ராஜஸ்தான் வீமன்காமம் தெல்லிப்பளை, திருமதி ராஜன் சாந்தி இராசவீதி நீர்வேலி வடக்கு, சபாரத்தினம் வதனி நீர்வேலி வடக்கு, இ. சிவலிங்கம் அச்சுவேலி தெற்கு. செல்வி எஸ். மாலினி மணிமஹால் மண்டைதீவு-4, பி. சண்முகதாஸ் 7B வகுப்பு செங்குந்தா இந்துக் கல்லூரி, K. சண்முகப்பிரியா நீர்வேலி தெற்கு, ரஜனி நல்லையா தாவடி இந்துக் கலவன் பாடசாலை 9ம் வகுப்பு, கௌரி நடராஜா 10ம் வகுப்பு கொக்குவில் இந்துக்கல்லூரி, சி. கங்காதர்சினி 39/6, 3 ஆம் ஒழுங்கை மின்சார நிலையவீதி யாழ்ப்பாணம், சி. யசோதரா C/o சிவபாதம் சித்தங்கேணி, பதஞ்சலி சுந்தரலிங்கம், நளாயினி சுந்தரலிங்கம் இருவரும் யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம், ந. ஹேமாவதி, பொற்கலந்தம்பை தெல்லிப்பளை, ஜெனனி வேங்கடேச ஐயர் சோதிடமடம் கொக்குவில், சங்கீதா மகேசன் மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம், த சதீஷ்குமார் நெல்லியான்வீதி சுழிபுரம், க. ராதை றே. க. வித்தியாலயம் மயிலிட்டி, சு. ராஜ்குமார் 6E மகாஜனக் கல்லூரி, கே. வை. யோகரூபி வகுப்பு 8வேம்படி மகளிர் கல்லூரி, செல்வி மா. யசோதா சலைகுலவீதி உரும்பிராய் தெற்கு, எம் வாசுகி மூனமடு வவுனியா, சி. சந்திரவதனி குருவீதி கே. கே. எஸ், கமலராணி நடராஜா கமலபதி இணுவில்மேற்கு, த யோகேஸ்வரன் 28 மணிப்புரி யாழ்ப்பாணம், பா. பிரசன்னா 100பாண்டியன் குளம். வவுனிக்குளம், அ. அனிற்று அஜித்தா கரவெட்டி மேற்கு, சுந்தரராஜா பிரம்மானந்தர் கமலவாசா சித்தன்கேணி, ஈ. குமரன் மே/பா க. ஈஸ்வரநாதன் சுதுமலைதெற்கு, சற்குணவதி சண்முகலிங்கம் யாழ். சேர். வைத்தியலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயம் வேலணை, ப. மயூரேசன் 102, அரசடி வீதி கந்தர்மடம், க. ந ஸ்ரீ முருகதாசன் சிவஜோதி ஸ்ரோர் 5ம் வட்டாரம் நயினாதீவு, செல்வி நித்தியவதனி நாகரெத்தினம் யாழ் இந்து மகளிர் கல்லூரி, ஜெயசெல்வி பஞ்சலிங்கம் செல்வ மஹால் உரும்பிராய் கிழக்கு, மு. சதானந்தன் அண்ணாவி வளவு சுன்னாகம். வோ. கனகசபாபதி ஏனசிலி சண்டிலிப்பாய் எஸ். விஜயகுமாரி 3, இராமநாதன் வீதி யாழ்ப்பாணம். செ. தேவன் சரவணை கிழக்கு வேலணை 9. கு. சுரேஸ்குமார் இல. 27, மார்க்கட் றோட், சுன்னாகம். வே. சிவநிதி சாவகச்சேரி இந்துக்கல்லூரி நுணாவில் மேற்கு. இ. வனித்தா அ. மி. த. க பாடசாலை புன்னாலைக்கட்டுவன் வடக்கு கி. ஹெலன்மேரி கொலனி, பொலிகண்டி வல்வெட்டித்துறை. இ குகாநந்தினி நாவலர் பாடசாலை கோப்பாய். க. சுந்தரக்குமார் இந்து மஹால் கொக்குவில் கிழக்கு வி. மாலதி வட்டு. கிழக்கு சித்தன்கேணி. து. வசீகரன் 103. பாங்சால் வீதி. யாழ்ப்பாணம் ஸ்ரீ ஸ்ரீ சேதுபரம் ''சிறீபதி'' பாரதிவீதி பத்தைமேனி அச்சுவேலி, சி. சிவாஜினி சிவசுத பவனம் மாதகல் மேற்கு. நா. கோபிகிருஸ்ணா திருநகர் கிளிநொச்சி. கௌசலா கணபதிப்பிள்ளை அனலைதீவு-7.

## கதிரை

கதிரை நல்ல கதிரை
நான் இருக்கும் கதிரை
நான்கு கால் கதிரை
நண்பன் தந்த கதிரை

சின்னச் சின்னக் கதிரை
சிங்காரக் கதிரை
சிறந்த குஷன் கதிரை
சிவப்புநிறக் கதிரை

நான் இருக்கும் கதிரை
நண்பர் கூட இருப்பார்
தங்கையும் இருப்பாள்
தங்கமான கதிரை.

லோ. தாமோதரன்.
2B வகுப்பு,
புனிதஜோன் பொஸ்கோ
வித்தியாலயம்.
யாழ்ப்பாணம்.

## தெரிந்திருக்க வேண்டியவை

லண்டனில்புகழ்பெற்ற கிரிக்கெற் மைதானம்—ஓவல்

அமெரிக்காவின்— முதல் ஜனாதிபதி— ஜோர்ஜ் வாஷிங்டன்

கருநிறநாக்குள்ள நாயினம்—செள

புகைப்படச் சுருளைக் கண்டறிந்தவர்— ஜோர்ஜ் ஈஸ்ட்மன்

ஹெலிகப்டர் முதலில் பறந்த ஆண்டு—1907

மழைக்குக் குடை செய்யக் கண்டவர்—ஜோனஸ் ஹனவே

பாம்பில்லாத நாடு— அலஸ்கா

விண்வெளி சென்ற முதல் பெண்மணி— வலன்றினா திரெஸ்கோவா

கியுபா நாட்டின் மொழி—ஸ்பானிஷ்

மீனினத்தின் எண்ணிக்கை —இருபத்தாறுயிரம் இனங்கள்

உணவிலேயே நீர்கொள்ளும் உயிரினம் —திமிங்கிலம்

குறைந்த பகல் பொழுதுள்ள நாள்— டிசம்பர் 21

வானில் பெரிய நட்சத்திரம் —ஒரிகா

பூமியதிர்வை அளவிடும் கருவி— சிஸ்மோ கிராப்

உலகின் அரைப்பங்கு நிலக்கரியுள்ள நாடு — அமெரிக்கா

மும்முறை நோபல் பரிசு பெற்றவர்— அல்பேட் சுவெற்சர்

முதல் ஆங்கிலக் கவிஞர்—சோசர்

உலகப் படத்தை முதலில் வரைந்தவர்—தொலமி

'ஹோமியோபதி' முறைறைக் கண்டறிந்த வைத்தியர் கனேமன்

இராமகிருஷ்ண மடத்தின் தாபகர் —சுவாமி விவேகானந்தர்.

தொகுப்பு: வண்ணையூரான்
வண்ணார்பண்ணை

## நாடுகளும் தலைவர்களும்

இலங்கை— ஜே. ஆர். ஜயவர்த்தன.
அமெரிக்கா— ரொனால்ட் றீகன்
இங்கிலாந்து— மார்கிரெட் தட்சர்
இந்தியா— ரஜீவ் காந்தி
ரஷ்யா— சேரன்கோ
பாகிஸ்தான்— சியாவுல்ஹக்
சீனா— டெங்-ஷியாவோ-பிங்
எகிப்து—ஹூசெய்னி மூபாரக்
ஈராக்— சதாம் ஹூசைன்
மலேசியா— அப்துல ரிங்கு ரஹ்மான்
பிலிப்பைன்ஸ்— பேர்டினட் மார்க்கோஸ்
தென்கொரியா— சுண்டு குவான்
இந்தோனேஷியா— சுகார்டோ
லெபனான்— அமின் ஜிமெயில்
லிபியா—மு அமர் கடாபி
கியுபா—பிடெல் காஸ்ட்ரோ
சம்பியா— கென்னத் கவுண்டா

தகவல்: மு. விஜேந்திரா' ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை. கேதீசன் செல்லையா, நீர்வேலி வடக்கு

## பள்ளிப்பகிடி

ஆசிரியர்: யாழ்ப்பாணம் எந்த வலயத்தைச் சேர்ந்தது?
மாணவன்: கண்காணிப்பு வலயத்தைச் சேர்ந்தது.

●

ஆசிரியர்: கொழும்பு எந்த வலயத்தைச் சேர்ந்தது?
சுதந்திர வர்த்தகவலயத்தைச் சேர்ந்தது.

பா. ரவிராஜ்
8D, யாழ். மத்திய கல்லூரி.

பாலன்: அப்பா, எனக்கு ஒரு 'ஹெல்மட்' வாங்கித் தாருங்கோ,
தந்தை: ஏன் ஹெல்மட் உனக்கு?
பாலன்: வாத்தியார் எதற்கும் எனக்குத் தலையில் தான் குட்டுகிறார்.

●

துரை: எங்கள் டீச்சர் வகுப்பில் தூங்கும்போது கண்ணாடி போட்டுக்கொண்டு தூங்குகிறாரே ஏன்டா சிவா?
சிவா: கனவில் வருபவர்களை தெளிவாகப்பார்ப்பதற்கு.

துரை சிவபாலன்
புங்குடுதீவு-3

## நான் பார்த்து ரசித்த இயற்கை அழகு

மலைநாட்டுப்பகுதி இயற்கை அழகு நிரம்பிய இடமாகும். இலங்கையின் மத்தியபகுதியில் நிறைய மலைகள் உண்டு, நான் எனது தந்தையுடன் கடந்த விடுதலையின்போது கம்பளைக்குப்போனேன். அங்கிருந்து கண்டி, நாவலப்பிட்டி, நுவரெலியா, பண்டாரவளை, பதுளை, ஆகிய பல இடங்களுக்குச் சுற்றுலாப் போனோம். எங்கும் பசுமையாகக் காணப்பட்டது. பாதைகள் பாம்பு நெளிவது போன்று பார்க்க வேடிக்கையாக இருந்தது. மலையில் இருந்து அருவி ஓடும் அழகு ரசிக்கத்தக்கது. எங்கும் அழகான பூந்தோட்டங்களைக் காணலாம்.

தேயிலைத் தோட்டங்களில் கொழுந்து எடுக்கும் காட்சி எனக்குப் புதுமையாக இருந்தது இறப்பர் மரங்கள் வரிசை வரிசையாகக் காட்சி அளித்தன. பாடசாலை தொடங்கும் நாள் நெருங்கியதால் ஒருவாரத்தில் நானும் அப்பாவும் எமது சொந்த ஊராகிய மன்னாருக்குத் திரும்பி விட்டோம். ஆனாலும் அந்த இயற்கை அழகு நிறைந்த இடத்தை என்னால் இன்னும் மறக்க முடியவில்லை

செல்வன்
ச. குகவரதன்
3ம் வகுப்பு B,
புனித சவேரியார்
ஆண்கள் கல்லூரி. மன்னார்.

# இலக்கியச்சந்தி

## சிறுவர் இலக்கியமும் சித்திரங்களும்

யாழ் இலக்கியவட்டம் சமீபத்தில் கல்வயல் வே. குமாரசாமியின் 'பாப்பாப்பா' என்னும் பாலர் பாடல்தொகுதியினை அறிமுகம் செய்தது.

செம்பியன் செல்வனின் தலைமையில் மயிலங்கூடலூர் பி. நடராஜன் (ஆடலிறை) சொக்கன், கவிஞர் சச்சிதானந்தன் போன்ருேர், அறிமுக ஆசீர்வாத உரைகளை ஆய்வு பூர்வமாக ஒரு அறிவியல் தேடலை ஆய்வு சிறுவர் இலக்கியத்தில் நடாத்திஞர்கள். நீண்டநாட்களுக்குப் பிறகு, நல்லதொரு கருத்தாழ மிக்க இலக்கியக் கூட்டம் எனப்பார்வையாளரா ஐக்கலந்துகொண் டவர்கள் பாராட்டிச் சென்றனர்.

அவ்விழாவில் ஒரு சிறிய விவாதம்.

சிறுவர் இலக்கிய நூல்களுக்குச் சித்திரங்கள் தேவையா?

தேவை என சொக்கனும்

தேவையில்லை எனப் பண்டிதர் சச்சிதானந்தம் அவர்களும். சூழல், உளவியல், கல்வியியல் பின்னணியில் பிஜாஜே, புறூண்ணர் போன்ருேரின் கருத்துக்களை முன்வைத்துப் பேசியதைக்கேட்டவர்கள்—

சிறுவர் இலக்கியத்தின் மகத்துவத்தையும், பொறுப்பையும், நன்கு புரிந்துகொண்டனர்.

எனக்கு—

கி ராஜநாராயணன் தனது கதைகளைப் பத்திரிகைகளுக்கனுப்பும்போது அவற்றுக்குப் படம் போடக் கூடாதெனக் கண்டிப்பாக எழுதுவ தாக தனது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தது ஞாபகத்திற்கு வருகிறது. அது வளர்ந்தோர் இலக்கியம். சிறுவர் இலக்கியத்திற்கு சித்திரங்கள் அவசியமா?

உங்கள் கருத்தை எழுதுங்களேன்.

## செங்கை ஆழியான்

ஈழநாடு வாசகர்களின் அபிமான நூலாசிரியரின் கிடுகுவேலி, கடற்கோட்டை இரண்டும் வாசகர்களைப் பெரிதும் திருப்திப்படுத்திய நாவல்கள். 'கிடுகுவேலி' - ரஜனியின் வெளியீடாக நூலுருவம் பெற்றது. இப்போது கடற்கோட்டை தூலுருவம் பெற்றுக்கொண்டிருக்கிறது. இம் மாத முடிவிற்குள் வெளிவரக் கூடும்

இலக்கியச் சந்தியில் - இருபத்தைந்து சிறுகதைகள்' கொண்ட சிறுகதைத்தொகுதி பற்றி எழுதியிருந்தமை செங்கை ஆழியானைப் பெரிதும் கவர்ந்துள்ளது. ஈழத்துச் சிறுகதை இலக்கியவரலாற்றை உணர்த்தவும், பழைய தலைமுறை எழுத்துக்களை புதிய சந்ததிகளிடையே அறிமுகம் செய்யவும் கூடிய முறையில் ஈழத்தில் வெளிவந்த சிறுகதைகள் இருபத்தைந்தை ஒரே நூலாக வெளியிட ஆவல் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கிருர். வாசகர்களும் தங்களின் மனதைக் கவர்ந்த எழுத்தாளர்களின் தலைசிறந்த படைப்புக்கள் பற்றிய கருத்துக்களை தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிருர் இது நூல் வெளிவந்ததன் பின் ஏற்படக்கூடிய குற்றச்சாட்டுக்கள் பலவற்றைத் தவிர்க்க உதவலாம்.

## கே. டானியல்

'மையக்குறி' நாவலின்மூலம் ஈழநாடு வாசகர்களைக்கவர்ந்து கொண்ட முதிய எழுத்தாளரும் முற்போக்கு வட்டத்தைச் சார்ந்தவருமான கே. டானியலின் இருநாவல்கள் 'கானல்' 'அடிமைகள்' தென்னகத்தில் வெளியாகின்றன. இதில் 'அடிமைகள்' நாவல் வெளியீடு சென்ற மாதம் தமிழகத்தில் கோலாகலமாக வெளியிட ஏற்பாடாகியிருந்தது. நாவலாசிரியர்டானியல்விசேடமாக அழைக்கப்பட்டிருந்தார். ஆனுல் சென்ற மாதமுற்பகுதியிலேயே ஈழத்தவருக்கான தென்இந்தியப் பிரயாணச் சீட்டுக்கள் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளமையால் டானியல் செல்லமுடியவில்லை.

## காவலூர் எஸ். ஜெகந்நாதன்

சமீப காலங்களில் எழுதத் தொடங்கி அதிக படைப்புக்களையும், நூல்களையும் வெளியிட்ட சுறுசுறுப்பான இளைஞர் சமீபகாலமாக தென்னிந்தியாவை வாசஸ்தலமாகக் கொண்டு அடிக்கடி இலங்கைக்கும் இலக்கிய யாத்திரை செய்துவருபவர்.

கொழும்புத்தினசரி ஒன்றின் வாராந்த வெளியீட்டிற்கு -தென்னக எழுத்தாளர்கள், இலக்கிய முயற்சிகள் இலக்கியக் கூட்டங்கள் பற்றியும், தமிழ்த்திரைப்படச் செய்திகள் 'ஸ்டில்ஸ்' என்பன வற்றையும் அனுப்பிக் 'கலைச் சேவை' புரிந்து வருகிருர்.

இந்தியாவில் குங்குமம். தாய் போன்ற சஞ்சிகைகளில் சிறுகதைகளும், பேட்டிக் கட்டுரைகளும் எழுதிவருகிருர் அமுதசுரபியின் எழுத்தாளர் கூட்டத்தில் ஒருவர்.

ஈழத்திலிருந்து செல்லும் எழுத்தாளர்களை இலக்கியக் கூட்டங்களை ஏற்பாடு செய்து

### 'ஜராதுஷ்டிரன்'

தென்னக எழுத்தாளர்களிடம் அறிமுகம் செய்து வருகிருர். சமீபத்தில் மல்லிகை ஆசிரியர் சென்னையில் கலந்துகொண்ட இலக்கியச்சந்திப்பின் ஏற்பாட்டாளரில் இவர் ஒருவர்!

தென்னகத்தில் - வளர்மதி என்றபெயருடைய நூல் வெளியீட்டகம் ஒன்றை ஆரம்பித்து ஜோதில்லதா கிரிஜா, அன்னலக்ஷ்மி ராசதுரை, டானியல் அன்ரனி போன்ருேரின் நூல்கள் ஏழினை இதுவரை வெளியிட்டிருப்பதாக அறிகிருேம்.

இலக்கியப் பலம்ஒன்றினையே ஆதாரமாகக் கொண்டு ஈழத்திலும், இலங்கையிலும் தன் வாழ்க்கைச் சகடத்தை ஓட்டிச் செல்லும் இவர் பாராட்டிற்குரியவர்

## செ. யோகநாதன்

'இரவல் தாய் நாடு' என்ற அளவிலும் தரத்திலும் பெரிய குறுநாவல் தொகுதியினுல் தென்னகவாசகர், எழுத்தாளர்களின் கவனத்தை தம்பால் ஈர்த்துக்கொண்டவர். தர்மதா வெளியிட்ட நூல்களில் முதலாக ஒரு சில மாதங்களில் தீர்ந்துபோன நூல் இதுவாகும்.

இவரது இருபத்தாறு சிறுகதைகள் கொண்ட தொகுதி தான் தேடுதல். தமிழில் வெளிவந்த மிகப்பெரிய சிறுகதைத் தொகுதியும் இதுவாகத்தானிருக்கும்.

# ரஜீவ் இனி ஓட்டப்போவது

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

சவால்கள் என்பது நிச்சயம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவே இருக்கும். ஆனுல் அது விமானம்; இது அரசியல். இதுவே அவர் முன்னுள்ள வேறுபாடாகும்.

ஆயினும் பிரிட்டனின் இரும்புச் சீமாட்டி பிரதமர் திருமதி. மார்கிரெட் தட்சர் ஓரிரு தினங்களிலேயே ரஜீவை தலைமுதல்கால்வரை எடைபோட்டு அவர் ஒரு அமைதியான துணிச்சல்காரர் என்று கூறியிருப்பது, இந்திரா ரஜீவினுள் மறுபிறவி எடுத்துள்ளார் என்றே எண்ணத்தோன்றுகிறது.

பிரதமர் ரஜீவின் எதிர்காலப்பணிகளைக் கூறுவதானுல், அவர் இனி ஓட்டப்போவது ஒரு மாபெரும் 'ராட்சத ஜம்போ ஜெட்' விமானத்தையே என்று சுருக்கமாகக் கூறலாம்.

* *

பிரதமர் இந்திராவின் மறைவுடன் மேற்கில் இடம் பெற்றுள்ள அதிமுக்கியமான அரசியல் நிகழ்ச்சி. அமெரிக்க ஜனுதிபதித் தேர்தலாகும்.

இந்திரா மறைவில் கவனத்தைத்திருப்பிய உலகை தன் பக்கம் ஈர்த்துள்ளது இந்த அரசியல் சம்பவம்.

## வயோதிப ஜனுதிபதி

திரு. ரெருனல்ட் றீகன் 69 வது வயதில் அமெரிக்காவில் வயதில் மூத்த ஜனுதிபதியாகத் தெரிவானுர். தொடர்ந்து 73வது வயதில் மீண்டும்அவரே தற்போது இரண்டாவது தடவையாகவும் வயதில் அதிகூடிய அமெரிக்க ஜனுதிபதியாயுள்ளார்.

'ஹொலி வூட்' டிலிருந்து [Holly wood] வெள்ளை மாளிகை வரை உயர்ந்தவர் இந்த வயோதிப ஜனுதிபதி.

திரு. றீகனின் இந்த வெற்றி இரண்டாம் உலகப்போரின் போது அமெரிக்க ஜனுதிபதியாகவிருந்த திரு. பிராங்ளின் ரூஸ் வெல்ட்டின் வெற்றிக்குப் பின்னர் கிடைத்த ஒரு மாபெரும் வெற்றி என்று வர்ணிக்கப்பட்டுள்ளது.

## போர்க்காலவெற்றி?

ரூஸ்வெல்ட்டினுடையது ஒரு போர்க்காலவெற்றி. அக்காலத்தை ஒத்த ஒரு சூழ்நிலையா மீண்டும் உருவெடுக்கிறதென்பது இந்த றீகன் வெற்றியையடுத்து உலகில் ஏற்பட்டுள்ள ஒரு கேள்விக்குறியாகும்.

இதுவரை றீகனின் ஆட்சியில் நடந்தவற்றைத் திரும்பிப் பார்ப்போம். அவருக்குச்சவால்களைக் கொடுத்த சம்பவங்கள்: நட்பு நாடான பிரிட்டனின் போக்லண்ட் யுத்தம், மேற்காசியப் பிரச்சினையில் லெபனுனினுள் ஊடுருவல், கரீபியனில் கிரெனடா முற்றுகை, மற்றும் மத்திய அமெரிக்கப் பிரச்சினைகள் இப்பிரச்சினைகள் அனைத்தையும் அவர் சாதுரியத்துடன் அணுகியிருப்பது தெளிவு.

இங்கு சாதுரியமென்பது இந்தச் சிக்கலான பிரச்சினைகளை உலகப்போராக மாற்றிவிடாததையே குறிக்கின்றது. ஆயினும் அமெரிக்காவினதும், அதன் நேசநாடுகளினதும்பாதுகாப்பு என்று கூறிக்கொண்டு உலகையே சாம்பராக்கும் அணுஆயுதங்களை அவர் வைத்துக் கொண்டிருக்கிருர்.

இதுவே அவர் மீண்டும் ஜனுதிபதியானதையடுத்து உலகின் பாதுகாப்பை ஒரு கேள்விக் குறியாக்கிவிட்டுள்ளது.

ஜனுதிபதி றீகன் தற்போது செய்ய வேண்டியதெல்லாம் அணுஆயுத யுத்தபீதியை உலகிலிருந்து முற்ருக அகற்றுவதேயாகும்.

## உலகை அழிக்கவல்ல

அணுஆயுதங்களைக் குவிப்பதில் சோவியத்யூனியன் அமெரிக்காவுடன் போட்டிபோடுகிறது என்று அவர் கருதிஞல் தாம் அந்தப்போட்டியிலிருந்து விலகவேண்டும். சோவியத் யூனியனையும் அதிலிருந்துவிடுபடச்செய்ய முயற்சிக்கவேண்டும்.

திரு. றீகன் தனது தேர்தல் பிரசாரங்களில் உறுதியான அமெரிக்காவையே அமெரிக்கர்கள் எதிர்பார்க்கிருர்கள் என்ருர். அவர் கூறியதை மக்கள் நிரூபித்தேவிட்டார்கள்.

ஆனுல் அமெரிக்கர்களின் இத்தீர்ப்பு உலகின்மனிதகுலம் முழுவதையும் பூண்டோடு அழிக்க வழங்கப்பட்டதல்ல என்பதை 'தாத்தா' றீகன் உணரவேண்டும். ★

# புதிய புத்தகம்

## உரும்பராய் சிதம்பரசுப்பிரமணியசுவாமி பிள்ளைத்தமிழ்

மூர்த்தி. தலம். தீர்த்தம் முறையாகத் தரிசித்தோர் கீர்த்தியுடன் நல்வாழ்வு வாழ்ந்திடுவார் என்பர் சான்ருேர்

மூர்த்தியினுடைய கீர்த்தியினுலேதலம்சிறப்படைகிறது. ஆங்கு புண்ணிய தீர்த்தமும் அமையுமானுல், அத்தலம் அதிவிசேடத்துக் குரியதாகின்றது. மூர்த்தி, தலம். தீர்த்தமாகிய முப்பெருமைகளோடும்கூடியது உரும்பராய் சிதம்பரசுப்பிரமணியர் திருவாலயம். பழைமை வாய்ந்த இவ்வாலயம் சிலமடைந்ததால் திருமுருகன் அடியார்கள் உள்ளத்திற் புகுந்து அடியார்கள் புனருத்தாரண வேலைகளில் ஈடுபடத் திருவருள் புரிந்துள்ளார்

### திரு. செ. தனபாலசிங்கன்

இவ்வாலயத்தின் இன்றைய சிறப்பையும், ஆலய வளர்ச்சியையும் கேட்பவர்கள் அனைவரது உள்ளங்களிலும் முதல் தோற்றுபவர் அமரர் திரு. செ. தனபாலசிங்கன் B. A. (London) அவர்களாவர். முருகன் திருவருள் கூட்ட சிதம்பர சுப்பிரமணிய சுவாமி ஆலயம் வளர்ந்ததென்ருலும், அவ்வாலயவளர்ச்சிக்கு உழைத்தவர்களில் அதிசிரேட்டம் பெற்றவர் உரும்பராய் சிதம்பர சுப்பிரமணியசுவாமியின் சிறப்பை உலகறியச் செய்தவர்கள் வரிசையில் திரு. செ. தனபாலசிங்கன் முன்வரிசையில் முதலாம் இடத்தில் இருப்பார். உரும்பராய் சிதம்பர சுப்பிரமணியர் திருப்புகழை எடுத்துப்பேசும் 'சிதம்பரசுப்பிரமணியன் புகழ்க்கதம்பம்' என்ற சிறந்த நூல் வெளிவருவதற்கு மூலகாரணமாக இருந்தவரும் இவரே.

### சிதம்பரசுப்பிரமணியன் புகழ்க்கதம்பம்

இந்நூலை இயற்றியவர் பேர் பெற்ற அறிஞர், கலைமகள் ஆசிரியர், வாகீசகலாநிதி ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன்அவர்கள் - அறிஞர் கி. வா, ஜகந்நாதன் அவர்களும், அன்பர் தனபாலசிங்கன் அவர்களும் கல்வி உலகில் ஒன்று சேர்ந்து சஞ்சரித்தவர்கள் ஈழநாட்டு முருகதலமான உரும்பராய் சிதம்பரசுப்பிரமணியன் திருப்புகழைப் பாடிய ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்கள் ஆயிரத்துஇருபத்தொன்பது கவிதைகளில் புகழ்ந்து துதிக்கிருர். அதன்காப்புச் செய்யுள் வருமாறு:

''வாஞர் உரும்பைச் சிதம்பர
சுப்பிர மண்ணியனைத்
தேஞர் தமிழால் துதிக்கத்
திருவருள் செய்துவக்கும்
கூஞர் மதியும் அறுகும்
அணிஒரு கோட்டுமதக்
காஞர் கபோலக் கரபக்
கரிமுகக் கற்பகமே''.

### சிதம்பரசுப்பிரமணியசுவாமி பிள்ளைத்தமிழ்

சிலருக்குச் சில துறைகளில் தான் ஈடுபாடு இருக்கும். எல்லாத்துறைகளிலும் ஈடுபாடுள்ள ஒருவர் நம் மக்களிடையே உள்ளார். கல்வி, கலை

### அருணுசலம் பஞ்சாட்சரம்

சமூகம் என்று சொல்லப்படுகின்ற எல்லாத் துறைகளும் அவருக்குக்கைவரும். அவர் தொட்டுப் பாராத துறைகளே இல்லை எனலாம் அவர்தான் உரும்பராய் இந்துக்கல்லூரியின முன்னைநாள் ஆசிரியர் திரு. செ. ஐயாத்துரை அவர்கள். அவர் ஒரு சிறந்த கவிஞருமாவர், இறைவன் திருவருள் அவரைத் தூண்ட பாடாமல் இருக்கமுடியாமல் பாடுகின்ற கவிஞர்தான் திரு. ஐயாத்துரைக்கவிஞர்.

கருணையே உருவான கருணுகரப்பிள்ளையார் மீது ''நான்மணிமாலை'' செய்தவர். பர்வதவர்த்தினி அம்மை அந்தாதி பாடியவர் இவர். இப்பொழுது ''உரும்பராய் சிதம்பரசுப்பிரமணியசுவாமி பிள்ளைத்தமிழ்'' என்னும் நூலினைச் செய்து அரங்கேற்றுகின்ருர். கற்றவர்கள் மற்றவர்கள் என்ற பேதமின்றிச் சகலரதும் பாராட்டுக்குரியவரான ஆசிரியர் திரு செ.ஐயாத்துரை அவர்கள் பிள்ளைத்தமிழ் நூலுக்குரிய பழைய பாரம்பரியங்களை அடியொற்றி இந்நூலினைச் செய்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

காப்புப்பருவம், செங்கீரைப் பருவம், தாலப்பருவம், சப்பாணிப்பருவம், முத்தப்பருவம். வாரானைப்பருவம், அம்புலிப்பருவம், சிற்றிற்பருவம்,

(15ம் பக்கம் பார்க்க)

# எத்தனை முறை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆழமாகப்பார்க்கலாம் அடுத்ததாக இவர்களின் நீதிபரிபாலன முறைகளைப் பார்த்து நாமும் நன்மையடையலாம். ஆனுல் இவர்களின் வேறு நல்ல கருமங்களை பின்பற்ற எங்களுக்கு தகுந்த சூழ்நிலை இல்லை. —இது இந்த நாட்டுக்கு மட்டுமல்ல பொதுவில் மூன்ரும் மண்டல நாடுகளில் காணப்படும் குறை.

எத்தனை முறை இங்கிலாந்து சென்ருலும் ஆசைதீர்வதில்லை மீண்டும் செல்லவே மனம் சொல்கிறது. அங்கே சென்று எங்கள் இனத்தோடு மாத்திரம் சீவித்தால் விஜயத்தின் தக்க பலனை அடையமுடியாது. அந்நாட்டு மக்களுடன் கலந்து வாழ்வோமானுல் வாழ்க்கையில் எத்தனையோ அம்சங்கள் உண்டு என்பதைக் காண்போம். எங்கள் வாழ்க்கை தான் சிறந்ததென்பதைத் திருப்பி ஆராய்வோம். அப்பொழுது புது அறிவு வரும். எல்லோரும் ஓர் இனம் என்ற பெரிய மனம் வரும். ஞானிகளின் ''பிறவா வரம் தருவாய்'' என்று ஈசனைக் கேட்பது சரியா என்று யோசிப்போம். அடுத்து அடுத்து நல்ல நாடுகளிற் பிறந்தால் எவ்வளவோ பார்த்து மகிழக்கூடியன உண்டு என்பதனை உணரலாம். நம் நாட்டைப் போற்றுவோம்! மறு நாடுகளின் நல்ல அம்சங்களைப் பின்பற்றுவோம்!

# அண்ணுவை

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திரா பம்பாயில் கூறியதாக 12-10-80 'இந்து' பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டது.

இந்தச் செய்தியை மனதில் கொண்டு 'சோ'வின் 'துக்ளக்' ஆண்டு விழாவில் 'சோ'விடம் வாசகர் ஒருவர் கேள்வியொன்றைக்தொடுத்தார்.

ரஜீவ் காந்தி அரசியலுக்கு வருவார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?' என்பதுதான் கேள்வி

சோ பதிலளித்தார்:

''ரஜீவ் அரசியலுக்கு வரமாட்டார்'' என்று இந்திரா காந்தி சொல்வதால் ரஜீவ் பிரதமராக வருவார் என்று நான் நினைக்கிறேன்''

இந்தச் சங்கதி 'எச்சரிக்கை' என்ற தலைப்பில் 'துக்ளக் 15-5-81 முதல் பக்கத்தில் வெளியிடப்பட்டிருந்தது.

**ராணி** (யாழ்ப்பாணம்)
சிவாஜியின்
**நிச்சயதாம்பூலம்**
தினசரி 3 காட்சிகள்

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
கமலஹாசன், ஸ்ரீதேவி,
**தாயில்லாமல் நானில்லை**
(ஈஸ்ட்மன் கலர்)

**சாந்தி** (யாழ்நகர்)
10-30, 2-30
சிவகுமார்-சரிதா நடித்த
**வண்டிச்சக்கரம்**

**றீகல்** [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30 only
George C. Scott... ...
TAPS
இராணுவவீரர்களின் போர் முறையும், பயிற்சித் திறமையும் உங்களுக்கும் உதவும்.

**ராஜா** (யாழ். நகர்)
Daily 10-30, 2-30, 6-30
முத்துராமன்-கவிதா
அசோகன்-தேங்.சீனிவாசன்
**காற்றினிலே வரும் கீதம்**
(ஈஸ்மன் கலர்-புதிய பிரதி)

**ஹரன்** (யாழ். நகர்)
10-30, 2-30,
4-30, 6-30
இன்று மட்டும்
SONNY SHEEBA IN
BLOOD OF THE DRAGON
நாளைமுதல்
**தங்கச் சுரங்கம்**

**லிடோ** சினிமா
Daily 4 Shows
CONAN THE BARBARION

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30 4-45
Lee Marvin in
THE BIG RED ONE
(Adults Only)

**வின்ஸர்** (யாழ்)
10.30, 2 00, 4 30, 6.45
The B dy
(புத்தம் புதிய பிரதி)
வயதுவந்தவர்களுக்கு மட்டும்
பாலியல் கல்வியை வாலிபர் முதல் வயது வந்தோர் வரை படித்துணர வேண்டிய அவசியமான திரை ஓவியம். இதுவே கடைசிமுறையாக குறிப்பிட்ட நாட்களுக்கு மட்டும் காண்பிக்கப்படுகிறது.

**மனோகரா** (யாழ்நகர்)
முரளி-குயிலி-Y. விஜயா
கல்லாப் பெட்டி-சிங்காரம்
K. பாலச்சந்தரின்
**பூவிலங்கு**
தந்தையின் செல்வாக்கை பயன்படுத்தி ஒரு ஏழைப் பெண்ணின் சர்வகலாசாலை படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்தார். அவர் அந்த முற்கோபக்காரனை அவள் திருத்த முனைந்தாளா? மிகுதி வெண்திரையில்.


## நேற்று தியகோகார்சியா- இன்று பொடாம்தீவு!

# இந்துசமுத்திரத்தில்ஒருபுதிய அணுவாயுதத் தளம்!

## இரகசிய முயற்சிகள் அம்பலம்

(இலண்டனிலிருந்து ''உதய தாரகை'')

இந்து சமுத்திரத் தீவுகளில் தியகோ கார்ஸியாவை அடுத்து மற்றுமொரு தீவு பிரிட்டிஷ் - அமெரிக்க அணுவாயுதக்குதமாக மாறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. தியகோ கார்ஸியாவைஅடுத்துள்ள பொடாம் என்ற தீவில் டிராக்டர்கள், புல்டோஸர்கள் போன்ற இயந்திரங்கள் பெருவாரியாக இறக்கப்பட்டு அதை ஒரு பிரிட்டிஷ் கடற்படைத்தளமாக மாற்றுவதற்கு வேண்டிய நிர்மாண வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருவதாக இந்தியாவிலிருந்து வரும் செய்திகள் தெரிவிககின்றன.

பிரபல இந்திய பத்திரிகையாளரான குல்தீப் நாயர் ''சன்டே டிறிபியூன்'' பத்திரிகையில் வெளியிட்ட அதிர்ச்சியூட்டும் செய்திகள் பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள அமெரிக்காவும் பிரிட்டனும் அமைதிப்பிராந்தியமாக இதுவரை இருந்து வந்த இந்துசமுத்திரப் பகுதியை அணுவாயுதக் கெடுபிடிக்கு உட்பட்ட வலயமாக மாற்றி வரும் அக்கிரமத்தை அம்பலப் படுத்தியுள்ளன.

பொடாம் தீவு அணுவாயுதத்தள அபிவிருத்தியை மிகவும் இரகசியமான முறையில் பிரிட்டன் மேற்கொண்டு வந்ததாம் தற்போது முற்றுப்பெறும் நிலையிலுள்ள தள நிர்மாண வேலைகள் முடிந்ததும் இங்கிருந்து அமெரிக்க-பிரிட்டிஷ் போர்க் கப்பல்களும் அணுவாயுத நீர்மூழ்கிக்கப்பல்களும்செயற்படத் தொடங்குமாம்.

### பொடாப் தீவு

இந்தத்தள வேலைகள் பற்றி மொறீஷியஸ் தீவுகளின் அரசு மிகவும் கவலை கொண்டுள்ளது. மொறீஷியஸ் பிரதமர் அனிருத் ஜகுநாத் இது பற்றி குல்தீ நாயருக்கு கருத்துத் தெரிவிக்கையில், ''இந்த வேலைகள் நடைபெற்று வருவதைநாம் அறிவோம். ஆனல் எம்மால் என்னதான் செய்ய முடியும்?'' எனறு கேட்டுள்ளார்.

''இதனைப் பற்றி எமது உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் கூட கேட்டறிய-முற்படாது, அதனை ஒரு பொருட்டாகக்கணக்கெடாது அமெரிக்காவும் பிரிட்டனும் தாம் விரும்பியதைச் செய்து வருகின்றன'' என்று அவர் மேலும் கவலை தெரிவித்தார்.

### அனாதரவாக திரிகின்றனர்.

மொறீசியஸ் அரசிற்குச் சொந்தமான தியகோ கார்சியா தீவை பிரிட்டன் சுவீகரம் செய்தது மட்டுமல்லாது வழித் தேங்காயை எடுத்து தெருப் பிள்ளையாருக்கு உடைத்தது போல'' அமெரிக்காவுக்குத் தாரை வார்த்ததும், அமெரிக்கா அந்தத் தீவை இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அமைதிக்கு உலைவைக்கக்கூடிய அணுவாயுதத் தளமாக மாற்றியதும் மொறீஷியஸ் மக்களின் மனதில் ஆழமான வடுவாக இன்னும் உள்ளது இதன் விளைவாக தியகோ கார்சியா தீவில் வசித்துவந்த 1000 மொறீஷியஸ் பிரஜைகள் பலவந்தமாகக் குடியெழுப் பப்பட்டு இன்னும் தலைநகர்த் தீவான போர்ட் லூயிஸின் வீதிகளில் அனாதரவாகத் திரிவதும் இன்றும் காணக்கூடிய காட்சியென்று திருநாயர் வர்ணித்துள்ளார்.

தியகோ கார்சியா தீவில் இன்று அணுவாயுதங்களுடன் கூடிய அமெரிக்க பி-1 ரக குண்டு வீச்சு விமானங்கள் பெருவாரியாக நிறுவப்பட்டுள்ளனவாம். மேலும் விஸ்தாரமான விமான ஓடுபாதைகளும் துருப்புக்களுக்கு வதிவிடங்களும் நிறுவப்பட்டுள்ளனவாம். நாங்கள் இங்கே நிரந்தரமாகக் குடியிருக்கப் போகிறோம்'' என்று மொறீஷியஸ் மக்களுக்கு குத்திக்காட்டுமாற் போல் இச்செயல்கள் அமைந்துள்ளன. மொறீஷியஸ் மக்களும் அப்படியே நினைக்கிறார்கள் என்கிறார் குல்தீப் நாயர்.

### அங்கலாய்ப்பு

மொறீஷியஸின் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தமது நாட்டு மண்ணில் பிரிட்டனும் அமெரிக்காவும் நடத்தி வரும் ஆக்கிரமிப்பு வேலைகளைப்பற்றி மனம் புண்பட்டு இருந்தபோதிலும் ''எங்களால் இதைத் தடுக்க என்ன செய்ய முடியும்?'' என்று அங்கலாய்த்துக்கொள்கிறார்களாம்.

மொறீஷியஸ் தீவின் முதலாவது பிரதமரும் தற்போதைய மகாதேசதிபதியுமான சர்சீவத்சாகர் ராம் கூலம் அவர்கள் பிரிட்டனுக்கு மொறீஷியஸ் தீவை தாரை வார்த்துக் கொடுத்ததற்காக நிறைந்த பொருளாதார வெகுமதிகளை பெற்றார் என்ற வதந்தி நாட்டில் பலமாக அடிபடுவதையும் திரு நாயர் குறிப்பிட்டுள்ளார். இந்தத் தீவினை பிரிட்டிஷார் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டமை பற்றி சர் சிவுத்சாகர் ராம் கூலத்திடம் குலதீப் நாயர் வினவிய போது அந்தத் தீவை பிரிட்டனுக்கு கொடுத்திராவிட்டால் அவர்கள் மொறீஷியஸ் தீவுகளுக்கு சுதந்திரம் வழங்க மறுத்திருப்பார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

### பொய்சொல்லி ஏமாற்றினர்கள்

''தியகோ கார்சியாவில் ஒரு செய்தித் தொடர்பு நிலையம் மட்டும் நிறுவப்போவதாக பிரிட்டிஷார் எனக்குப் பொய் சொல்லி ஏமாற்றினார்கள்,'' என்றும் திரு. ராம்கூலம் விசனம் தெரிவித்துள்ளார்.

இந்தச் செய்திகள் இந்தியாவிலிருந்து இங்கிலாந்து வந்தடைந்ததும் இங்குள்ள ஆசிய மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் வார ஏடான ''ஏஷியன்டைம்ஸ்'' பிரிட்டிஷ் வெளிநாட்டு – காமன்வெல்த் விவகாரத் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு விசாரித்த போது, ''பொடாம் தீவா? அப்படி ஒரு தீவு மொறீஷியஸ் தீவுக்கூட்டத்தில் உண்டா? அங்கு அணுவாயுதத் தளம் அமைக்கப்பட்டு வருகிறதா? எமக்குத் தெரியாதே;'' என்ற பதில் வந்ததாம்!!

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள இந்தப் புதிய அணுவாயுத அச்சுறுத்தலைப் பற்றி இலண்டனிலுள்ள இந்திய, கிழக்கு ஐரோப்பிய - சோவியத்நாட்டு ராஜதந்திர வட்டாரங்களும் அதிருப்தி தெரிவித்துள்ளன.

### ஏன் ?

ஏன்?
இறைவன்
கருணை கொண்டவன்...
கடாட்சம் கொடுப்பவன்
என்று தினமும்
பூஜித்து...,
போற்றி...,
வழிபட்டு...!
ஓ...
தேவனே...!
உலக சமாதானத்துக்கு
ஒரு
இந்திர(ா)ப் புருவை
அனுப்பிவைத்த
தேவனே...!
நீயேதான்
துப்பாக்கியை தூக்கிய
வெறிமிகக் கொண்ட
வேடனையும்
அனுப்பினாய்...!
அது... ஏன்?

— கஜன்.

### உரும்பராய்...

14ம்பக்கத் தொடர்ச்சி)


சிறுபறைப்பருவம், சிறுதேர் பருவம் என்ற பத்துப்பருவங்களையும் கொண்ட சிதம்பர சுப்பிரமணியசுவாமி பிள்ளைத் தமிழ் முருகநாம பஜனைக்கு ஏற்றவிதமாக அமைத்திருப்பது வெகுசிறப்பாகும்.

● உரும்பராய் சிதம்பர சுப்பிரமணியசுவாமி பிள்ளைத்தமிழ் நூல் கடந்த மாதம் 2ம் திகதி வெளியிடப்பட்டது.


**றீகல் 'மினி'**
புதிய
தமிழ், ஆங்கில, ஹிந்தி
திரைப்படங்களுடன்,
ஆரம்ப நன்னாளை
விரைவில்
எதிர்பாருங்கள்.
650


## 63ம் நாள் நினைவஞ்சலி

ஜெகதீசன் (ஜெகன், நிசாம்)



பிறப்பெடுத் தெந்
தன் பெருமகனாயீண்டு,
சிறப்பெடுத் துந்தன்
செந்தமிழையாள,
திறப்பெடுத் தந்தத்
''தீரவுயிர்'' பூட்டி
இறப்பெடுத்
ததென்னை இனிய
ஜெகதீசா!

தாயாக என்ன ஆக்குந் தனிப்புதல்வன் நீயாகி,
சேயாக எனக்கென்றுஞ், சேர்ந்தொன்றுயிருக்க,
நாயாக உனைவந்து, நண்பகலிற் கொல்ல,
தீயாகத் துயரெழுமென், ஜெகதீசமைந்தா!

அன்புத்தாய்
திருமதி கே. நடராசா
697

## துணுக்காய் பகுதி ப. நோ. கூ சங்கம்.

**101 7 பொதுமுகாமையாளர் பதவி:**
ரூ 60 —40X10-1000

மேற்படி பதவிக்கு கீழே கொடுக்கப்பட்ட தராதரம்-தகைமை உள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கல்வித்தகைமை:**

(1) 3 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவமுள்ள கூட்டுறவு ஊழியர் 8வது சம்பளத்திட்டத்தில் உள்ள முகாமைத்துவ/மேற்பார்வை தர பதவியில் அல்லது 6 ஆண்டுகளுக்கு குறையாத கூட்டுறவு ஊழியர் 9ஆவது சம்பளப் பதவியில் இருந்தவர்

அல்லது

(2) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பட்டம் அல்லது அதற்குசமமான கல்வித்தகைமையும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழிற்றுறை ஸ்தாபனத்தால் வழங்கப்பட்டநிர்வாகத்துறை 2 வருட அனுபவசான்றிதழ்கள்.

அல்லது

(3) கூட்டுறவு ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ்/க. பொ. த (உயர்தரம்) சித்தி 3. பாடங்களும் வர்த்தகம்/தொழிற்துறை அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனத்தில் நிர்வாக மட்டத்தில் 4 ஆண்டுகட்கு குறையாத அனுபவம்.

வயது: 23 தொடக்கம் 50 வயது வரை
பிணை: ரொக்கம் 3 00/-
உறுதிப்பிணை: 5000/-
சம்பளம்: 600X1000
..................
40X10

விண்ணப்பங்கள் யாவும், தலைவர் துணுக்காய்ப் பகுதி ப. நோ. கூ. சங்கம் துணுக்காய் என்றமுகவரிக்குபதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக 30-11-84ம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தின் இடதுபக்க மேல் மூலையில் பொதுமுகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் என குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தலைவர்,
துணுக்காய் ப. நோ. கூ. சங்கம்.
துணுக்காய்.

663

# யாழ். நகர் சம்பவம்: உள்ளதை அறிந்தனர்!

[கா. யோகநாதன்]

யாழ்ப்பாணத்தில் நடந்த குண்டு வெடிப்பு, துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரி வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருப்பவர்களை யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் பார்வையிட்டார். தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கும் நேற்றுச் சென்று காயமடைந்தவரைப் பார்வையிட்டார்.

காயமடைந்தவர்களை மற்று யாழ். பிரஜைகள் குழுவினரும் யாழ். ஆஸ்பத்திரியில் சந்தித்தனர் உள்ளதை உள்ளபடி அறிந்துள்ளதாகப் பிரஜைகள் குழுவினர் தெரிவித்தனர்.

நேற்று யாழ். ஆஸ்பத்திரி 25ம் வார்ட்டிற்கு சென்ற போது அங்கு ஒரே சனக்கூட்டமாகக் காணப்பட்டது.

யாழ் கச்சேரியடியைச் சேர்ந்த எஸ். தியாகராஜாவிற்கு இடது தொடைமூட்டில் காயமேற்பட்டிருந்தது. இன்னும் குண்டு அகற்றப்படவில்லை.

சம்பவம் நடந்தபோது தான் மின்சார நிலையவீதியால் வந்து கொண்டிருந்ததாகவும் அப்போது குண்டுகள் வெடித்ததாகவும் பின்னர் துப்பாக்கிச் சூட்டுச்சத்தங்கள் கேட்டதாகவும், தனக்கும் காயம் ஏற்பட்டதாகவும் தியாகராசா கூறினார்.

**பஸ் சாரதி**

பஸ் சாரதி செல்லத்துரை (கொக்குவில்) கையிலும் தலையிலும் காயத்துடன் மற்றொரு கட்டிலிலில் படுத்திருந்தார். அவரை சுற்றி வ. போ. ச. ஊழியர்கள் காணப்பட்டனர். அவருக்கு தோள்களிலும் காயங்கள் காணப்பட்டது.

குண்டு வெடித்ததும், பஸ்ஸை எடுத்துகொண்டு வெளிக்கிட்டபோது பலர் ஏறினார்கள் என்றும், கஸ்தூரியார் வீதியில், வேறுபல வாகனங்கள் நெருக்கடியாக இருந்ததால், கே. கே. எஸ். வீதிவழியாக பஸ்ஸை செலுத்திசென்றதாகவும், முட்டாசுக்கடைச் சந்தியில் துப்பாக்கி பிரயோகம் செய்யப்பட்டதாகவும் சாரதி செல்லத்துரை கூறினார். முட்டாஸ் கடைச் சந்தியில் மானிப்பாய் வீதிக்குத் திரும்பும்போது, துப்பாக்கிச் சூடு வலதுகைவிரலில் பட்டதாகவும் கூறினார்.

அவரது வலதுகையில் 3 விரல்கள் துண்டிக்கப்பட்டு விட்டன. ஸ்ரேரிங்குக்கு ஒழே இருந்த இருவிரல்கள் மட்டும் பாதிக்கப்படவில்லை. தலையிலும், முதுகிலும் காயங்கள் காணப்பட்டன.

இதேவாட்டில் இந்த பஸ்ஸில் கண்டக்டராகச் சென்ற கொல்லங்கலட்டியை சேர்ந்த அழகரத்தினம் காயத்துடன் கிடந்தார். அவரால் பேச முடியவில்லை. சம்பவம் நடந்த போது இவர் சாரதிக்குப் பின்னல் நின்றுகொண்டிருந்தாராம்.

புன்னலைக் கட்டுவனைச் சேர்ந்த மற்றொரு சாரதி பி. கிருஷ்ணனும் காயத்துடன் காணப்பட்டார்.

காயமடைந்தவர்களில், ஆபத்தான நிலையில் இருப்பவர் 60 வயதான விஸ்வலிங்க ஐயராகும்.

ஆஸ்பத்திரியில் எக்ஸ்ரே யந்திரங்கள் மூன்றும் பழுதடைந்து விட்டதால் இவரின் தலையில் பாய்ந்த குண்டு எங்கிருக்கின்றதென்பதை அறிய எக்ஸ்றே படம் எடுக்கமுடியவில்லை என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

---

கச்சேரியடியில் [redacted]

## வெளியேறிய குடும்பங்கள் இன்னும் திரும்பவில்லை!

[யாழ்ப்பாணம்]

கச்சேரி நல்லூர் வீதியில் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தை தொடர்ந்து அப்பகுதியிலிருந்து வெளியேறிய சுமார் 100 குடும்பங்கள் இன்னும் திரும்பவில்லை.

இவ் வீதியிலுள்ள சென். பெனடிக் றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு நேற்று இரண்டு ஆசிரியர்களும் 25 மாணவர்களும் மட்டுமே வந்திருந்தனர். இப்பாடசாலையில், சுமார் 200 பிள்ளைகள் கல்விகற்கின்றனர். [க]

---

## திலொக்கின் பெற்றோர் இன்று வருகின்றனர்!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் துப்பாக்கி சூட்டுக்கு பலியான மானிப்பாய் சிறுவர் இல்லத்தை சேர்ந்த திலொக் (12 வயது) சடலம், யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பிலுள்ள இவரது பெற்றோர்கள் இன்று காலை வருவார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.

இவர் யாழ்ப்பாணத்தில் படித்துவந்ததாகவும், சம்பவ தினம் பாடசாலையிலிருந்து திரும்பும் போது துப்பாக்கி சூட்டுக்கு பலியாகியதாகவும் கூறப்படுகிறது.

சிறுவர் இல்லநிர்வாகி ஆஸ்பத்திரியுடன் தொடர்பு கொண்டு, பெற்றோர்கள் வர விருப்பதாக அறிவித்திருந்தார். (க)

---

## துப்பாக்கி இளைஞரின் கொள்ளை முயற்சி தோல்வி!

### வான் சாரதி முறியடித்தார்!!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் சிகரட் கம்பனி வானை வழிமறித்த துப்பாக்கி இளைஞர்கள் மூவர் கொள்ளையிட எடுத்தமுயற்சி வான் சாரதியின் திறமையினல் முறியடிக்கப்பட்டுள்ளது. கொள்ளையரிடமிருந்து தப்பிய வானை நோக்கி கொள்ளையர்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்தபோது வானின் முன்கண்ணடியும் பின்கண்ணடிகளும் வெடித்துச் சிதறின இவ்வானில் பயணம் செய்த சாரதியும் இருஊழியர்களும் எவ்வித காயங்களுமின்றி உயிர் தப்பினர்.

இச்சம்பவம் நேற்று மட்டக்களப்பு, கல்முனை பிரதான வீதியில் அம்பலாந்துறை சந்தி என்ற இடத்தில் நண்பகல் 11-30மணியளவில் நடைபெற்றது.

இச்சம்பவ விபரம் வருமாறு சம்பவதினம் சாரதி செபஸ்ரியானும் (வயது 55) விற்பனையாளர்களான அமீர், இருதயதாஸ் ஆகிய இம் மூவரும் வழமைபோல் களவாஞ்சிக்குடிப்பகுதியில் விற்பனையை முடித்து விற்பனைப்பணம் ரூபா 35,000 த்துடன் இவ்வழியே வந்த சமயத்தில் சைக்கிளில் வந்த மூன்று இளைஞர்கள் சைக்கிளை வீதியின் குறுக்கே போட்டு வானைமறித்தனர். வான் சாரதி தனது புத்திசாதுரியத்தால் பாதை ஓரத்தால்வானை நிறுத்தி பின்வேகமாக செலுத்தினர். கொள்ளையர்கள் வான் டயருக்கு வெடிவைத்தபோதிலும் அதனல் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை வானில் பயணம்செய்த இருதயதாஸிற்கு கண்ணடித் துண்டுகள் சிறுகாயத்தை ஏற்படுத்தியுள்ளது இதுவிடயமாகமட்டக்களப்பு பொலிசார்புலன்விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

---

## இன்று நடக்கும் இந்திரா அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி காளிகோவிலடி சனசமூக நிலையம் நடாத்தும் மறைந்த பாரதப்பிரதமர் இந்திரா காந்தியின் அஞ்சலிக் கூட்டம் இன்றுமாலை சனசமூக நிலைய மண்டபத்தில் திரு. செ. கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

---

## விவேகானந்த சபைப் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

விவேகானந்த சபையின் சமய பாடப் பரீட்சை இம் மாதம் இருபத்து ஐந்தாம் திகதி நடைபெறும்.

அகில இலங்கை ரீதியில் நடைபெறும் இப்பரீட்சைக்கு மூன்ரும் வகுப்புமுதல்பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாண மாணவிகள் தோற்றுவார்கள்.

---

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறவிருந்த இலங்கை அஞ்சல் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் இன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறமாட்டாது என சங்க பொதுச்செயலாளர் வி. எஸ். தங்கவேல் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நிலவும் தற்போதைய சூழ்நிலை கருதியே இக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

---

## செய்; அல்லது செத்து மடி இயக்கம்!

(டாக்கா)

பங்களாதேஷில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக 'செய் அல்லது செத்துமடி' என்ற இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

பங்களாதேஷ் எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து இந்த இயக்கத்தை ஆரம்பிக்கவுள்ளன

மக்களிடம் ஆட்சிப்பொறுப்பை ஒப்படைக்க ராணுவ ஆட்சியாளரிடம் எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன என்றும் எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ஜனதிபதியை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்குக்கடும் நடவடிக்கைகள் அவசியமாகின்றது. என்றும், அவர்கள் தாமாகவே அதிகாரத்தை விடமாட்டார்கள் என்றும் எதிர்க்கட்சி கூட்டணித் தலைவர் நேற்று நடந்த பொதுக் கூட்டமொன்றில் சொன்னர்.

எனவே பாராளுமன்றத் தேர்தலை நடத்தி மக்கள் ஆட்சியை நிலைநாட்ட ஜனதிபதியை நிர்ப்பந்திக்கப் பெரும் போராட்டமொன்றை நடத்தவேண்டும் என்றும், இதற்கே செய் அல்லது செத்து மடி என்ற இயக்கத்தை ஆரம்பிக்கப்போவதாகவும்இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

---

## சாரதி சடலம் ஒப்படைப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில்பலியானவ போ. ச சாரதி சரவணமுத்துவின் சடலம் நேற்றுக்காலை குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

நேற்றுக்காலைநடந்த பிரேத பரிசோதனையின் பின் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

மினி பஸ்கண்டக்டர் மனோகரனின் சடலம், நேற்றுமுன் தினம், யாழ் ஆஸ்பத்திரி பிரேத அறையிலிருந்து இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டுவிட்டது. [க]

---

## சூறாவளி

(1ம் பக்கத் தொடர்ச்சி

அடுத்த 24 மணி நேரத்திற்குள் மீனவர்களைக் கடலுக்குச் செல்ல வேண்டாமெனவும், அடர்ந்த பனை மரங்களும், ஓங்கிவளர்ந்த மரங்களுமுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகக் கவனமாக இருக்கும்படியும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மு. பஞ்சலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---

புன்னலைக்கட்டுவனில்

## மினி வான் விபத்தில் பெண் பலி!

[யாழ்ப்பாணம்]

புன்னலைக்கட்டுவனில் நேற்றுக் காலை நடந்த மினி வான் விபத்தில் பெண் ஒருவர் பலியானர். மற்றும் நால்வர் காயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்றினைவிலத்திச் செல்லும்போது இந்த விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

பலியானவர் சாவகச்சேரியைச் சேர்ந்த 50 வயதான எஸ். பாக்கியம் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

---

## ஆனைக்கோட்டையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யவற்றையும் இவர்கள் சோதனையிட்டதாகவும் தெரியவருகின்றது.

அப்போது அங்குநின்ற பூசகர் ஒருவரும் நுணுக்கமான விசாரணைக்குட்படுத்தப்பட்டாராம்.

மானிப்பாயின் மற்றும் சில பகுதிகளில் ராணுவத்தினர் சென்று சோதனை நடத்தியதாகத் தெரியவருகின்றது.

---

## வவனியாவில் லலித்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பாவி மக்கள் துன்புறுத்தப்படுகிறார்கள் என்ற பயங்கரவாதிகளின் குற்றச்சாட்டு சரியானதல்ல என்பதை இச்சம்பவம் தெளிவாக்குகிறது'' என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி வவனியாவில் கூறினர்.

வவனியாவில் முப்படைகளின் விசேட செயற்பாட்டுத் தலைமை அலுவலகத்தைத் திறந்துவைத்தபின்னர் நடந்த பொதுக் கூட்டத்தில் அமைச்சர் பேசகையிலேயே இப்படிக் கூறினர்.

---

## ஜப்பான் பிக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தது.

உண்ணவிரதம் பல தினங்கள் நீடிக்கும் என்றும் இரவில் எதிரில் உள்ள கட்டடத்தில் தங்கப்போவதாகவும் முன்னதாகக் கூறினர்.

யாழ்ப்பாணத்திற்கு சமாதானம் வேண்டும் என்றும், இங்கு அமைதி நிலவவேண்டும் என்றும் கூறினர்.

நேற்றுக்காலை யாழ்நகர் வந்த அவர் உடனடியாக உண்ணவிரதத்தை ஆரம்பித்தார்.

அவரைச் சுற்றி அப்பகுதி மக்கள் பலர் கூடி நின்றனர். நேற்றிரவு அவர் கொழும்பு திரும்பிவிட்டார்.

---

## முல்லைத்தீவு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டனர்

அடையாள அட்டை இல்லை என்ற காரணத்தால் நேற்று முன்தினம் கைதான300பேரும் விசாரணையின் பின்னர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து முல்லைத்தீவுப் பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது. [மா-க]

---

## இன்று நடக்கும் சமயப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். சைவ பரிபாலனசபையின் சமய பாடப் பரீட்சை இன்று நடைபெறுகிறது.

---

## மரண அறிவித்தல்

### புங்குடுதீவு திருமதி சிவயோகவல்லி வில்வரெத்தினம் (முத்தம்மா)

புங்குடுதீவு 3-ம் வட்டாரம் சிவயோகவல்லி காலமானர். இவர் காலஞ்சென்ற அதிபர் வில்வரெத்தினத்தின் அன்பு மனைவியும், சாவித்திரி தேவியின் அன்புத்தாயாரும், மொறகேன அரசினர் வைத்தியசாலை Dr. பாலசுப்பிரமணியத்தின் மாமியாரும், திருச்சி சீதாலட்சுமி இராமசாமி பல்கலைக்கழக மாணவி ஜானகி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவன் அருணன், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவி யசோதா ஆகியோரின் பேத்தியாரும், காலஞ்சென்ற முத்துக்குமாரு, காலஞ்சென்ற சபாரெத்தினம், காலஞ்சென்ற இரத்தினசிங்கம், சிவஞானவல்லி ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னரின் பூதவுடல் 12-11-84 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு 132, 2ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு வில்லூன்றி மயானத்தில் தகனம் செய்யப்படும். (699)

---

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu B 100236/81 Eelanadu P. O. Box 49. Telegram Tephone number 22389 - 24126.